நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்

සරිනිහර්

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி


இதழ் 192 மார்ச் 09 - மார்ச் 22, 2000 விலை ரூபா 10 . 00

## நோர்வே மத்தியஸ்தம்: வெளிக்கிளம்பும் எதிர்வினைகள்!





## படையினரை விடுவிக்க அரசு அக்கறை காட்டவில்லை!



## திருமலை: கடற் படை மூட்டிய தீ!



## ஒரு கவிதையும் வரிகளுக்கிடையில் காணாமல் போனவையும்

நன்றி - நூலகத்திட்டம்



## 'நோர்வேக்கு உரிமை இல்லையாம்!'

மிகவும் மோசமான நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது. இதுவரை வெளிநாட்டுத் தலையீடு இரகசியமாக நடைபெற்ற போதிலும், இம்முறை மிகவும் பயங்கரமான முறையில் வெளிப்படையாகத் தலையீடு இடம்பெறுகின்றதெனப் பூமி புத்திரக் கட்சித் தலைவர் ஹரிஸ்சந்திர விஜயதுங்க நோர்வேத் தலையீடு பற்றித் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் இவற்றை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையெனவும், நாட்டின் உள்ளகப் பிரச்சினையொன்றை அந்நாடே தீர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

இந்தப் பிரச்சினையில் நோர்வே தலையிடுவதன் காரணமாக, இப்பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டு ஐ. நாவின் சமாதானப் படை இலங்கைக்கு அழைத்து வரப்படும் ஆபத்து நிகழக்கூடும். இதனால், இலங்கையில் ஆயுதபாணிகளற்ற பூமி புத்திரர்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள். ஐக்கிய நாடுகள் சபைக்கு உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட உரிமை இல்லை. எமக்கு வெளிநாடொன்றின் தலையீடு தேவையில்லை. நோர்வேக்கு இப்பிரச்சினையில் தலையிட எந்தத் தார்மீக உரிமையும் இல்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எஸ்.பீ இன் புதல்வர்களின் திருவிளையாடல்!

சமுர்த்தி, இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் எஸ். பீ. திசாநாயக்க அவர்களின் புதல்வர்கள் இருவர் பயணம் செய்த பஜரோ வாகனத்தில் அகப்பட்டு, இறந்ததாகக் கூறப்படும் தந்தை, மற்றும் மகனது உறவினர்களுக்கு ரூபா 05 இலட்சம் வழங்கி, அவர்களைச் சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்க விடாதபடி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

தற்போது அவ் உறவினர்களுக்கு ரூபா 30,000 வழங்கப்பட்டுள்ளதாகவும், தெரிய வருகின்றது.

கடந்த 12ம் திகதி ஹவ்லொக் வீதியில் இடம் பெற்ற சம்பவத்தின் போது, சம்பந்தப்பட்ட இருவரும் தப்பியோடி விட்டதாகவும், வாகனத்தை ஓட்டிய சாரதியாக ஒருவர் பொலிசில் சரணடைந்த போதும், அமைச்சரின் புதல்வர்களில் ஒருவர் தான் வாகனத்தை ஓட்டிச் சென்றுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு இரகசிய முகாம்!

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இரகசிய முகாமொன்றினை நடாத்தவென, ஹொரணை, கும்புக்க பிரதேசத்தில் நடாத்தப்பட்டு வந்த ஊர் காவல் படை வீரர்களைப் பயிற்றுவிக்கும் முகாம், ஜனாதிபதியின் ஆணையின் பேரில் கலைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

கடந்த வாரம் இந்த முகாம் கலைக்கப்பட்டு, அம்முகாம் ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. முகாம் கலைக்கப்பட்டதற்கான காரணம் இது வரை தெரிவிக்கப்படவில்லை.

இலங்கையில்; வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த எல்லைக் கிராமங்களின் பாதுகாப்புக்கெனப் பெருமளவான ஊர்காவல் படையினர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், இவர்களது பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள், ஹொரணை பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த முகாமிலிருந்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து 40 கி. மீ. தூரத்தில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில், இம்முகாம் திடீரெனக் கலைக்கப்பட்டதன் பின்னணியில் மர்மம் ஏதேனும் இருக்கலாமெனப் பிரதேசவாசிகள் பீதியடைந்துள்ளனர்.

## மக்களை தணிக்கை பாதுகாக்குமாம்!

தற்போது வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தம் தொடர்பான செய்திகளைப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கும், மற்றும் ஏனைய ஊடகங்களில் வெளியிடுவதற்கும் தணிக்கை அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இச்செய்தித் தணிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பெண்கள் ஊடகக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுனிலா அபயசேகர உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தமை யாவருமறிந்த விடயம்.

இவ்விடயம் தொடர்பாகத் தகவல் பணிப்பாளர் "மக்களின் பாதுகாப்பு நலன் கருதியே போர்ச் செய்திகளுக்குத் தணிக்கையை அமுல்படுத்தினோம்" எனவும், அது மக்களின் அடிப்படை உரிமையை மீறுவதாக இருக்காது எனத் தெரிவித்திருப்பதும் தான் ஆச்சரியப்படக்கூடிய விடயங்களாக உள்ளன.

உண்மைகளை மூடிமறைப்பது எந்த வகையில் மக்களைப் பாதுகாக்கிறது என்பதும் கேள்வியே. தணிக்கை எவ்வூடங்களுக்கு அதாவது, தமிழ் ஊடகங்களுக்கா அல்லது சிங்கள ஊடகங்களுக்கா என்பது பற்றிய தெளிவின்மையும் தணிக்கை தொடர்பாக எழுந்துள்ளது. சம காலத்தில் நடந்த அம்பாறை, கோணகல சம்பவம் தொடர்பாகத் தணிக்கையின் பாரபட்ச நிலையே இத்தகைய கேள்விகள் எழக் காரணமாயின. அரசாங்கம் தனக்குப் பாதகமாக எது இருக்கிறதோ அவற்றையெல்லாம் தணிக்கைக்கு உட்படுத்தும் என்பது வெளிப்படையாகின்றது.

## பணம் தராவிட்டால் புலி!

பொதுமக்களிடம் கப்பம் பெற்றுவந்த திருகோணமலைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் சுசந்த அஜித்குமார என்பவரை மார்ச் 8ம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் மு. கோ. செல்லராசா உத்தரவிட்டுள்ளார்.

பணம் தராவிட்டால் புலியெனப் பிடித்துக் கொண்டு போய் விடுவேன் என்று பயமுறுத்தி இவர் தமிழ் இளைஞர்களிடம் கப்பம் பெற்று வந்திருக்கிறார். சல்லியைச் சேர்ந்த செல்லையா சாந்தன் என்பரிடம் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளையும் அதே இடத்தைச் சேர்ந்த கனகசூரியர் மனோகரன் என்பவரிடம் 3500 ரூபாப் பணத்தையும் பெற்றிருக்கிறார்..

இதேபோல் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரிடம் 11,000 ரூபாவும் திருகோணமலை பத்தாம் குறிச்சியைச் சேர்ந்த சிவபாலன் பிரபாகரன் என்பவரிடம் 5000/ ரூபாவும், அலஸ் தோட்டத்தைச் சேர்ந்த நடராசா கணேசிடம் 5000/- ரூபாயும் கப்பமாக வாங்கியிருக்கிறார்.

இதுவரை வெளியானவை இவ்வளவு. மேலும் பல வெளியாக இருக்கலாம்.

## பொ. ஐ. மு அளவு கோல்

மனிதர்களின் வாழ்க்கைத்தரம் ஒரு நாட்டில் எவ்வாறு முன்னேறியுள்ளது என்பதை அளவிடுவதற்கு பல்வேறுவிதமான அளவு கோல்கள் பயன்படுத்தப்படுவதுண்டு.

தனிநபர் தலா வருமான சுட்டெண் மூலம் பொருளியலாளர்கள் இதை அளவிடுவார்கள்.

ஜனாதிபதி பிரேமதாச ஆட்சிக்காலத்தின் போது தனது பிரசித்திபெற்ற பேச்சுகளெல்லாவற்றிலும் ஒரு புதிய அளவுகோலை அவர் குறிப்பிடுவதுண்டு.

'வெறுங்காலுடன் நடந்தவர்கள் செருப்புப் போடுவார்கள். செருப்புப் போட்டவர்கள் சப்பாத்துப் போடுவார்கள்' என்பது அவர் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை விளக்க பயன்படுத்தும் ஒரு கருத்தாக இருந்தது.

ஆனால், பொ.ஐ.மு. அரசாங்கத்தினரோ, ஒரு புதிய திடுக்கிடும் அளவு கோலை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது திட்டமிடல் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபிள்ளை அவர்கள் இந்தப் புதிய அளவு கோலை அறிமுகப்படுத்தியுள்ளார்.

'கசிப்பு குடித்தவர்கள் சாராயம் குடிப்பதும், சாராயம் குடித்தவர்கள் விஸ்கி குடிப்பதும் பொருளாதார வளர்ச்சி இல்லையா?' என்று தனது பேச்சின் போது அமைச்சர் கேட்டிருந்தார்.

ஆம், பொருளாதார வளர்ச்சியை, தனிநபர் வாழ்க்கைத் தர முன்னேற்றத்தை அளவிட அமைச்சர் அறிவித்த அளவு கோல் இதுதான்.

ஒவ்வொருவரும் தத்தமது அறிவு, அனுபவம், வாழும் சூழல் என்பவற்றை அடிப்படையாக வைத்து அளவு கோல்களை உருவாக்கிக் கொள்வதில் ஒன்றும் தப்பில்லை.

ஆனால், நமது 'பாராளுமன்ற அலுவல்கள்' அமைச்சரின் அனுபவ உலகம் பற்றி அறியும் போது அதிர்ச்சி அடையாமல் இருக்க முடியவில்லை.

இதையே பாதுகாப்பு அமைச்சர் சொன்னால் கத்தியால் வெட்டுப்பட்டவர்கள் ரி.56 ஆல் சுடுபடுகிறார்கள். துப்பாக்கியால் சுடுபட்டவர்கள், தனிப்பட்ட இராணுவக் குழுக்களை வைத்து சுடுபடுகிறார்கள். தேர்தல் மோதல், காணிச்சண்டை, சொத்துச் சண்டைகளில் எல்லாம் இயந்திரத் துப்பாக்கிகளும், குண்டுகளும் பயன்படுத்தப்படுகின்றன. இதெல்லாம் பொருளாதார வளர்ச்சி இல்லையா என்று கேட்டாலும் கேட்டிருப்பார்.

உண்மைதான்! எமது நாடு பொருளாதார ரீதியில் எவ்வளவு முன்னேறி உள்ளது என்பதற்கு வேறென்ன அடையாளம் தான் தேவை?

### நாம் நினைத்தால்!

நாங்கள் நினைத்தால் எதை வேண்டுமானாலும் செய்வோம்.

யுத்தத்தை நடாத்துவோம்.

சமாதானம் வேண்டும், அதை அடைய வேண்டும் என்பதற்காக யுத்தத்தை நடாத்துவோம்.

புலிகளை தடை செய்வோம், அவர்களுடன் பேசுவோரை பிடித்து கூண்டிலே போடுவோம்.

சமாதானத்திற்காக நாம் அரசியலமைப்பு திட்டம் ஒன்றை தயாரிப்போம். அதை நடைமுறைப்படுத்த முடிந்த எல்லா வழிகளிலும் செயற்படுவோம். எதிர்க்கட்சியினரை விலைக்கு வாங்குவது முதல் பாராளுமன்ற ஆயுட்காலத்தை நீடிப்பது வரை எதையும் செய்வோம்.

தேவைப்பட்டால் பாராளுமன்றத்தை இழுத்து மூடிவிட்டுச் செயற்படுவோம்.

இதை ஏதாவது நீதிமன்றங்கள் எதிர்க்குமானால் அவற்றுக்கும் சீல் வைப்போம்.

யாராவது நீதிபதிகள் எதிர்த்தால் அவர்களை வீட்டுக்கு அனுப்புவோம்.

ஆம், நாம் எதை வேண்டுமானாலுத் செய்வோம். ஜனநாயகம், மக்கள், சமாதானம் என்பவற்றின் பேரால் நாம் எதையும் செய்வோம்.

ஏனென்றால் நாம் பொ.ஐ.மு.வினர். ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் திரண்டுள்ள பொ.ஐ.மு.வினர்.

### ஒரு கடிதம்!

அன்புள்ள அம்மணி.

திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழா நடாத்தவும் அவ்விழாவில் கலந்து கொள்ளவும் அனுமதித்ததற்கு நன்றி.

அடியார்களை பாதுகாப்பாக மூடிய வாகனத்தில் அனுப்பி வைத்து, அவர்கள் போகும் போது அங்கு இராணுவத்தினரை இல்லாமல் செய்து பெரும் உதவி செய்துள்ளீர்கள்.

அடியார்கள் கைதிகள் போல இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டதாக விசனம் தெரிவிப்பவர்கள் பற்றி நீங்கள் அலட்டிக் கொள்ள வேண்டாம்.

புலிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கும் வரலாற்றுக் கடமையை மேற்கொண்டிருக்கும் உங்களுக்கு எம்மீதுள்ள சிரத்தையை இந்த நபர்கள் இப்படித்தான் விமர்ச்சிப்பார்கள்.

அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். உடைந்த கோவில்களை புனருத்தாரணம் செய்யப் போவதாக நீங்கள் அறிவித்திருப்பதெல்லாம் இவர்களுக்குத் தெரியாது. அல்லது தெரிந்தும் பாசாங்கு செய்கிறார்கள்.

நாம் பிறந்து வளர்ந்த எம்மூர்க் கோயிலுக்குப் போகவே உங்கள் படையினர் பாதுகாப்பு தருகிறன்றனர் என்கிற போது, உங்கள் கரிசனையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஆனாலும் ஒரு சின்னக் கேள்வி.

தெற்கு வீதிக்கு யாரையும் போக வேண்டாம் என்று கூறி கயிறு கட்டியிருந்தார்களாம். உங்கள் இராணுவத்தினர் நிச்சயமாக ஏதாவது நல்ல நோக்கத்துடன் தான் இதனை செய்திருப்பார்கள். அதை இவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அதை ஒருக்கால் ஏன் என்று சொல்லிவிடுங்கள். ஒருவேளை அந்தப் பக்கம் புலிகளின் வதை முகாம் இருக்கக்கூடுமோ?

உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# சல்லி: கடற்படை மூட்டிய தீ!

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். இலங்கைக் கடற்படையினரோ தீக்குச்சியை ஆயுதமாகப் பயன்படுத்தி மாபெரும் யுத்தமொன்றை திருகோணமலை சல்லியில் நடத்தி முடித்திருக்கிறார்கள்.

வேற்று நாட்டவர்களுடனோ அல்லது எதிரிகளுடனோ தான் வழக்கமாகப் படையினர் யுத்தம் புரிவார்கள். ஆனால், இலங்கையில் படையினர் நடத்தும் யுத்தம் ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிகளுக்கெதிரானது என்று சொல்லிக் கொண்டாலுங் கூட உண்மையில் அவர்களது வீரப்பிரதாபங்களில் பெரும் பகுதி சாதாரண தமிழ் மக்களுக்கெதிராகவே நடத்தப்படுகின்றன என்பது தான் உண்மை.

சல்லியிலும் இத்தகைய யுத்தமொன்றைத் தான் கடற்படைவீரர்கள் வெற்றிகரமாக நடத்தியுள்ளார்கள்.

சல்லி திருகோணமலையிலிருந்து வடபுறம் நோக்கி ஐந்து மைல் தூரத்தில் அமைந்துள்ள கடற்கரைக் கிராமம். இங்குள்ள மக்களின் பிரதான தொழில் மீன்பிடித்தல் தான். இங்கு படையினர் முகாமிட்டிருந்தாலும் கூட விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் தான் அதிகம். பகல் வேளைகளில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் இடம்பெறும். இரவில் படையினர் முகாம்களுக்குள் முடங்கி விட விடுதலைப் புலிகளின் ரோந்து நடவடிக்கைகள் தொடங்கி விடும்.

படையினரைவிட இங்குள்ள முகாமில் நாய்களின் எண்ணிக்கையே அதிகம். ஜீவகாருண்யம் காரணமாக இவர்கள் நாய் வளர்க்கிறார்கள் என்று பார்ப்பவர்கள் எண்ணக் கூடும். ஆனால், உண்மையில் இந்த நாய்கள் இரவில் படையினருக்குக் காவலாக இருக்கின்றன. யாராவது ஊடுருவ முனைந்தால் நாய்கள் குரைத்துக் காட்டிக் கொடுத்துவிடும் என்ற நம்பிக்கை படையினருக்கு.

விடுதலைப் புலிகள் வவுனியாவைக் கைப்பற்றப் போகிறார்கள் என்று அரசு அச்சமடைந்திருந்த வேளையில் திருகோணமலை வடபுலக் கிராமங்களில் கடமையிலிருந்த இராணுவத்தினர் வன்னிமுகாமுக்கு அழைக்கப்பட அந்த இடங்களில் கடற்படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டார்கள்.

கடற்படையினரோ இராணுவத்தைக் காட்டிலும் தாங்கள் பொல்லாதவர்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவும் வகையில் தங்கள் நடவடிக்கைகளை அமைத்துக் கொண்டார்கள். சோதனைச் சாவடிகளில் மிடுக்காக நடந்து கொண்டார்கள். மக்கள் தங்கள் முன்னால் பணிவுடன் நடந்துகொள்ளவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள்.

சல்லிக் கிராமத்தில் இவர்கள் அட்டகாசமாகவே நடந்து கொண்டார்கள். அடுக்குப்பாறை என்ற இடத்திலுள்ள முகாமிலிருந்து தங்களுக்கு தினமும் உணவு எடுத்து வரும் பொறுப்பை சல்லி மீனவர்களிடமே ஒப்படைத்திருந்தனர். வகையற்ற நிலையில் மீனவர்களும் தங்களுக்குள் முறைவைத்துக் கொண்டு ஒன்றரை மைல் தூரம் கடல்மார்க்கமாக தினமும் உணவு கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்கள். திருகோணமலையிலிருந்து தடைதாண்டி கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட வகையில் கொண்டு வரப்படும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணெயில் மீனவர்கள் இந்தப்பணியையும் செய்ததன் ஒரே காரணம் கடற்படையினரின் "பொல்லாத தன்மை" தங்களுக்கெதிராக வரக்கூடாது என்பதனால் தான்.

அன்று பெப்ரவரி 24 வியாழக்கிழமை நேரம் இரவு 9.30 அளவிருக்கும். கவிதா ஸ்டோர்ஸ் சந்தி என்ற இடத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இருந்திருக்கிறது. இதை அவதானித்த கடற்படையினர் அவர்களை நோக்கிச் சுட்டிருக்கிறார்கள். பதிலுக்கு அவர்களும் சுட்டார்கள். சென்றார்கள்.

விடுதலைப் புலிகள் சுட்டதில் ஆர்.ஏ.வசந்த புஷ்பகுமார கொல்லப்பட்டார். இவர் ஒரு சப்லெப்டினண்ட், பெரேரா, குணதிலக ஆகிய இருவர் காயமடைந்தனர். அப்போது கூட மீனவர்கள் கடற்படையினருக்கு உதவியிருக்கிறார்கள். காயமடைந்தவர்களைப் படகில் ஏற்றிக் கொண்டு 5 மைல் தூரமுள்ள திருகோணமலை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

ஆனால், கடற்படையினரோ தங்களுக்கு உதவியாக இருந்த - தாங்கள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி வாழ்ந்த - பொதுமக்கள் மீதே தங்கள் வீரத்தைக் காட்டியிருக்கிறார்கள்.

இரவு பூராகவும் வீடெரிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதில் பத்து வீடுகள், இரண்டு கடைகள், ஒரு வேன், பல மோட்டார் சைக்கிள்கள் என்பவை எரிக்கப்பட்டிருக்கின்றன.

மயில்வானம் நவரத்தினம் என்பவருக்குச் சொந்தமான கவிதா ஸ்டோர்ஸ் கடையும், வீடும் சிவபாத சுந்தரம் சுபாஷினுடைய வீடு, கடை, வேன் என்பவையும் ராசதுரை செகராசா, சரவணமுத்து பரஞ்சோதி, திருமதி மூர்த்தி சரோஜா, திருமதி பிரபாகரன் உதயவளம், முருகேசு ரவீந்திரன், மார்க்கண்டு வண்ணக்கிளி, செல்வவிநாயகம் சண்முகநாதன், இரத்தினம் ஜீவநாதன் ஆகியோரின் வீடுகளும் கடற்படையினரின் அடாவடித்தனத்தால் அழிக்கப்பட்டிருக்கின்றன.

இதனால் வெகுண்டெழுந்த சல்லி, சாம்பல்தீவு கிராம மக்கள் தமது கிராமத்திலிருந்து ஒரு மைல் தூரமுள்ள பிள்ளைகுளம் சந்தி என்ற இடத்துக்கு வந்து சனிக்கிழமை காலை பிரதான தெருவில் அமர்ந்து தங்களுக்கு நியாயம் வேண்டும் எனக்கோரி மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர்.

பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள், பிள்ளைகள் உட்பட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் மேற்கொண்ட இந்தப் போராட்டத்தினால் வடபுலக் கிராமங்களுக்கான போக்குவரத்துத் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பிள்ளைக்குளச் சந்தியில் காவலுக்கு நின்ற கடற்படையினர் மக்கள் வந்து பாதையில் அமர முற்பட்ட போது தடுக்க முயன்றனராயினும், மக்கள் திரண்டதால் பின் வாங்கினர்.

காலை 7 மணிக்குப் போராட்டம் ஆரம்பமானது. பகல் 11 மணியளவில் பிரேதசச் செயலர் வேலும்மயிலும் மற்றும் இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள் ஸ்தலத்துக்கு வந்து மக்களைச் சமாதானப்படுத்தி கலைந்து போகும்படி செய்தனர்.


பிற்பகல் இரண்டு மணியளவில் பொலிஸ் அதிபர் அலுவலகத்தில் பாதுகாப்புத்தரப்பு அதிகாரிகள், சல்லி இளைஞர்கள், அடங்கிய கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. சம்பந்தப்பட்ட கடற்படையினர் மேல் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது, பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பது ஆகிய விடயங்களில் இணக்கம் காணப்பட்டன.

சிறுகச் சிறுகச் சேர்த்த உடைமைகளை ஒரே இரவில் அக்கிரமக்காரர்களின் அடாவடித்தனத்துக்கு இரையாக்கிவிட்டு நடுத்தெருவுக்கு வந்துவிட்ட குடும்பங்களின் வேதனையை இந்த இணக்கப்பாடுகளால் தீர்த்து வைக்க முடியுமா?

படங்களும் கட்டுரையும் விவேகி



தீயில் கருகிய வான்



வீடும் கடையும் சாம்பலில்; நவரத்தினம் குடும்பம் நடுத்தெருவில்



தெருவை வழிமறித்து எதிர்ப்பில்...



படை பாதுகாப்பில்லை!

நன்றி - நூலகத்திட்டம்



# நோர்வே: பேச்சும் மூச்சும்!

இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்பு புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிந்த சூழ்நிலையில் பேச்சுவார்த்தையின் போது இருதரப்பும் நம்பகரமாக நடந்து கொள்ளவில்லை என்கிற குற்றச்சாட்டை பரஸ்பரம் சாட்டிக்கொண்டார்கள். குட்டையைக் குழப்பியது யார் என்பதை அறிய தொடர்பூடகங்கள் மாத்திரமல்ல, மனித உரிமைகள் அமைப்புகள், சர்வதேச சமூகம் என பல சக்திகளும் ஆவல் கொண்டார்கள். யுத்தமும் தொடங்கி விட்டிருந்தது. நம்பகமற்றவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை என இரு தரப்புமே கூறிக்கெண்டிருந்தார்கள். 1997 யூனில் சரிநிகர் விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் தலைவர்களை சந்தித்து நேர்காணல் எடுத்த போது அதில் விடுதலைப்புலிகள் இனி ஒரு பேச்சுவார்த்தை நடக்குமானால் இந்த இந்தநம்பகத்தன்மையை கண்காணிக்கக்கூடிய சர்வதேச மத்தியஸ்தத்துடன் தான் நடக்கும் என்றார்கள். அந்த சர்வதேச மத்தியத்துவம் யார் என்ற கேள்வியை சரிநகர் எழுப்பிய போது ஸ்கண்டினேவிய நாடுகள் இதற்குப் பொருத்தமானவை எனத் தாங்கள் நம்புவதாகவும், அரசும் விரும்பும் பட்சத்தில் இதனைச் செய்யலாம் என்றும் தெரிவித்திருந்தார்கள். இந்தக் கருத்தைப் பரவலாக புலிகள் கூறிவந்தார்கள். ஆனால் அரசு போர் என்றால் போர் என்று கொண்டு சமாதான யுத்தத்தை நடாத்த வெண்தாமரை இயக்கத்தை தொடக்கியது. பேச்சுவார்த்தையில் அந்நியரின் தலையீட்டை விரும்பவில்லை என்றது. தொடர்ச்சியாகவே இவ்வாறு கூறி வந்த அரசு சமீப காலம் வரை அதாவது வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஐ.நாவை உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடாமல் மலேரியா நுளம்புக்கு மருந்தடிப்பதுடன் நின்று கொள்ளும்படி கூறியது வரை இது தொடர்ந்து கொண்டிருந்தது.



திடீரென அரசுக்கு எங்கிருந்து வந்த ஞானோதயமோ கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நோர்வே பற்றிப் பேசத் தொடங்கினார். நோர்வே பற்றி ஏன் திடீரென பேசத் தொடங்கியிருக்கிறார் அம்மையார் என்பது குறித்து பலருக்கும் ஆச்சரியமும் சந்தேகமும் இருந்தாலும் அதனை வரவேற்பதில் உள்ள ஆர்வத்தில் அதனை மறந்து போனார்கள். விழிப்பாக இருந்தவர்கள் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் மட்டும் தான். அவர்கள் விட்டுக் கொடாத போராட்டத்திலும் தீவிர செயற்பாடுகளிலும் இறங்கி விட்டார்கள். நாடளாவ பிரச்சார நடவடிக்கைகள், கூட்டங்கள், ஊர்வலங்கள், துண்டுப்பிரசுர விநியோகம், போஸ்டர்கள், நூல்கள் வெளியீடு மட்டுமன்றி தலைமறைவு செயற்பாடுகளிலும் இறங்கிவிட்டிருக்கிறார்கள். சிங்கள வீரவிதானவின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து சரிநிகர் ஆரம்பத்திலிருந்து எச்சரிக்கை செய்து வந்திருக்கிறது.

### திடீர் ஞானத்தின் பின்னணி

இன்று பேச்சுவார்த்தை பற்றிய மாயை அரசினால் தோற்றுவிக்கப்பட்டு, அனைவரையும் நம்பச்செய்யப்பட்டு பரபரப்பாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. உண்மையில் சிங்களப் பேரினவாத அரசுக்கு, எதிர்க்கட்சிக்கு, நோர்வே நாட்டுக்கு அதன் பின்னணியில் உள்ள ஏகாதிபத்தியத்துக்கு என வெவ்வேறான, அவரவர் நலன்களே உள்ளன. மற்றும்படி அடக்கப்படும் மக்களில் திடீர் காதல் இவர்களுக்கு ஏற்ப்பட்டு விடவில்லை. சிங்கள அரசு அதிக நெருக்கடிக்கு முகம் கொடுத்துவரும் காலமிது.

ஜனவரி மாதம் இலங்கை வந்திருந்த உலக வங்கி அதிகாரிகள் இலங்கையின் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புக்கு அளிக்கப்படும் நிதிகள் யுத்தத்துக்கு செலவிடப்படுவதாக குற்றம் சாட்டியிருந்தனர். இனி போர் நிறுத்தப்படாமல் உதிவியில்லை என அறிவித்தனர். சர்வதேச நாணய நிதியமான ஐ.எம்.எப்.பும் இதே விதிகளை விதித்திருந்தது.

யுத்தத்தில் பாரிய இழப்பு, திறைசேரியில் நிதி நிலைமை மோசமாக இருப்பதாக மத்திய வங்கி தலைவர் சிங்களப் பத்திரிகைகளுக்கு பேட்டி வழங்கியிருந்தார். திறைசேரியில் பணம் இல்லாததால் வரலாற்றில் இதுவரை நடக்காத மூன்று மாத பட்ஜட் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கடன் வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜனவரியில் நடந்த போது இலங்கைக்கு கடன் வழங்குவதில்லை என அவை தெரிவித்தன. பெப்ரவரியில் மேலும் மூன்று மாதங்களுக்கு மாத்திரமே பட்ஜட் ஒதுக்கப்படக்கூடிய வாய்ப்பிருந்தது. ஒருவாறு பட்ஜட்டை நிறைவேற்றியது.

சர்வதேச சமூகமோ, இலங்கையின் பிரச்சினையைத் தீர்க்க வெளிநாட்டு மத்தியஸ்தம் அவசியம் என்று அறிவித்தது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் கடன்வழங்கும் நாடுகள் என்பனவற்றின் அழுத்தத்தின் பின்னணியில் அமெரிக்கா தொழிற்பட்டிருந்தது. உள்நாட்டில் பொருளாதார நெருக்கடி, தொடர்சியாக மக்களின் வெறுப்பை சம்பாதித்தது என பலதும் சேர்ந்து தான் இலங்கை அரசை நோர்வேயை நாடச் செய்தது. உலகில் நடக்கும் உள்நாட்டுப் பிரச்சினைகள் பலவற்றின் மீது அமெரிக்கா நோர்வேயின் மூலமாகவே மூக்கை நுழைத்து வருவது தெரிந்ததே.

### நோபல் நோர்வே

நோர்வே அரசாங்கம் உலகில் மோசமான உள்நாட்டுப் போர்களை முடிவுக்கு கொண்டுவர பாடுபட்ட நாடாகக் கொள்ளப்படுகிறது. இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினை, அயர்லாந்துப் பிரச்சினை, தென்னாப்பிரிக்கப் பிரச்சினை மற்றும் கடந்த ஆண்டு கௌத்தமாலாவில் போர்நிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளையும் முடிவுக்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளின் பின்னணியில் நோர்வேயின் பங்களிப்பு மகத்தானதாக கூறப்படுகிறது. நோர்வே "நோபல் பரிசு நோர்வே" என்றும் கூறப்படுகிறது. அயர்லாந்து பிரச்சினைத் தீர்வின் பின்னணியின் அது காட்டிய ஈடுபாட்டைக் கௌரவித்து 1998ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசு இரு நோர்வேஜியர்களான ஜோன் ஹியூம் மற்றும் டேவிட் டிரிம்பல் (John Hume and David Trimble) ஆகியோருக்கு கிடைத்தது.

ஆனால் நோர்வேயின் பங்களிப்புடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளின் போதும் அரைகுறைத் தீர்வே வழங்கப்பட்டதாகவும் அமெரிக்கா பின்னணியில் இருந்து கொண்டு போரிடும் தரப்பினரை சமரசத்துக்கு கொண்டு வந்து சரணடையச் செய்யும் பணியையே நோர்வே நிறைவேற்றி வந்திருப்பதாக குற்றச்சாட்டுக்கள் மேலெழுந்ததும் தான் வரலாறு.

இலங்கையின் உள்நாட்டு நெருக்கடி பல முதாளித்துவ நாடுளுக்கு தங்களின் சந்தையை இழக்கும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இன்னொரு புறத்தில் இச்சண்டையை வைத்தே தங்களின் போராயுதங்களை விற்பனை செய்து வருவதுடன், நிதிநிலைமையை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு மூலீடுகளின் போது அதிக விட்டுக் கொடுப்புகளை இலங்கையை செய்யச் செய்துள்ளது. பொ.ஐ.மு. அரசாங்கம் பதவிக்கு வந்த போது 48 வீத வெளிநாட்டு முதலீடும் 52 வீத அரச முதலீடும் இருந்த நிலை போய் இப்போது 53 வீத வெளிநாட்டு முதலீடும் 47வீத அரச முதலீடுமாக நிலைமை மாற்றமடைந்திருக்கிறது.

உலகவங்கிக்கு இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் ரூபா 43,000 கடன் என சமீபத்தில் ஜே.வி.பி. பேச்சாளர் விசித்த தெரிவித்திருந்தார். இலங்கையின் உல்லாசப் பிரயாணம் கடந்த வருட ஜனவரி மாதத்தோடு ஒப்பிடுகையில் இவ்வருடத்தில் 2.4 வீதத்தால் வீழ்ச்சியடைந்திருப்பதாக சபை தெரிவித்திருந்தது. வெளிநாட்டு முதலீடு 1வீதத்தால் குறைந்திருப்பதாக மத்திய வங்கியின் பிதம பொருளியலாளர் ஆர்.ஏ.ஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

22 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு கனரக ஆயுதங்கள், ஹெலிகப்டர்கள் என்பனவற்றை இலங்கைக்கு விற்பனை செய்துள்ளது. (அவ்வாயுதங்களை விற்பனை செய்த அமெரிக்க நிறுவனத்தின் இணைத்தளத்தின் விலாசம் http://www.esys.com/rsc/index.htm) மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படவேண்டுமானால் அமெரிக்காவின் காங்கிரசில் அனுமதி பெற வேண்டும். அமெரிக்கா கொள்கையளவில் இதற்கான அனுமதி வழங்கினால் தான் அது அனுமதிக்கப்படும். அமெரிக்கா 22 மில்லியன் டொலர்களுக்கு ஆயுதங்களை விற்க அனுமதித்ததன் மூலம் அது ஈழப் பிரச்சினை தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாடு தெட்டத் தெளிவு.

### நோர்வே அமெரிக்காவின் கருவி

உலகின் இரண்டாவது செல்வந்த நாடு. பிரதான வளம் எண்ணெய். 3,24,320 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இங்கு 44.5 லட்சம் மக்கள் தான் வாழ்கின்றனர். வருடத்தில் அரைவாசிக்காலம் பனியும், இருளும் மிகுந்தது. தாராள ஜனநாயக நாடாகக் கூறப்படுவது.



ஒப்பீட்டளவில் பெண்களின் உரிமை சட்டரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட நாடு.

பொருளாதார, அரசியல், சமூக, கலாசார ரீதியில் சுயாதீனத்தை விரும்பும் நாடு. எனவே தான் ஐரோப்பிய ஒன்றியத்திலும் இதுவரை தன்னை இணைத்துக் கொள்ளவில்லை. ஆனால் நோர்வே மக்கள் அமெரிக்கா பற்றிய பெரும் மதிப்பையும் கற்பனைகளையும் கொண்டிருப்பவர்கள். 17ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நோர்வேயில் ஏற்பட்ட பஞ்சத்தின் போது பல விவசாயிகளுக்கு அடைக்கலம் கொடுத்தது அமெரிக்கா. 1825-1945க்கும் இடைப்பட்ட 20 ஆண்டுகளில் மாத்திரம் அமெரிக்காவுக்குப் பஞ்சம் பிழைக்கச் சென்ற நோர்வேஜியர்களின் எண்ணிக்கை ஒன்பது லட்சம் பேர். நோர்வே நாடு அமெரிக்காவில் கொண்டுள்ள காதலின் பின்னிணியை அறியவென நோர்வே அரசின் உத்தியோகபூர்வ இணைத்தளமான http://odin.dep.no/ க்குச் சென்று பார்த்த போது அதில் வரலாற்றுத் திரிபுகள் இருப்பதை எனது நண்பர் சுட்டிக்காட்டவே நானும் அவரும் நோர்வே மத்திய நூலகத்துக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவருடன் சென்ற போது அங்கு உதவி செய்த நோர்வேஜியப் பெண்ணொருவர் தமது நாடு உலகில் சிறந்த மனிதநேயமிக்க நாடாக இருப்பதால் தான் இலங்கை போன்ற நாடுகள் தம்மை அணுகியதாகவும். இஸ்ரேலில் பிரச்சினையைத் தீர்த்தோம், தென்ஆப்பிரிக்காவில் தீர்த்தோம் என பெருமிதத்துடன் கூறினார். அந்த நூலகத்திலிருந்து நோர்வேஜியர்கள் அமொக்கா சென்ற கதை பற்றிய ஒரு விவரண வீடியோ கசட்டும், சில புத்தகங்களையும் எடுத்துக் கொண்டு வந்து பார்த்தோம். அதில் ஏகப்பட்ட தகவல்கள் இருந்தன.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் நாசிப்பிடையினரால் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த நோர்வேக்கு மார்சல் உதவியின் மூலம் நோர்வேயை மீள கட்டியெழுப்ப அமெரிக்கா நிறையவே உதவி வழங்கியிருந்தது. ஒரு புறம் நோர்வேஜியர்களுக்கு புகலிடம் அளித்தமைக்கு அமெரிக்காவுக்கு நன்றிக் கடன்பட்டதைப் போல, அமெரிக்காவின் விவசாயத்தையும், வளங்களையும் பன்படுத்தி வளர்த்தெடுத்ததால் அமெரிக்காவும் நன்றிக்கடன் பட்டிருக்கிறதாம். பலஸ்தீனர்களுக்கு எதிரான இஸ்ரேல் உளவுப் பிரிவினருக்கு குறிப்பிட்ட காலங்களில் நாட்டுக்குள் இடமளித்தது அமெரிக்காவின் கோரிக்கையினாலேயே. அதுபோல ஐரோப்பிய சோசலிச நாடுகளைக் கண்காணிக்கவும் அமெரிக்க உளவுச் சேவையான சீ.ஐ.ஏ.வுக்கும் பகிரங்கமாகவே இடமளித்திருக்கிறது. கெடுபிடி யுத்தகாலத்தில்



ரஷ்யாவைக் கண்காணிக்கவென நோர்வேயின் வட பகுதியில் அமைக்கப்பட்ட அமெரிக்க ராடார் கருவிகள் தற்போது பழுதடைந்திருப்பதாக நோர்வே தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்ட செய்தி இவற்றை ஊர்ஜிதம் செய்வனவாகவே இருக்கின்றன. தேசிய அளவிலான தொலைக்காட்சிச் சேவைகளிலும் கேபிள் தொலைகாட்சி சேவைகளிலும் பெருமளவான நிகழ்ச்சிகளை அமெரிக்க நிகழ்ச்சிகளே ஆக்கிரமித்துள்ளன. அமெரிக்காவில் நடக்கும் செய்திகள் அமெரிக்காவுக்கு அடுத்து நோர்வேக்கு அக்கறைக்குரிய செய்திகளாக இருக்கின்றன. அமெரிக்க நாகரிகத்தின் மீதான மோகத்தை நோர்வே மக்களிடம் பெருமளவு காணலாம்.

நோர்வேயில் அமெரிக்காவின் முதலீடு அதிகளவில் இருக்கிறது. மேலும் உலகச் சந்தையில் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்ற ஐரோப்பிய ஒன்றியத்தில் நோர்வேயை இணைய வேண்டாம் எனக் கூறியதும் அமெரிக்கா தான் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு அமெரிக்க - நோர்வே உறவு மிகவும் இறுக்கமானது. அமெரிக்காவின் ஆணையை தலைமேல் சுமந்து ஏற்று நடக்க நோர்வே எப்போதும் தயாராக இருக்கிறது. இவ்வாறு அமெரிக்கப் பின்னணியுடனான நோர்வே தலையீட்டைத் தான் இப்போது நாங்கள் எதிர்கொள்ளப் போகிறோம்.

### பேச்சுவார்த்தையில் அமெரிக்க பின்னணி

அமெரிக்காவைப் பொறுத்தவரை இலங்கையில் காலூன்ற அது ஆரம்பத்திலிருந்து அக்கறை காட்டி வருகிறது. இந்திய உபகண்டத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்த அமெரிக்கா நீண்டகாலமாகவே பிரயத்தனம் செய்து கொண்டு வருகிறது. கெடுபிடி யுத்தகாலத்தில் ரஸ்ய சார்பு வெளியுறவுக் கொள்கையைக் கடைபிடித்த இந்தியாவை அச்சுறுத்தவென அதன் அயல்நாடுகளில் தமது ஆதிக்கத்தை நிறுவ அமெரிக்கா அக்கறை காட்டியது நாமறிந்ததே. இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானை தனது கைக்குள் போட்டுக் கொண்ட போதும் இலங்கையைப் பூரணமாகக் கொண்டுவரக் கிடைக்கவில்லை. திருகோணமலைத் துறைமுகத்தின் ஒரு பகுதியை குத்தகைக்குக் கேட்டபோதும் இலங்கை மறுத்து வந்தது.

அப்பகுதியில் தமது வொய்ஸ் ஒப் அமெரிக்கா ஒலிபரப்பு நிலையத்தினை அமைக்க முயன்றது அதுவும் முடியவில்லை. இவ்வாறான நிலையில் இந்தியா இலங்கைப் பிரச்சினையில் தலையிட்டு அமெரிக்காவை நுழையாத வண்ணம் தன்னை நோக்கித் திருப்ப இலங்கைப் பிரச்சினையை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டது. ஒரு புறம் ஈழப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவது போலக் காட்டிக் கொண்டு மறுபுறத்தில் அதனைப் பயன்படுத்தி இலங்கையை தமக்கு அடிபணியச் செய்தது. தற்போது உள்நாட்டுப் பிரச்சினையில் நோர்வே தலையிடுவதன் பின்னணியில் அமெரிக்கா செயல்படுவதை இனங்கண்டு கொண்ட இந்தியா மீண்டும் இலங்கையுடன் அது குறித்து ராஜதந்திர பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு வந்தால் அதுவே தமக்குப் போதும் என்று இந்தியா

நன்றி - நூலகத்திட்டம்



சமீபத்தில் கூறியதை இலங்கை தூதுவர் "The Indian statement is a big help," எனக் கூறியிருந்தார். கிளின்டனின் அமெரிக்க விஜயமும், ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் தாம் தலையிடப் போவதாக அமெரிக்கா அறிவித்திருந்ததும் இந்தத் தருணத்தில் கவனத்திற்கொள்ளத்தக்கது.

### சிங்கள சக்திகளின் நலன்

பொ.ஐ.மு அரசாங்கத்திற்கோ எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் வெற்றிபெறுவதானால் ஒருபுறத்தில் பெரும்பான்மை வாக்குவங்கியைக் கைப்பற்ற வேண்டும். பேரினவாதத்தை திருப்திபடுத்த யுத்தத்திற்கு அதிக நிதியொதுக்கீடு. தமிழ் மக்களைத் திருப்தி படுத்த பேச்சுவார்த்தை இழுத்தடிப்பு, அரசியலமைப்பு சீர்திருத்த கண்ணாமூச்சு.

மேலும் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் தான் தமது முதலீடுகளைச் செய்வதாகவும், அவ்வாறு செய்வதாக உறுதியளிக்கும் கட்சிகளுக்கே தமது ஆதரவை வழங்குவதாகவும் முதலீட்டாளர்கள் அறிவித்திருந்ததை ஆங்கிலப் பத்திரிகைகள் சுட்டிக் காட்டியிருந்தன. (ஐக்கிய தேசியக் கட்சி தீர்வில் அக்கறை கொண்டதாகக் காட்டி வருவதும் இதன் பின்னணியில் தான்.) ஓகஸ்ட் மாத தேர்தல் வரை இத்தனை சக்திகளையும் திருப்திகொள்ளச் செய்வதென்றால் அதற்கான காய்நகர்த்தல்கள் இவ்வாறு தான் அமைய முடியும். அதன்படி அவரவர் அவரவர் நலன்களிலிருந்து கொண்டு நோர்வே மத்தியஸ்தத்தை பயன்படுத்துகையில் தமிழ் தரப்பைப் பொறுத்தவரை மிகுந்த எச்சரிக்கையுடனும், பழியேற்படாத வகையிலும் மாறாக உண்மை நிலையை அம்பலப்படுத்தும் வகையிலும், நடந்து கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

### நோர்வே இலங்கை உறவு

நோர்வே இலங்கைத் தொடர்பைப் பற்றிக் கூறுவதானால், 1996ஆம் ஆண்டில் நோர்வே அரசாங்கம் வெளியிட்ட ஒரு பத்திரிகை அறிக்கையில் 'அதற்கு முன்னரான 20 ஆண்டுகளாக இலங்கைக்குத் தாம் உதவி வழங்கி வருவதாகவும், தாம் உதவி வழங்கும் முதல் 12 நாடுகளில் இலங்கையும் ஒன்று என்றும் அது கூறுகிறது. 1996ஆம் ஆண்டு மாத்திரம் 188 மில்லியன் குரோனர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. (1996இல் ஒரு குரோனர் 7-8 ரூபா இருந்தது) இந்த ஆண்டு தான் பாரிசில் நடந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வைத்து இலங்கையில் பிரச்சினையைத் தீர்க்கும் படியும் தாம் மத்தியஸ்தத்துக்கு தயாரென்றும் நோர்வே கூறியிருந்தது. அதே காலத்தில் இலங்கை மறுத்துமிருந்தது. இது தவிர இலங்கையில் உள்ள பெருமளவான அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உதவி புரியும் நாடாக நோர்வே இருக்கிறது.

நோர்வேயில் மொத்தம் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் வசிக்கிறார்கள். ஏறத்தாழ 200 சிங்களவர்கள் வசிப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நோர்வே வெளியுறவு அமைச்சின் செயலாளர் வெக்கர் ஸ்ட்ரோமன் (Wegger Stroemmen) கடந்த டிசம்பர் மாத இறுதியில் தாம் இலங்கை அரசுக்கும் போராளிகளுக்குமிடைலான பேச்சுவார்த்தைக்கு முயற்சித்து வருவதாக தெரிவித்ததுடன் அதற்கான ஆயத்தங்கள் நடக்கின்றன என்றும் 1993இல் இஸ்ரேல் பலஸ்தீனப் பிரச்சினையில் காட்டிய அணுகுமுறையிலேயே இதனை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். இச் செய்தியை ஏ.பி. செய்தி ஸ்தாபனமும் (30-12-99) உறுதி செய்திருந்தது.

ஜனவரி 16ஆம் திகதி வெளியுறவு அமைச்சர் நோத் வொல்லபேக் (55 வயதைக் கொண்ட நோத் வெல்லபேக் அரசியல் விஞ்ஞானம், பொருளாதாரம் படித்துவிட்டு சர்வதேச விவகாரத்துறையில் நுழைந்தவர்.

1973இலிருந்து வெளியுறவு அமைச்சில் பணிபுரிந்து வந்தவர். சில நாடுகளில் தூதுவராகவும் கடமையாற்றியவர். ) இரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வர ஏற்பாடாகியிருந்த போதும் லக்ஸ்மன் கதிர்காமர் நாட்டில் இல்லாததால் அது ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்னர் சரியாக ஒரு மாதத்தில் பெப்ரவரி 12ஆம் திகதி தனது பிறந்த தினத்தை முடித்துக் கொண்டு 16ஆம் திகதி இலங்கைக்கான ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு, ஜனாதிபதி சந்திரிகா எதிர்கட்சித் தலைவர் ரணில், வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் ஆகியோரை சந்தித்தார். இலங்கை வருவதற்கு முன்னர் புலிகளின் தரப்பிலிருந்து அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்து விட்டே இலங்கை வந்திருந்தார். அன்டன் பாலசிங்கம் நோர்வேக்கு இரகசியமாக சென்று திரும்பியுமிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இலங்கையின் முதல் தூதரகம்

நோர்வே மத்தியஸ்தத்துக்கான ஆயத்தங்கள் இரகசியமாக நடந்து கொண்டிருந்த போது இது குறித்த வேலைகளை மேற்கொள்ள முறையான தூதராலயம் இருக்கவில்லை. கடந்த டிசம்பர் மாதம் இலங்கைக்கான தூதராலயம் நோர்வேயில் திறக்கப்பட்டதும் இந்தப் பின்னணியின் அடிப்படையில் தான். இத்தூதரகம் நோர்வேயில் நிறுவப்பட்டமையானது அதன் உளவுச்சேவையைக் கருத்திற் கொண்டே என்கிற ஒரு கருத்து பலமாக நிலவுகிறது. இதற்கு முன்னர் இலங்கைக்கான அலுவல்கள் அத்தனையையும் கவனித்து வந்தது சுவீடனிலுள்ள இலங்கைக்கான தூதுவராலயமே.

### நோர்வே அரசு கவிழுமா

இதற்கிடையில் நோர்வே அரசாங்கம் அடுத்த வாரம் கவிழக்கூடிய சாத்தியம் இருப்பதாக இங்குள்ள தொடர்பூடகங்கள் தொலைக்காட்சிச் சேவைகள் அரசியல் வல்லுனர்கள் என்போர் கருத்து தெரிவிக்கின்றனர். தற்போதைய கூட்டரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளின் விளைவாக இது ஏற்பட்டாலும் நோர்வேயின் தலையீட்டில் பெரிய மாற்றமெதுவும் இருக்க வாய்பில்லை. ஏனெனில் இது நோர்வேக்கு ஒரு கௌரவப் பிரச்சினை. தான் முன்னெடுத்து வைத்த காலை பின் வைக்காது. அமெரிக்காவும் விடாது. இது தற்போதைய நோர்வே **அரசாங்கத்தின்** நடவடிக்கை அல்ல. நோர்வே **அரசின்** நடவடிக்கை.

### சந்தேகிக்கும் உரிமை எமக்குரியது

தம்மீது திணிக்கப்பட்ட போரைத் தமிழ் மக்கள் வெறுக்கின்றார்கள் தான். அதிலிருந்து விடுதலைபெற்று சுதந்திரக்காற்றை சுவாசிக்க விரும்பாதவர் யார் இருக்கிறார்கள். ஆனால் அது தற்போதைய நடவடிக்கை நேர்மையானது தானா? உண்மையானது தானா? எனத் தமிழ் மக்கள் சந்தேகிக்கும் உரிமையை வரலாறு வழங்கியுள்ளது. அந்த சந்தேகத்தை அகற்றும் பொறுப்பு சிங்கள தேசத்தைச் சார்ந்தது. சிங்களத் தேசம் ஏனைய ஆதிக்க சக்திகளிடமும் ஆதிக்க சித்தாந்தத்திடமும் அகப்பட்டிருக்கும் வரை, அவற்றின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரை அது நடக்காது.

நோர்வே இதுவரை காணாத பிரச்சினையை இப்போது சந்திக்கப் போகிறது. ஆக மொத்தத்தில் தமிழ் மக்கள் தங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை மற்றவரிடம் வழங்காமலிருப்பது அடிப்படை நிபந்தனையாகியுள்ளது.

**என்சரவணன்**

# கொலைப் பட்டியலில் இன்னும் உள்ளவர்கள் யார்?

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் இயக்குநராக இருக்கும் உதவிப் பொலிஸ் அதிபர் நிஹால் கருணா ரத்னாவுடனான நேர்காணல் 'சண்டே ஒப்சேவர்' சண்டே லீடர் ஆகிய இருபத்திரிகைகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. முதலாவது பத்திரிகை அரச தரப்பினரின் குரலை முன்வைப்பது. ஆகவே அதில் காணப்பட்ட நேர்காணலில் நிஹால் கருணாரத்னாவை காப்பாற்றும் நோக்குத் தெரிகிறது. இரண்டாவது பத்திரிகை இதற்கு மாறுபட்ட கருத்துடையது. அதனால் அதன் கேள்விகள் நிஹால் கருணாரத்னாவை திணற வைத்துள்ளன. சண்டே ஒப்சேவரில் கேட்கப்படாத சில வித்தியாசமான கேள்விகள் சண்டே லீடரில் கேட்கப்பட்டிருந்தன. அக்கேள்விகளும் அதற்கான நிஹால் கருணா ரத்னாவின் பதில்களும் இங்கே சுருக்கமாகத் தரப்படுகின்றன)

✔ **கசினோ கிளப் உரிமையாளரான ஜோசப் பொன்சேகாவினால் தான் நீங்கள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் 1994க்கு முன்னர் சேர்க்கப்பட்டீர்களா?**

இல்லை. நான் சந்திரிகா அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் இருந்தே அதில் இருக்கிறேன்.

✔ **உங்கள் சம்பளம் ஜோசப் பொன்சேகா—வினால் தான் கொடுக்கப்படுகிறது என்பது உண்மையா?**

யார் அப்படிச் சொன்னது?

✔ **எங்களுக்கு கிடைத்த தகவல் சொல்கிறது.**


நீங்கள் சொல்வது பிழை. நான் கசினோ வியாபாரத்தில் இருப்பவர்களை வெறுக்கிறேன்.

✔ **ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் தான் ஐ.தே.க நடத்திய ஊர்வலத்தின் போது ஊடகவிளலாளர் பலரைத் தாக்கினர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். ஏன் அதைச் செய்தீர்கள்?**

அது பற்றி நான் பேச விரும்பவில்லை.

✔ **ஏன்?**

அது பற்றி விசாரணை ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அதனால்.



நிஹால் கருணா ரத்னா

✔ **ஏன் நீங்கள் பாதாள உலகத்தவரைக் காப்பாற்ற முயற்சிக்கிறீர்கள்?**

இல்லை. நான் அப்படிச் செய்யவில்லை. எனக்கு அவர்களைப் பற்றித் தெரியாது.

✔ **நீங்கள் நீதியானவை நடைமுறைப் படுத்தப் படுவதற்கு எதிராக நிற்கிறீர்கள். ஏன் உங்களைக் கைது செய்து விசாரிக்கக் கூடாது?**

நான் கைது செய்து விசாரிக்கப்படுவதற்குரிய எதையும் செய்யவில்லை.

✔ **"சட்டன" ஆசிரியர் றோகண குமார கொல்லப்பட்டதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் குற்றவாளியாகக் காணப்படுகின்றனர்.**

அதில் உண்மை இல்லை.

✔ **எதிர்வரும் கிரிக்கெட் சபைத் தேர்தலில் ஜனாதிபதிப் பாதுகாப்பு பிரிவினர் எதாவது நடவடிக்கை எடுக்க உள்ளனரா?**

அது ஒரு சுதந்திரமான அமைப்பு.

✔ **ஆனால், போனமுறை தேர்தலின் போது நீரும் உமது உத்தியோகத்தர்களும் அங்கிருந்தீர்களே? அதனால் பல அசிங்கமான விளைவுகள் ஏற்பட்டனவே?**

அங்கு நான் பாதுகாப்பு கொடுக்க சென்றிருந்தேன்.

✔ **யாருக்கு?**

கிளிபோர்ட் ரத்வத்தைக்கு

✔ **நீர் ஜனாதிபதி குமாரதுங்காவுக்குத் தான் பாதுகாப்பு அளிக்க வேலைக்கமர்த்தப்பட்டுள்ளீர். அவருடைய மாமன் கிளிபோர்ட்டுக்கு அல்ல.**

இல்லை சட்டப்படி ஜனாதிபதியின் உறவினருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும்.

✔ **மீண்டும் இதைச் செய்யப் போகிறீரா?**

இல்லை, இல்லை, நாங்கள் அதில் இருந்து விடுபட்டுள்ளோம்.

✔ **ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் தாக்குதல் பட்டியலில் குமார் பொன்னம்பலம் உட்பட இன்னும் பல வர்த்தகர்களின் பேர்களும் உள்ளனவாமே?**

தாக்குதல் பட்டியல்? அது என்ன?

✔ **அதாவது கொலை செய்யப்பட வேண்டியவர்கள்?**

நான் அப்படியானவற்றை செய்வதில்லை.

✔ **அப்படியானால் உமது பட்டியல் எந்தகையது?**

எந்தப் பட்டியலும் இல்லை.

✔ **நீர் சில வர்த்தகர்களிடமிருந்து பணமும் அன்பளிப்புகளும் பெறுவதாகச் சொன்னால், அதை உண்மையென ஏற்றுக் கொள்ளலாமா?**

என்ன உதவிகள்?

✔ **உமக்குத் தெரியுந் தானே என்ன வித உதவிகள் என்று?**

இல்லை, நான் அப்படி உதவிகள் செய்வதும் இல்லை. நன்கொடைகளோ பணமோ பெறுவதும் இல்லை.

### பெரும்பாலான வைத்தியசாலைகளில்

# உயிர் காக்க மருந்தில்லை!

சாதாரணமாக இலங்கை மருத்துவமனைகளில் 900 மருந்து வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் 20. இவற்றில் உயிரை காப்பாற்றும் மருந்து வகைகளாக 7,8 வகைகள் உள்ளன. இம் மருந்து வகைகள் யாவும் மருத்துவமனை ஒன்றில் இருப்பது அவசியம் என்பதனை மருத்துவர்கள் ஏற்றுள்ளனர். எனினும், நாட்டில் பலதரப்பட்ட பிரதேசங்களில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படிஉயிரைப் பாதுகாக்கும் மருந்து (Life Saving Drugs) வகைகளில் பெருமளவு தட்டுப்பாடு அரச வைத்திய சாலைகளில் இருப்பதாகத் தெரியவருகின்றது.

மருந்துகள், மருந்து வகைகள் தொடர்பாக தகவலறிந்த வட்டாரங்களின் கருத்துப்படி இம்முக்கியமான உயிர் காக்கும் மருந்துகளில் இருக்கும் இராசாயனப் பொருள் சோடியம் பை காபனேற் ஆகும். ஒரு சந்தர்ப்பத்தில் அரச வைத்தியசாலையொன்றில் நோயாளிக்கு சிகிச்சை அளிக்க தமக்கு சோடியம் பை காபனேற் மாத்திரையொன்றை தேடிக் கொள்ள இயலாமல் போனதென மருத்துவர் ஒருவர் கருத்து தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக ஒரு மருத்துவரை தொடர்பு கொண்ட போது, அவர் இவ் உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் மிகவும் விலை குறைந்தவை என்றார்.

Lasix ரூபா 20.00, Hydrocortisone ரூபா 25.00, Adrenaline ரூபா 20.00. மற்றும் மேலதிக ஆய்வுகளின் போது உலகத்தில் மிகவும் பரந்தளவிலானதும், குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதுமான 'பென்சிலின்' கூட இல்லாத வைத்தியசாலைகள் இலங்கையில் உள்ளன எனத் தெரியவருகின்றது.

இலங்கை அரச மருத்துவமனைகளில் மருந்துக் குறைபாட்டை தெளிவுறுத்தும் மிகச் சரியான உதாரணமாக, 25 % மற்றும் 50 % மாக காணப்படும் Dextrose குறைபாட்டை குறிப்பிடலாம். சாதாரணமாக மயக்கமுற்ற நோயாளியை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றவுடன் வழங்கப்படும் அவசர சிகிச்சை மருந்தான இம்மருந்து பற்றி ஒரு வைத்தியர் பின்வருமாறு கருத்து தெரிவித்திருந்தார்.

"மயக்கமுற்ற ஒரு நோயாளியை கொண்டு வந்தவுடன் முதலில் வழங்கப்படும் சிகிச்சை தான் Dextrose தடுப்பு மருந்து. சேலைனில் இந்த Dextrose கலக்கப்படுகின்றது. இது சில நிமிடங்களுக்கு, உயிரைக் காக்க பயன்படுத்தப்படும் சிகிச்சை முறையாகும். சுருக்கமாக கூறினால், நீரிழிவு நோயாளி சீனி அதிகரித்து, மயக்கமுற்று வரும் பொழுதோ அல்லது சீனியின் அளவு குறைந்து இந்நிலை ஏற்பட்டாலோ மருத்துவர் இம்மருந்தை பாவிக்கலாம். அந்தளவுக்கு Dextrose மிகவும் அத்தியாவசியமானதொரு மருந்தாகும். இம் மருந்து ரூ. 7.00, 7.50 விலையுடையதாகும்" என்றார் அவ் வைத்தியர்.

மருந்து வகைகள் மட்டுமன்றி அரச மருத்துவமனைகளில் மருத்துவப் பொருட்களுக்கான குறைபாடு அதிகம் காணப்படுவதாக தெரியவருகின்றது. "கெனியுலா" எனப்படும் தடுப்பு மருந்து பாவிக்கப்படும் போது பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு குறைபாடு நிலவுகின்றது. "சில வேளைகளில் நாம் "கெனியுலா" 300 வேண்டுமென்றால், எமக்கு கொழும்பிலிருந்து 30 மட்டுமே அனுப்பப்ப்டும்" என்கின்றனர் மருத்துவமனையைச் சேர்ந்தோர்.

அரச மருத்துவமனைகளில் நிலவும் இக்குறைபாடுகள் தொடர்பாக கடந்த பெப்ரவரி 8ம் திகதி பாராளுமன்றத்தில் இரத்தினபுரி மாவட்ட பா.உ. வாசுதேவ நாணயக்கார அவர்கள் சுகாதார அமைச்சர் நிமல்சிறிபால டி சில்வாவிடம் வினவிய பொழுது, இத் துறையில் தாம் முகங் கொடுக்கும் நெருக்கடிகள் பற்றியும், அரசாங்கம் இதுவரையில் சுகாதாரத் துறை தொடர்பாக மேற்கொண்ட செலவுகள் பற்றியும் விளக்கமளித்தார். எனினும், வாசுதேவ அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் சுகாதாரத்துறைக்கென அரசு மேற்கொள்ளும் செலவீடுகளை சதவீதத்தில் தெரிவிக்க மறுத்து விட்டார்.

இதுபற்றி விவாதிக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சர் தமது பதில்களைக் கொண்டு சதவிகித்தை அனுமானித்துக் கொள்ளுங்கள் என்றார்.

இந்நிலைமையின்படி சிற்சில மருத்துவர்கள், நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க பலதரப்பட்ட உபாயங்களைக் கைக் கொள்வதாக தெரியவருகின்றது. நாளாந்தம் நோயாளிகளை சந்திக்கும் முன்னர், மருத்துவமனையில் உள்ள, இல்லாத மருந்துகள் பட்டியலை பெற்றுக் கொள்ளுதல் ஒரு முறையாகும். தமது மருத்துவமனைகளில் மோசமான நிலையில் இருக்கும் நோயாளிகளின் பட்டியலை தயாரித்து வைத்திருத்தல். அவர்களுக்கு தேவைப்படும் மருந்துப் பட்டியலை நோயாளியைக் கண்காணிக்கப் பொறுப்பாக இருக்கும் நபர்களிடம் கொடுத்து வைத்திருத்தல். வெளியிலிருந்து மருந்துகளை கொள்வனவு செய்யும் பொழுது சற்று பணவசதி உள்ள நோயாளிகளைக் கொண்டு மேலதிக மருந்துப் பொருட்களைப் பெற்று, அவற்றை வசதி குறைந்த நோயாளிகளுக்கு பயன்படுத்தல். பயன்படுத்தப்பட்ட சிரிஞ்சர்களை மீண்டும் நன்கு சுத்தமாக்கி விட்டு பயன்படுத்தல் போன்ற இந்த வழிமுறைகள் மருத்துவர்களால் பயன்படுத்தப்படுவதாக தெரிய வருகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்



## தொடரும் ஆனையிறவுப் படைத்தளம் மீதான ஒரு முற்றுகைப் போர்!

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையணிகள் ஆனையிறவுப் படைத்தளம் மீது முற்றுகைப்



போர் ஒன்றினை மேற்கொண்டு வருகின்றன. ஆனையிறவுப்படைத்தளம் மீதான அவர்களின் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

வன்னியில் படைத்தரப்பினருக்குப் பாரியளவு பின்னடைவை ஏற்படுத்திய புலிகளின் 'ஓயாத அலைகள்' தாக்குதல் நடவடிக்கையின் மூன்றாம் கட்டம், கடந்த டிசம்பர் 11ம் திகதியன்று ஆனையிறவு தடை முகாமிற்குக் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு உதவி கடற்படை இராணுவ கூட்டு முகாமைச் சூழ்ந்து தாக்கத் தொடங்கியதில் ஆரம்பமாகியது.

ஆனையிறவு தடை முகாமிற்கு கிழக்குக் கரையில் இருந்து கடல் மூலமாக ஏற்படக்கூடிய ஆபத்தைத் தடுக்கும் நோக்குடன் 1993ம் ஆண்டின் நடுப்பகுதியில் இங்கு இரண்டு கடற்படை முகாம்கள் இராணுவ உதவியணியினர் துணையுடன் உறுதியாக அமைக்கப்பட்டிருந்தன. கடற்புலிகளின் பலம் அதிகரித்த நாள் முதற்கொண்டு இங்கு பெருந்தொகையான கடற்படை மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு காவற் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதைவிட அதிகளவு கடற்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதுதவிர அதிவேக தாக்குதல் படகுகள் (Fast attack craft) 24 மணிநேரமும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

ஆனால் இவ்வாறான பாதுகாப்பு கெடுபிடிகளுக்கும் மத்தியில் தரைமார்க்கமாகவும் இயந்திரப் படகுகளின் மூலம் கடல் வழியாகவும் இரவோடிரவாக வந்திறங்கிய புலிகளின் அணிகள் டிசம்பர் 11ம' திகதி அதிகாலை வெற்றிலைக் கேணி இராணுவ கடற்படை கூட்டு முகாம் மீது தாக்குதல் நடவடிக்கையில் இறங்கின. இதேவேளை பூநகரி நிலப்பரப்பிலிருந்தும் புலிகளின் நீண்ட ஆட்லறி எறிகணைகள் மழையென இப்பகுதிகளைத் தாக்கின.

வன்னியில் இரண்டு வருடங்களில் கைப்பற்றிய பெருநிலப்பரப்பை பாரியளவு இராணுவத் தளபாடங்களுடன் புலிகளிடம் இழந்த படையினர் இவ்வாறான ஒரு தாக்குதலை புலிகள் திடுதிப்பென மேற்கொள்வார்கள் என சற்றும் அறியாதவர்களாகவே இருந்தனர். இழப்புகளின் மத்தியில் மனோநிலை பாதிப்படைந்திருந்த படையினரை புலிகளின் அதிரடித் தாக்குதல் நிலைகுலைய வைத்திருந்தது.

ஆனாலும் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு பதில் நடவக்கைகளில் முழுமூச்சுடன் இறங்கினர். தாக்குதல் நடந்த சமயம் ஆனையிறவில் இலங்கை இராணுவத்தின் 54வது டிவிஷனின் பிரதான கட்டளையிடும் அதிகாரியாக (General officer- Commanding) மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவர் முன்னர் இராணுவப் பேச்சாளராக இருந்தவர். ஆனாலும் சரியாக 19 மணிநேர சண்டையின் பின்னர் கடற்கரையை அண்டியிருந்த வெற்றிலைக்கேணி கடற்படை முகாமும் அதனை அண்டியிருந்த கட்டைக்காடு இராணுவ கடற்படை கூட்டு முகாமும் புலிகளிடம் வீழ்ந்தன. இருதரப்பிலும் பாரியளவு உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன, கணிசமான அளவினர் இருதரப்பிலும் காயமடைந்தனர்.

புலிகள் இதனுடன் நிற்கவில்லை. அடுத்து 48 மணிநேரங்களில் ஆனையிறவு பிரதான படை முகாமிற்கும் கட்டைக்காடு இராணுவ கடற்படை கூட்டு முகாமிற்கும் இடையே அமைந்திருந்த புல்லாவெளி இராணுவ முகாமையும் அதிரடித் தாக்குதல் மூலம் கைப்பற்றியதாக அறிவித்தனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து பல்வேறு ஊகங்கள் கொழும்பு இராணுவ அரசியல் வட்டாரங்களில் எழத் தொடங்கின. விசேடமாக டிசம்பர் 22ல் ஜனாதிபதி தேர்தலில் மக்களைச் சந்திக்க இருந்த பிரதான அரசியற் கட்சிகளுக்கு இவை மிகவும் முக்கியமாக அமைந்தன.

மறுநாள் இராணுவத் தலைமையகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் உரையாற்றுகையில், "புலிகள் தெரிவிப்பதைப் போன்று நாம் வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு முகாம்களில் இருந்து பின்வாங்கவில்லை. வன்னியில் போன்று இங்கும் ஒரு பின்வாங்கலை எதிர்பார்த்தே புலிகள் தாக்குதல்களைத் தொடுத்தனர். ஆனால் எமது படைவீரர்கள் துணிச்சலுடன் போராடி அவர்களை இழப்புக்களுடன் பின் வாங்கச் செய்து விட்டனர். ஆனாலும் இராணுவ தந்திரோபாய காரணங்களுக்காக நாம் கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, மற்றும் புல்லாவெளி பகுதிகளில் எமது முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளில் (Forward Defence Lines (FOL) சில மாற்றங்களைச் செய்து சற்றுப் பின்னோக்கி நகர்த்தியிருக்கின்றோம்" என்றும் கூறினார்.

இதேவேளையில் தான் புலிகளின் ஊடுருவல் அணிகள், தென்மராட்சிக் கிழக்குக் கரையோரப் பகுதிகளிலும், அரியாலை, மணியந்தோட்டம், பாசையூர் பகுதிகளிலும் தரையிறங்கும் நோக்கத்துடன், ஆட்டிலறி எறிகணை மற்றும் மோட்டார், றொக்கட் தாக்குதல்களுடன் முன்னேற முயன்றனர். ஆனால் அவை பயனற்றுப் போகவே பூநகரியிலிருந்து ஆட்டிலறி எறிகணை வீரர்களின் மூலம் யாழ்ப்பாணத்தை அதிர வைத்துக் கொண்டிருந்தனர்.

இவை தொடர்பாக உயர் இராணுவ அதிகாரியொருவர் அப்போது பிரத்தியேகமாகத் தகவல் தருகையில் "புலிகளின் பிரதான நோக்கம் ஆனையிறவுப் படைத்தளத்தை கைப்பற்றுவது அல்ல. அவர்கள் அவ்வாறான ஒரு விஷப் பரீட்சையில் இப்போது இறங்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஏதும் இல்லை. அவர்களது முழு நோக்கமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்வது அல்லது இயன்ற வரையில் குழப்புவதுடன் ஆனையிறவு படைமுகாமை ஏனைய பகுதிகளில் இருந்து துண்டித்து ஒரு முழுமையான முற்றுகையை மேற்கொள்வதுமே. ஆனால் இம்முறை அவர்கள் தங்களின் வன்னித் தாக்குதல் முறை இனிமேல் பயன்படாது என்பதை உணரப் போகின்றனர்" என்று ஆணித்தரமாகக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து ஆனையிறவு களத்தில் ஒரு வார அமைதி காணப்பட்டது. மீண்டும் புலிகள் டிசம்பர் 19 அளவில் இருமுனைகளில் ஆனையிறவு படைமுகாமிற்குத் தென்வாயிலாக அமைந்திருந்த பரந்தன் இராணுவ நிலைகள் மீது தமது தாக்குதல்களைத் தொடுத்தனர். பிரதான பாதுகாப்பு பங்கர் நிலைகளுடன் கூடிய இந்த தென்முனையில் இராணுவத்தினரின் கை சற்று ஓங்கியதாகவே காணப்பட்டது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக் கட்டிடத்தில் 546 பிரிகேட் தலைமையகம் அமைந்திருந்தது. புலிகளின் கடும் ஆட்லறி, மற்றும் மோட்டார் தாக்குதலினால் அங்கு நிலைகொண்டிருந்த படையினர் திண்டாடினர். புலிகள் அங்கு பல குழல் றொக்கட் ஏவுகணைகளை (Multi Barrlel Rocket launcher) கடுமையாகப் பாவித்ததாக அங்கு கடமையாற்றிய படையினர் தெரிவித்தனர்.

இங்கும் இராணுவத்தினரும் புலிகளும் பாரியளவில் உயிர் இழப்புக்களைச் சந்திக்க நேர்ந்தது. தாக்குதலின் இறுதியில் 546 பிரிகேட் தலைமையகம் புலிகளின் கைகளில் வீழ்ந்தது. நூற்றுக் கணக்கான படையினர் தமது முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளைக் கைவிட்டு பிரதான முகாம்களை நோக்கிப் பின்வாங்கினர். 546வது பிரிகேட் தலைமையகத்தை இழந்த படையினர் தமது பங்கர் நிலைகளுக்குள்ளேயே வந்து அவற்றையே தற்காப்பாகக் கொண்டு தாக்குதல்களை மேற்கொண்ட புலிகள் மீது மூர்க்கத்தனமான எதிர்தாக்குதலைத் தொடுத்தனர். இதனால் புலிகள் புதிதாகக் கைப்பற்றிய நிலைகளில் இருந்து சற்றுப் பின்வாங்க வேண்டி நேர்ந்தது. ஆனாலும் படையினரால் மீண்டும் அவற்றைக் கைப்பற்ற முடியவில்லை.

ஆனையிறவின் கிழக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் தாக்குதலை மேற்கொண்டிருந்த புலிகளின் அணியினர் ஒரே சமயத்தில் அதன் வடக்கு வாயிலாக அமைந்திருக்கும் இயக்கச்சிப் பகுதிகளில் அமைந்திருந்த இராணுவ முகாம்கள் மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டனர். முதல்நாள் தாக்குதல்களில் இயக்கச்சிப் பகுதியில் அமைந்திருந்த முன்னரங்கப் பாதுகாப்பு பங்கர் நிலைகள் சிலவற்றை தகர்த்து உட்புக முனைந்தனர். ஆனால் அவர்களால் அவற்றைத் தகர்க்க முடிந்ததே தவிர உட்புக முடியவில்லை. அவர்களின் தாக்குதலை எதிர்பார்த்து தயாராக நின்றிருந்த இராணுவத்தினரின் விசேட பயிற்சி பெற்ற அணிகள் எதிர் தாக்குதலை மேற்கொண்டு புலிகளின் முயற்சிகளை வடக்கு வாயிலில் வைத்தே முறியடித்தனர். இதில் புலிகள் கடும் இழப்புகளைச் சந்தித்தனர். மீண்டும் டிசம்பர் 28 அதிகாலை வேளையில் இரவோடிரவாக தெற்குப் புறமாக பரந்தன் பகுதியில் அமைந்திருந்த படையினரின்கொங்கிறீற் பங்கர் நிலைகள் மீது ஆர்.பி.ஜி. மற்றும் குறுந்தூர மோட்டார் தாக்குதல்களில் ஈடுபட்டனர். இதன்பின்னர் அலைஅலையாக வந்து புலிகளின் அணிகள் கடும் கண்டையில் ஈடுபட்டன. மறுநாள்வரை கடும் சண்டை இடைவெளியின்றித் தொடர்ந்தது. டிசம்பர் 27 அன்று புலிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க விமானப் படையினரின் உதவி கோரப்பட்டது. அங்கு சென்ற விமானப் படையின் கிபீர் தாரை குண்டு வீச்சுசண்டை விமானங்களும் ஆஐ-24 ரக கண்ஷிப் உலங்கு வானூர்திகளும் புலிகளின் நிலைகள் எனச் சந்தேகப்பட்ட இலக்குகள் மீது குண்டுமாரி பொழிந்தன. ஆனாலும் புலிகள் இராணுவத்தினரது சில நிலைகளைக் கைப்பற்றி அங்கு நிலை கொண்டிருந்தபடியால் படையினரின் இலக்குகள் பூரணமாக அமையவில்லலை. இவ்வாறான அழித்தொழிக்கும் தாக்குதல் நடவடிக்கையில் (Assult Mission) ஈடுபட்ட ஆர்-24 ரக ரஷ்யத் தயாரிப்பு கண்ஷிப் உலங்கு வானூர்தி ஒன்று புலிகளின் விமான எதிர்ப்பு பிரிவினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. அதிலிருந்த நான்கு விமானிகளும் உதவியாளர்களும் கொல்லப்பட்டனர். தாக்குதலுக்குள்ளான உலங்கு வானூர்தி சின்னாபின்னமாகி அருகிலள்ள கடல்நீரேரிப் பகுதியில் நொருங்கி வீழ்ந்தது. இது புலிகளின் எறிகணைத் தாக்குதலால் தான் வீழ்த்தப்பட்டதா என்பதனை ஆராய விமானப்படைத் தளபதியின் உத்தரவின் பேரில் விசேட விசாரணைக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனாலும் ஊர்ஜிதமற்ற தகவல்கள் அது எறிகணைத் தாக்குதலால் தான் வீழ்ந்தது எனத் தெரிவிக்கின்றன. எனினும் நடைமுறையிலுள்ள யுத்தத் தணிக்கை இது சம்பந்தமான மேலதிகத் தகவல்கள் எதனையும் கூற இடம் தருகிறதாயில்லை.

இராணுவத் தரப்புச் செய்திகளின்படி ஆனையிறவு தடைமுகாமிற்கு உதவி வழங்கலை மேற்கொள்ளும் பொருட்டு பளைப்பகுதியில் இராணுவத்தினர் பாரிய முகாம் ஒன்றை நிறுவியுள்ளார்கள். இது ஆனையிறவில் உள்ள படையினருக்கு உளரீதியாக ஒரு பாரிய பலத்தை வழங்கியுள்ளது என்பதில் ஐயமேதுமில்லை.

இதன் பின்னர் சற்றுத் தணிந்திருந்த மோதல்கள் கடந்த ஜனவரி 17ம் திகதி பரபரப்பாக மூண்டது. குடாநாட்டு போர்முனையில் படையினருக்கான வான்வழி விநியோக மீட்புப்பணிகளில் ஈடுபட்டிருந்த அமெரிக்கத் தயாரிப்பு பெல் 212 ரக உலங்கு வானூர்தி புலிகளின் விமான எதிர்ப்பு அணியினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. இதன்விமானியும் துணைவிமானியும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். மேலும் ஏழு பேர் கடுங்காயங்களுக்குள்ளாகி பலாலி-இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இது ஆனையிறவு போர் முனையில் கடந்த இரண்டு மாத காலங்களுக்குள் படையினர் இழந்த இரண்டாவது உலங்கு வானூர்தியாகும். விடுதலைப் புலிகளின் ராடர்களில் விமானங்களின் நடமாட்டம் பதியப்படாமல் இருப்பதற்காக உலங்கு வானூர்திகள் மிகவும் தாழ்வாகவே (Tree top level) பறப்பதுண்டு. ஆனால் தென்மராட்சி கிழக்குப்பகுதியில் ஊடுருவியுள்ள புலிகளின் கண்களில்இருந்து இவை தப்புவது அரிது என்பது போன்றே கடந்த 17ம் திகதி உலங்கு வானூர்தி மீது நடாத்திய தாக்குதல் கோடு காட்டியுள்ளது.

இதனை உறுதி செய்வது போல இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் பெல்212 ரக உலங்கு வானூர்தியை புலிகள் சிறு ஆயுதங்களின் உதவியுடனேயே தாக்கியுள்ளனர் என்றும் விமானி அதனை தரையிறக்க முற்படுகையிலேயே அது தீப்பிடித்ததாகவும் கூறிய அவர் அவ்வலங்கு வானூர்தி காலையிலிருந்து சண்டையில்காயமடைந்த இராணுவத்தினரை பலாலி இராணுவ வைத்திய-

➡ 19



நன்றி - நூலகத்திட்டம்

# 'புலிகளிடம் உள்ள படையினரை விடுவிக்க அரசு போதிய அக்கறை காட்டவில்லை!'

- காணாமல் போனோர் படைவீரர் சங்கத்தின் தலைவர் ஈ.பி. நாணயக்கார

*1997 ஜனவரி ௨௨ம் திகதி விமானப்படையைச் சேர்ந்த தனது மகனின் இழப்புடன் காணாமல் போனோர் படைவீரர் சங்கத்தை ஆரம்பித்ததாக கூறும் ஈ.பி. நாணயக்கார அவர்கள், கடந்த 3 வருடங்களாக காணாமல் போனோர் படையினர் தொடர்பான செயற்பாடுகளுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்.*

*அரசின் செயற்பாடுகள் இவ்விடயம் தொடர்பில் தமக்கு எவ்வித திருப்தியையும் அளிக்கவில்லை எனக் குறிப்பிடும் அவர், புலிகளின் பாதுகாப்பில் உள்ள படையினரை விடுவிக்க எந்த முன்னேற்றமான நடைமுறைகளையும் அரசு பின்பற்றாவிட்டால், தாம் காணாமல்போன படையினரின் உறவினர்களுடன் அரசின் அனுமதியின்றி வன்னிக்குச் செல்லத் தயாராகுவதாகவும், இவ்விடயத்தில் தொடர்பூடகவியலாளர்களும், அரச சார்பற்ற அமைப்பினரும் தம்முடன் அணிதிரள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கிறார்.*


*அவருடனான நேர்காணல் கீழே தரப்படுகின்றது. நேர்காணல் ரத்னா*

**✔ புலிகள் நிபந்தனையின்றி நான்கு போர்க்கைதிகளான படையினரை விடுதலை செய்துள்ளனர். இதனை எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

புலிகளின் வசமிருக்கும் படைவீரர்களை விடுதலை செய்யுமாறு பரந்தளவில் எமது அமைப்பு 3 ஆண்டு காலமாக அழுத்தம் கொடுத்து வந்துள்ளது. இதன் பிரதிபலனாகத் தான் 15 பேர் உண்ணாவிரதம் செய்தனர். அதன் பின்னரே இவர்களில் நால்வரை புலிகள் விடுதலை செய்துள்ளனர்.

**✔ பி.பி.சி செய்தி நிலையத்திற்கு நீங்கள் அளித்த பேட்டியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பாக விசனம் தெரிவிந்திருந்தீர்கள். அதுபற்றி தெளிவாகக் கூறமுடியுமா?**

புலிகள் இயக்கத்தினர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் 15 பேரை விடுவிக்க வேண்டுமாயின் அரச பிரதிநிதி ஒருவருடன் உறவினர்களை சமூகமளிக்கும்படி கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன் அங்குள்ள யதார்த்த நிலைமையை தென்னிலங்கை மக்களுக்கு தெரியப்படுத்த தொடர்பூடகவியலாளர்களையும் அழைத்து வருமாறு கூறியிருந்தனர். இது மிகப் பிரசித்தமாக அரச ஊடகங்களிலும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசு இதற்கு நடவடிக்கை எடுக்கும் முகமாக ஒரு பிரதிநிதியை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அனுப்ப முயற்சி செய்தது. எனினும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் ஹர்ஷ குணவர்தன அவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சட்டதிட்டங்களின்படி இவ்வாறான சந்தர்ப்பங்களில், பெற்றோர்கள் உறவினர்கள், ஆகியோரைத் தவிர வேறு எவரையும் அழைத்துச் செல்ல முடியாதென என்னிடம் முதலில் குறிப்பிட்டிருந்தார். அரசு தனது பிரதிநிதி ஒருவரை அனுப்ப விரும்பினாலும், தொடர்பூடகவியலாளர்கள் அவர்களுடன் செல்ல விரும்பினாலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சட்டத்திட்டங்களுக்கு அமைய பெற்றோர்கள், உறவினர்கள் மட்டுமே அழைத்துச் செல்லப்படலாம் என வலியுறுத்திக் கூறப்பட்டது. இந்தப் பயணத்திற்கான அனுமதியைப் பெற்ற எமது அமைப்பைச்



சேர்ந்த என்னையும் செல்ல அனுமதிக்க முடியாது எனக் கூறப்பட்டது.

நான், பி.பி.சி. உலக சேவைக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறான சட்டத்திங்களைக் கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு எமது படைவீரர்களை விடுவிக்க எந்தவித நடவடிக்கையையும் எடுக்க முடியாவிட்டால், இந்த அமைப்பு எமது நாட்டில் தரித்திரிப்பது சரியானது அல்ல. சடலங்களை யுத்தம் புரியும் இரு சாராருக்கும் கையளிக்கத் தான் இந்த அமைப்பு உள்ளதாயின் அவ்வேலையை நாமே செய்து கொள்கின்றோம். நீங்கள் தயவு செய்து இந்த நாட்டிலிருந்து போய்விடுங்கள் எனக் குறிப்பிட்டிருந்தேன்.

இதன் பின் ஹர்ஷ குணவர்தன அவர்கள், மீண்டும் பி.பி.சியில், நாம் அரச பிரதிநிதி ஒருவரை அனுப்புமாறும், தொடர்பூடகவியலாளர்களை அனுப்புமாறும் புலிகள் விடுத்த அறிவிப்பை எழுத்து மூலம் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்து விட்டோம். நாம் பாதுகாப்பு அமைச்சிடம், அரச பிரதிநிதி ஒருவரை எம்முடன் வன்னிக்கு அனுப்பும்படி கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், அரசு இது பற்றி கவனம் செலுத்தாமல் எமக்கு பெற்றோர்கள், உறவினர்கள் இவர்களை தவிர்ந்த வேறு எவரையும் அழைத்துச் செல்ல வேண்டாம் என ஆலோசனை கூறியது என்று குறிப்பிட்டிருந்தார்.

அதன்பின் நான் இது பற்றி ஹர்ஷ குணவர்தன அவர்களைத் தனிப்பட்ட ரீதியில் சந்தித்து ஏன் இவ்வாறு இரண்டு முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டீர்கள் என வினவினேன். அப்பொழுது அவர், உண்மை நிலையை நான் பின்னர் தெளிவுபடுத்துகிறேன் என்று கூறினார்.

நான் ஜெனீவா தலைமையகத்திற்கு, தங்கள் அமைப்பின் சட்டத்திட்டங்கள் பற்றி தெளிவின்மை காணப்படுகின்றது. உங்களது சட்டங்களைப் பற்றி எமக்கு அறிவியுங்கள். இன்று இவ்வாறான பிரச்சினையொன்று தோன்றியுள்ளது என தொலைநகலில் அறிவித்துள்ளேன்.

நான் 01.03.2000 அன்று கொழும்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகத்திற்கு, இந்தப் பிரச்சினையின் உண்மை நிலையை தொடர்பூடகங்களில் வெளிப்படுத்துங்கள் என அறிவித்துள்ளேன். எனது அமைப்பைச் சேர்ந்த பெற்றோர்கள் இது பற்றி என்னிடம் கேள்வி கேட்கின்றார்கள். அவர்களுக்கு பொறுப்புச் சொல்லும் கடமை எனக்கு உண்டு. எவ்வாறாயினும், இப் பிரச்சினையில் தலையிட அரசாங்கம் ஆர்வம் கொள்ளவில்லையென்றே தோன்றுகின்றது. இதற்கு காரணம் என்னவென எமக்கும் புரியவில்லை.

அரசாங்கம், நாட்டைப் பாதுகாக்கச் சென்று புலிகளிடம் அகப்பட்டுக் கொண்ட படையினரை விடுவிக்க ஆர்வம் காட்டவில்லையாயின் எமது அமைப்பு உயிரை துச்சமென மதித்து அரசின் அனுமதி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த விரும்புகின்றது. புலிகளிடம் இருந்து எழுத்து மூலம் பேச்சுவார்த்தைக்கான அனுமதி கிடைத்தால், நான் பெற்றோர்கள், உறவினர்களை அழைத்துக் கொண்டு வன்னிக்கு உடனடியாகப் புறப்படுவேன்.

**✔ ஐ.சி.ஆர்.சி அமைப்பு இவ்விடயத்தில் போதிய தலையீட்டை மேற்கொள்ளாது என உங்களது அமைப்புக் கருதுகின்றதா?**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இந் நாட்டில் தரித்திருப்பது, இரு சாராருக்குமிடையில் செய்திகளை காவிச் செல்லவே அன்றி யுத்தம் தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது அவர்களது சட்டதிட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அவ்வமைப்பிடம் அதிகம் எதிர்பார்ப்பது தவறு.

**✔ படையினரை விடுவிக்க அரசு எடுத்துள்ள முயற்சிகள் அருந்தலாகவே உள்ளது என்றா கருதுகின்றீர்கள்?**

ஆம். அரசு படையினரை விடுவிக்க குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவுக்கு, திருப்திப்படக் கூடியளவுக்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பது தான் எமது கருத்து. அத்துடன் புலிகளிடமிருந்து எழுத்து மூலமான அழைப்பு வந்தால் தான் பாதுகாப்புப் படையும் அரசும் வன்னிக்கு செல்ல அனுமதி தருவதாகக் கூறுகின்றது. எழுத்து மூலமான அழைப்பு இல்லாததினால் அரசு மறுத்து வருகின்றது.

**✔ பொதுவாக காணாமல் போன படையினர் தொடர்பாக அரசாங்கம் எவ்வாறான வழிமுறைகளைக் கைக்கொள்கின்றது?**

காணாமல் போன படைவீரர்களை இறந்தவர்கள் என்று கருதி, இறந்தவர்களின் பட்டியலில் சேர்த்து, அவ்வாறான பெயரில் ஒருவரும் இல்லை, காணாமல் போனோர் என்ற ஒருவரும் இல்லை என்ற நிலைப்பாட்டையே அரசு கைக் கொள்கின்றது.

**✔ புலிகளின் வசம் உள்ள எஞ்சிய படையினரை விடுதலை செய்ய உங்களது அமைப்பு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது?**

நான் புலிகளின் லண்டன் தலைமையகத்திற்கும், பிரபாகரன் அவர்களுக்கும், கரிகாலன், தமிழ்ச்செல்வம் ஆகியோருக்கும் இதுபற்றிய தகவல்களை அனுப்பியுள்ளேன். இந்த அறிவித்தல்களுக்கு மன்னார் ஆயர் அவர்களின் மூலம் எனக்கு பதில்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆயர் அவர்களிடம் தமிழ்ச்செல்வன் அவர்களும், கரிகாலன் அவர்களும் என்னையும், இன்னும் நால்வரையும் சேர்த்து மொத்தமாக ஐவரைச் சந்திக்க வருமாறு தெரிவித்துள்ளனர்.



ஈ.பி. நாணயக்கார

நான் இது பற்றி ஜனாதிபதிக்கு அறிவித்தேன். அமைச்சர் டிலான் பெரேராவுக்கு அறிவித்தேன். ஜி.எல்.பீரிஸ் அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். எனினும் இவர்களில் எவரும் இந்தப் பயணத்தை மேற்கொள்ள எமக்கு அனுமதி தரவில்லை.

**✔ அரசாங்கத்தின் சார்பில் உங்கள் அமைப்பு எவ்வாறான தலையீட்டை எதிர் பார்க்கின்றது?**

நாங்கள் அரசசார்பில் தலையீடுகள் எதனையும் எதிர்பார்க்கவில்லை. மாறாக நாம் அவர்களின் அனுமதியை மட்டுமே எதிர்பார்க்கிறோம். குறைந்த பட்சம் படையினரை விடுவிக்க இயலாவிட்டாலும், அவர்களைப் பார்த்துவிட்டு வர அனுமதி தரலாம் அல்லவா? அரசாங்கத்தினால், இவ்விடயத்தில் தலையிட இயலாவிட்டால் தயவு செய்து பேச்சுவார்த்தைகளை நடாத்த மட்டும் அனுமதி தாருங்கள் என்றே கூற விரும்புகின்றோம்.

**✔ புலிகளின் தடுப்புக் காவலில் சுமார் எத்தனை படையினர் உள்ளனர் எனக் கருதுகிறீர்கள்?**

விடுதலையாகி வந்தவர்கள் தந்த தகவலின்படி சுமார் 500 வீரர்கள் மட்டில் புலிகளின் தடுப்புக் காவலில் உள்ளனர் எனத் தெரிய வருகின்றது. இதற்கு முன் மிஷன் கப்பலின் கப்டன் தேனுவர அவர்கள், 500க்கு அதிகமானோர் அங்கு உள்ளனர் எனக் குறிப்பிட்டிருந்தார். விடுதலையானவர்களின் கருத்தின்படி 500க்கு அதிகமானோர் புலிகளின் வசம் உள்ளனர் என்று எமக்கு தெளிவாகத் தெரியும்.

**✔ சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட படையினரின் பெற்றோர்கள் உறவினர்கள். கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள்....?**

நாம் அவர்களுடன் கலந்துரையாடினோம். அவர்களின் கருத்துக்களின்படி, புலிகள் சுமுகமாகவே நடந்து கொண்டுள்ளனர். பெற்றோர்களை நன்கு உபசரித்து கவனித்துள்ளனர். முல்லைத்தீவு முகாமையும் சிற்சில கிராமங்களையும் புலிகள், காட்ட அழைத்துச் சென்றிருக்கின்றனர். பெற்றோர்கள் மத்தியில் தமிழ்ச்செல்வன் அவர்கள் உரையாற்றும் போது, தாம் நிரந்தர சமாதனத்திற்கு தயார் என்று குறிப்பிட்டுள்ளார். புதுக்குடியிருப்பிலிருந்து 15 பெற்றோர்களும் படைவீரர்களை அழைத்து வராமலேயே வந்துள்ளனர். தமிழ்ச்செல்வன் அவர்கள் அரச பிரதிநிதி அழைத்து வரப்படாததினால் எவரையும் நாம் விடுதலை செய்யப் போவதில்லை என்று கூறியிருந்தார். மீண்டும் திரும்பிச் சென்று ஒரு அரச பிரதிநிதியுடன் 14 நாட்களுக்குள் வருமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், மல்லாவி அலுவலகத்தில் வைத்து 4 படைவீரர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

**✔ புலிகளின் இந்த நடவடிக்கை சமாதானத்திற்கான ஒரு சமிக்ஞை என்று உங்கள் அமைப்பு கருதுகின்றதா?**

புலிகள் சமாதானத்திற்கான நல்லெண்ணத்தை சரியான வழியில் தெரியப்படுத்தியுள்ளனர். அவர்கள் சமாதானக் கரங்களை அரசை நோக்கி நீட்டியுள்ளனர். அரசாங்கம் இது பற்றிய புரிந்துணர்வுடன், பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கின்றோம். இல்லாவிட்டால் பெரும் அழிவே காத்திருக்கின்றது என்பது எமது அபிப்பிராயமாகும்.

**✔ இப்பிரச்சினை தொடர்பாக சர்வதேச மட்டத்தில் அழுத்தங்களை எடுக்கவுள்ளதாக தொடர்பூடகங்களுக்கு தெரிவித்திருந்தீர்களே...**

நாம் இவ்விடயம் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச்சபையின் மூலம் பல அழுத்தங்களை மேற்கொண்டோம். ஜெனீவா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமையகத்திற்கு இது பற்றி அறிவித்துள்ளோம். அத்துடன் அமெரிக்கா ஜனாதிபதிக்கு, இங்கிலாந்து பிரதமருக்கு, இந்தியப் பிரதமருக்கு இந்தப் பிரச்சினையைப் பற்றி அறிவித்துள்ளோம். இந்தப் பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு தீர்க்க உதவுமாறு 50க்கு அதிகமான தொலைநகல்களை அனுப்பியுள்ளோம். நெல்சன் மண்டேலா அவர்கள் இதுபற்றி விரிவாக ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு நாம் முன்னரேயே மேற்கொண்ட சர்வதேச அழுத்தம் காரணமாகவே ஓலாரா ஒட்டுணு அவர்களின் விஜயம் அமைந்தது என்று நான் நினைக்கிறேன்.

**✔ எஞ்சியுள்ள படையினரை விடுவிப்பது தொடர்பான உங்களது அமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள் பற்றி...**

எமது எதிர்கால வேலைத் திட்டங்களைப் பற்றி இவ்வாறு தான் கூற வேண்டும். எமது அமைப்பு ஒரு ஊதிப்பெருத்த பலூன் போன்ற நிலையில் தான் இப்பொழுது உள்ளது. காற்று அழுத்தம் அதிகரிக்க அதிகரிக்க பலூனின் நிலை எப்படி இருக்கும் என்று கூறத் தேவையில்லை. எமது அமைப்பின் ஒட்டுமொத்தமான கருத்தும் இதுதான். நாம் முடிந்தவரையில் பிரச்சினையை வளரவிடாமல் அரசின் அனுமதியைப் பெற்றுக் கொண்டே வன்னிக்கு சென்று எமது பிள்ளைகளை தேட முயல்கின்றோம். ஊதிப் பெருத்த இந்த பலூன் வெடிக்கும் வரை அரசு கைகட்டி பார்த்திருக்குமானால் விளைவு எப்படியிருக்கும் என்று தெரியவில்லை. நாம் எந்த நடவடிக்கையை எடுப்போம் என்று எமக்கே தெரியவில்லை. எந்த முடிவையும் நாம் எடுக்கலாம்.

குறிப்பாக காணாமல் போன படைவீரர்களின் தாய்மார்கள், வன்னிக்காட்டில் எமது எலும்புகள் புதைந்து போவதை தான் அரசு எதிர்பார்த்திருக்குமானால், நாம் அங்கு சென்று ஆபத்தை எதிர்நோக்க தயாராகவுள்ளோம் என்று குறிப்பிடுகின்றனர். காணாமல் போன படைவீரர்களின் பெற்றோர்கள் இவ்விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றனர். அவர்கள், நான் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என என்னைக் குறை கூறுகின்றனர்.

நான் இந்த அமைப்பின் தலைவர் என்ற வகையில், என்னால் இயன்றவரையான முயற்சிகளை எடுத்து அரசின் அனுமதியுடன் அங்கு சென்று எமது பிள்ளைகளை விடுவிக்க உயர்ந்த பட்ச நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன். ஆனால் பெற்றோர்கள் அரசின் அனுமதியின்றி செல்வோம் என்கின்றனர். எவ்வாறாயினும், பெற்றோர்கள் எந்த நடவடிக்கையை இந்த விடயத்தில் எதிர்வரும் காலங்களில் எடுக்கப் போகின்றார்கள் என்பதை என்னாலும் எதிர்வுகூற முடியாதுள்ளது என்பதையே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். ○

நோர்வே மத்தியஸ்தம் —

# முஸ்லிம்களின் எதிர்காலம் என்ன?

ஒன்றுக்கு மேற்பட்ட இனக் குழுக்கள் வாழும் இலங்கைத் திருநாட்டில் இந்த யதார்த்தம் முழுமையாக மறுக்கப்பட்டு பெரும்பான்மை சிங்கள பௌத்த பேரினவாதிகளால் மிகக் கொடுமையான முறையில் அடக்குமுறைக்கு தள்ளப்பட்டுவரும் சிறுபான்மை தமிழ் இனம் தமது விடுதலைக்கும், சுதந்திரமான வாழ்வுக்குமாக வரலாற்றில் பல்வேறு போராட்ட வடிவங்களை முன்னெடுத்து வந்திருக்கின்றது. மிதவாத தமிழ்த் தலைமைத்துவங்களால் முன்னெடுக்கப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் எத்தகைய உருப்படியான தீர்வுகளையும் தராததன் நிமித்தம் என்னற்ற உயிர், பொருள், இழப்புகளுக்கு மத்தியில் இன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்படும் ஆயுதப்போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டில் நிலையான சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதை எல்லோரும் அறிவோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தற்போதைய முயற்சிகளில் சற்று முன்னேற்றகரமானதென நம்பத்தக்க விதத்தில் வித்தியாசமான அணுகுமுறையில் ஐரோப்பிய நாடொன்றின் மத்தியஸ்தத்துன் அல்லது அனுசரணையுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுவதற்கான அறிகுறிகள் இப்போது தென்பட ஆரம்பித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் அரசியல்



ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்திற்கும், நோர்வே வெளிநாட்டமைச்சர் நட்வொலிபேக்கிற்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாடொன்றின் நிமித்தம் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நட்வொலிபேக் முதல் கட்டமாக சந்தித்து சென்றுள்ளார்.

கொடூர யுத்தத்திற்கு உயிரூட்டி தன்னுடைய 17 வருட படுகொலை ஆட்சியில் நியாயமான தீர்வெதையும் முன்வைக்காது எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஐ.தே.கவினதும், யுத்தம் மூலம் சமாதானம் என்கின்ற இனப்படுகொலைக்கு இறுதி பட்ஜெட்டில் அதிக செலவீனத்தை ஒதுக்கி ஆட்சிப் புரிந்து கொண்டுவரும் பொ.ஐ.மு அரசினதும், இணக்கப்பாடொன்றின் மூலம் பெறுமதியானதும், நிலையானதும் தீர்வொன்று எய்தப்படும் என்கின்ற யதார்த்தத்தின் அடிப்படையில் இருதரப்புடனும் ஆரம்பிக்கப்பட்டப் பேச்சொன்றில் நோர்வே அரசு ஈடுபட்டிருப்பது சாலப் பொருத்தமானதும், வரவேற்புக்குரியதுமான வியடமாகும்.

எனினும், வட - கிழ்க்கில் மிக நிண்டகாலமாக இடம்பெற்றுவரும் யுத்தத்தின் அகப்பாடுகளுக்குள் சிக்கித் தம்முடைய உயிர், உடமை, பொருளாதாரம் போன்றவற்றை இழந்து வாழ்வுரிமை மறுக்கப்பட்டும், தமது சமூக இருப்புக்கும், பாதுகாப்புக்கும் நிரந்தர உத்தரவாதமின்றி அச்சத்துடன் வாழ்ந்துவரும் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய மூன்றாவது இனமாகிய முஸ்லிம்களையோ அதனது பிரதிநிதிகளையோ (இங்கு மு.காவை மட்டும் குறிப்பிடவில்லை) சம்பந்தப்படுத்தி

பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான முனைப்பு எதனையும் வெளிப்படுத்தாத முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அச்சத்தினையும், நடுக்கத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

வரலாற்றை எடுத்து நோக்கின் தமிழ் மக்கள் உரிமைபோராட்டமானது அகிம்சை வழியில் முன்னெடுக்கப்பட்ட காலங்களில் முஸ்லிம்களும் தாமும் தமிழ்த்தேசியத்தின் ஓர் அங்கம் என கருதி தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கி வந்தனர். எனினும், தமிழ் மக்களின் ஊரிமைப் போராட்டமானது ஆயுத ரீதியாக பரிமாணம் பெற்றபோது முஸ்லிம்கள் மத்தியில் அவநம்பிக்கையினையே அது ஏற்படுத்தியது. தமக்கெதிராக போராட்டக் குழுக்கள் ஆயுதங்களை பிரயோகித்தபோது முஸ்லிம்கள் தம்மை ஒரு தனித்துவமிக்க தேசிய இனமாக உணரத் தலைப்பட்டனர். இதன் எதிர் ஒலிகளே முஸ்லிம்களுக்கான தனிக்கட்சி நிறுவப்பட்டதுடன் முஸ்லிம் மாகாணக் கோரிக்கையும் முன்கொண்டு செல்லப்பட்டது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுகளில் பிராந்திய வல்லரசாகிய இந்தியாவின் நேரடி தலையீட்டின் மூலம் மாகாண சபை முறை ஏற்படுத்தப்பட்டபோது வட கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்படாமல், முஸ்லிம் சமூகத்துடன் எவ்வித கலந்துரையாடலும் இன்றி அவர்களது அரசியல் அபிலாஷைகள் கருத்திற்கொள்ளப்படாமல், தாபிக்கப்பட்ட மாகாண சபை நிர்வாகம் நீண்டகாலம் நிலைத்து நிற்கமுடியாமல் போனமைக்கான காரணங்களில் ஒன்று முஸ்லிம்களுடன் இணக்கப்பாடொன்று செய்து கொள்ளப்படாமையே.

இப்போது இது போன்று மூன்றாவது நாடொன்றின் தலையீட்டுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கான சகுனம் தென்படும் வேளை முஸ்லிம்களுடன் எத்தகைய அணுகுதல்களும் இன்றி பேச்சுவார்த்தைக்கான ஏற்பாடுகள் நடைபெறுவது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். விடுதலைப் புலிகள் இயக்கமானது பிரேமதாச அரசுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் தொடக்கம், இன்றைய பொ.ஐ.மு. அரசுடன் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகள் வரை முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகள் தொடர்பாக எத்தகைய கருத்துகளையும் தெரிவிக்காமல் இருப்பது முஸ்லிம்கள் மத்தியில் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

முஸ்லிம் மக்களின் அரசியல் உரிமைகளை கருத்திற்கொள்ளப்பட்டு, அவர்களின் அரசியல் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படும்வகையில் முன்மொழியப்படும் தீர்வே நிரந்தரதீர்வாகவும் தமிழ் முஸ்லிம் மக்களின் ஒற்றுமைக்கான உறுதிப்பாடாகவும் அமையும். அல்லாமல், ஒருதலைப்பட்சமாக முஸ்லிம்களின் அரசியல் உரிமைகள் அவர்களின் தனித்துவம் அங்கீகரிக்கப்படாமல் எய்த நினைக்கும் எத்தகைய தீர்வு முயற்சிகளும் நிரந்தரத்தீர்வாகப் போவதில்லை. இது இன்னுமொரு இரத்தக் களறிக்கு வழி சமைப்பதோடு தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரிவுக்கான பிளவு வாய்க்கால் வெட்டும் பணியாகவே அமையும்.

முஸ்லிம்கள் தமிழ்த் தேசியத்தின் ஒரு பிரிவு என்கின்ற சித்தாந்தத்தில் தொடர்ந்து தொங்கிக் கொண்டு விடுதலைப் புலிகள் தீர்வுகளைத் தேட முனைவது அவர்களின் அரசியல் பக்குவமின்மையையே காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் 1998 ஆய்டு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் சென்னையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையும் முதலாவது சரத்தாகிய "இலங்கை வாழ் முஸ்லிம்கள் தமிழ் மொழியை பேசுபவர்களாக இருப்பினும், அவர்கள் வேறுபட்ட தனித்துவத்தை கொண்ட தமிழ்த் தேசியத்தினுள் உள்ள ஒரு தனி இனக்குழு என்பதையும், வடகிழக்கு மாகாணம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக உள்ளது போலவே முஸ்லிம்களதும் பாரம்பரிய தாயகமாகவுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்" என்கின்ற உறுப்புரையினையும் அதே போன்று முஸ்லிம்களின் பாதுகாப்பினை எடுத்துரைக்கின்ற இரண்டாவது உறுப்புரையினையும் முறையே வடக்கிலிருந்து 24 மணிநேரத்துள் பலவந்தமாக முஸ்லிம்களை விரட்டி அடித்துள்ளனர்.


முஸ்லிம் கிராமங்கள் மீது படுகொலைகளை மேற்கொண்டு அப்பட்டமாக மீறியவர்கள் இப்படிப்பட்டவர்களுடன் முஸ்லிம் சமூகம் எவ்வாறு நிபந்தனை அற்ற விதத்தில் சமரசம் செய்துகொள்ளமுடியும். அதுமட்டுமல்லாது இன்றைய உலகில் இனத்துவ தேசியவாதமானது எல்லாவிதமான அரசியல் சித்தாந்தங்களையும் ஊடறுத்து புதிய பரிணாமம் பெற்று மிளிர்கின்றது என்பதற்கு செக்கோஸ்லாவாக்கியாவின் உடைவும், காஷ்மீர், செச்னிய புரட்சிகளும் சிறந்த எடுத்துக்காட்டுகள். இதனடிப்படையில் நோக்கினும் வடகிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தனித்தேசியம் என்பதை புலிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே முஸ்லிம்களின் அரசியல் உத்தரவாதமின்றியும், அவர்களின் பங்குபற்றுதல் இன்றியும் தீர்வுகளை தேடும் வகையில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது வடகிழக்கில் இன்னொரு இனப்பிரச்சினையே எதிர்காலத்தில் தோற்றுவிக்கும். இந்த யதார்த்தத்தின் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது முஸ்லிம் மக்களுடனும், முஸ்லிம் மக்கள் பிரதிநிதிகளுடனும் (இங்கு மு.கா. மட்டும் குறிப்பிடவில்லை) கலந்துரையாடலை மேற்கொண்டு இணக்கபாடொன்றுக்கு வரவேண்டும். இதற்கான சமிக்ஞைகளை இப்போதே தெரிவிக்க வேண்டும்.

அதேபோன்று பேரினவாத அரசியல் சாக்கடைக்குள் மூழ்கி அற்பத்தனமான சலுகைக்காக முஸ்லிம் சமூகத்தை படுகுழிக்குள் தள்ளிவிட்டு அரசியல் வியாபாரம் நடாத்திக்கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரசும், அதன் தலைமைத்துவமும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் போது நடந்துகொள்ளும் முறையானது தொடர்ந்தும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அடிமைப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாகவே அமைகின்றது. எந்த



நம்பிக்கையின் அடிப்படையில் தமது அங்கீகாரத்தை வழங்கி முஸ்லிம் சமூகம் அஷ்ரப்பை பாராளுமன்றம் அனுப்பிவைத்ததோ அதற்கு புறம்பாக செயற்படுவது முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை மலினப்படுத்தவே செல்கின்றது. அமைச்சுப் பதவிகளை விடவும், அபிவிருத்திப் பணிகளை விடவும், வடகிழ்க்கில் அரசியல் தீர்வினை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில், முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நியாயமானதும், ஏற்றுக்கொள்ளத் தக்கதுமான தீர்வுக்காக பாடுபடுவதே மு.காவின் தலையாய கடமை என்கின்ற போது மு.காவும் அதன் தலைமைத்துவமும் இவற்றுக்கு முற்றிலும் மாற்றமாக பிரச்சினையில் எவ்விதத்திலும் பங்கு பெறாத பார்வையாளர்கள் போல பேச்சுவார்த்தை வெற்றிகரமாக இடம்பெற வேண்டுமென பிரார்த்திப்பதற்கும், ஆசீர்வதிப்பதற்குமாக முஸ்லிம் சமூகம் அஷ்ரப்பை பாராளுமன்றம் அனுப்பிவைக்கவில்லை. பேச்சுவார்த்தை மேசையில் சமமாக அமர்ந்து முஸ்லிம்களின் பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தை தரப்பினருடன் பேசித்தீர்க்கவேண்டும்



என்பதற்காகவே அனுப்பிவைத்தார்கள். இந்த யதார்த்தங்க்ளை மறந்துவிட்டு விடுதலைப் புலிகளின் எதிர்ப்பாளர்களாவும் பேரினவாதிகளின் நண்பனாகவும் தன்னை இனம்காட்டுவதன் மூலம் சமூகத்துக்கு எத்தகைய விமோசனத்தையும் பெற்றுத்தர முடியாது.

நோர்வே வெளிநாட்டமைச்சர் இலங்கையில் தங்கியிருந்த போது தமிழ்க் கட்சிகள் அவரைச் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொள்ள-தற்கான விருப்பத்தைத் தெரிவித்திருந்ததுடன் எத்தனங்களையும் மேற்கொண்டனர். ஆனால் வடகிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வென வரும்போது மிக முக்கியமாக கலந்தாலோசிக்கப்பட வேண்டிய முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியாக மு.கா மட்டும் கலந்தாலோசனை மேற்கொள்வதற்கான எத்தகைய முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லை. உண்மையாகவும் நேர்மையாகவும் தமது சமூகம் மீது மு.கா தலைமைத்துவத்திற்கு அக்கறை இருந்திருந்தால் நோர்வே வெளிநாட்டமைச்சருடன் பேசுவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அழுத்தம் ஒன்றையும் பிரயோகித்திருக்க வேண்டும்.

நோர்வே வெளிநாட்டமைச்சர் இலங்கைக்கான விஜயம் மேற்கொண்டு ஆளும் பொ.ஐ.முவுடனும் எதிர்க்கட்சியாகிய ஐ.தே.கவுடனும் போச்சுவாத்தையில் ஈடுபட்ட அதேவேளை பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்த முஸ்லிம் மக்கள் பிரதிநிதியாகிய மு.காவுடனும் பேசியிருக்க வேண்டும். விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் பொ.ஐ.முவுடனும் ஐ.தே.கவுடனுமே நட்வொலிபேக்கை பேசுமாறு பணித்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக மு.காவும் அதன் தலைமையும் கடந்த காலங்களில் விட்ட அரசியல் தவறுகளில் அதற்கான சந்தர்ப்பத்தைச் நழுவச் செய்திருக்கிறது. விடுதலைப் புலிகளுடன் இராஜதந்திர ரீதியான அணுகுமுறைகளை ஏற்படுத்தியிருந்தால் இந்நிலை தோன்றியிருக்காது.

முஸ்லிம்களின் உரிமைப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுப்பதற்கான தகுதியும் பக்குவமும் தனக்கு இல்லையென மு.கா தலைமைத்துவம் கருதினால் தொடர்ந்தும் சமூகத்தின் மீது ஏமாற்றுச் சவாரி விடாமல் அதனின்றும் விலக வேண்டும்.

அதே நேரம் முஸ்லிம் சமூகத்திலுள்ள புத்திஜீவிகளும் சிந்தனைவாதிகளும் அவசரமாகவும், அவசியமாகவும் விடுதலைப்புலிகளுடன் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டு தமது சமூகத்தின் தலைவிதியைத் தீர்மானிப்பதற்காக இப்போதே முன்வர வேண்டும். இல்லாவிட்டால் இதற்கு முன்னர் முஸ்லிம் சமூகம் புறக்கணிக்கப்பட்டதைப் போல மீண்டும் புறக்கனிக்கப்பட்டு எமது உரிமைகள் மறுக்கப்பட்டு மீளமுடியாத அதலபாதாளத்திற்குள் தள்ளப்பட்டு அநாதைச் சமூகமாக மாறும் துர்ப்பாக்கி நிலை ஏற்படுவதை தவிர்க்க முடியாமல் போய்விடும்.

- ஸிபான்ஷரா

# இலங்கை வாலிபர் காங்கிரஸ் விட்டுச் சென்ற விழுமியங்கள்!

(இறுதிப்பகுதி)

### இனவாதம் பற்றி வாலிபர் காங்கிரஸ்

வாலிபர் காங்கிரசின் 1928ஆம் ஆண்டு மாநாட்டிலே இனவாதம் பற்றிக் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. நடேசன் அவர்கள் தமது உரையில் அன்று நிலவிய கருத்தை வெளியிட்டார். சிங்களப் பெரும்பான்மையினர் சுயாட்சி நிபந்தனைகளின்படி ஏனைய இனங்களை நசுக்கித் தமது மேலாதிக்கத்தையும், நலன்களையும் நிலை நாட்டக்கூடும் என்ற விவாதத்துக்குப் பதிலளிக்கு முகமாக நடேசன் அவர்கள் நீண்ட காலமாக அந்நியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பெரும்பான்மைச் சமூகத்தினர் சுயாட்சி கிடைத்த புதிதில் தமது அதிகாரத்தைக் குறுகிய சுயநல நோக்கங்களுக்குப் பயன்படுத்துவர், ஆனாலும் சில ஆண்டுகளின் பின்னர் சுயாட்சி முறையில் அனுபவமடைந்ததும், ஒரு தேசம் வல்லமை மிக்கதாகத் திகழ்வதற்கு நாட்டிலுள்ள ஒவ்வொரு சமுதாயமும் பூரண வலுப்பெறும் வகையில் விருத்தி செய்யப்படுவது அவசியமென்பதைக் கற்றுக் கொள்வார்கள் என்று விளக்கினார். அந்தக் கட்டத்தில் குறுகிய எண்ணப்போக்குகள் முற்றுப்பெறுமென்றும் மக்கள் நாட்டு நலனை முதன்மைப்படுத்துவார்கள் என்றும், அவர் நம்பிக்கை தெரிவித்தார். சகல பிரச்சினைகளுக்கும் சுயாட்சி ஒன்றே தகுந்த பரிகாரம் என்றார்.

1930களில் வாலிபர் காங்கிரஸும் தென்புலத்துத் தேசியவாதிகளும் நாட்டிற்கு நன்மை தரத்தக்கதென்று முன்வைத்த இலட்சியம் சுதந்திரமான ஐக்கிய இலங்கையாகும். வாலிபர் காங்கிரஸ் இலங்கையின் தேசியவாதத்துக்கு தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்திருந்தது. 1956ஆம் ஆண்டு புலர்ந்த போது மற்றெல்லோரைப் பார்க்கிலும் ஒரு காலத்தில் வாலிபர் காங்கிரசில் சேர்ந்திருந்தவர்களுக்கு தோல்வியும், ஏமாற்ற உணர்வும், காத்திருந்தன. "நல்லெண்ணமும் நல்லாசிகளும் பொங்கிப் பிரவகிக்கும் நாடொன்றை" தாம் எதிர்பார்த்திருந்ததாக ஹன்டி விசனத்துடன் தெரிவித்தார். "தொண்டைக்குட் சிக்கிய முள்ளைப் போலப் பிரச்சினக்குரியதாக இன்று காணப்படும் மொழி விடயத்தைச் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் சுமூகமாகத் தீர்த்துக் கொண்டார்கள் என்றாலும், இரத்தக் களரியும், திட்டமிட்ட கொலைகளும், புலப்பெயர்வும் நாளாந்த நிகழ்ச்சிகளாகிவிட்டன. இவையாவும் நேற்று இலட்சியவாதிகளாக விளங்கியவர்களின் இன்றைய சுயரூபமாகும். நாளை என்ன நடக்குமோ? அதீத கற்பனைகளில் காலத்தை வீணாக்கமால் இன்றைய அவலங்களை முடிவுறச் செய்து சமாதானம் நிலவும் இலங்கையைத் தோற்றுவிப்பதே இன்றைய அவசரத் தேவை.

### 1931இன் பகிஷ்கரிப்பு

இந்தச் சந்தர்ப்பத்திலே, வாலிபர் காங்கிரஸ் தொடர்பான ஒரு பிரச்சினை பற்றி முடிந்தளவு ஆணித்தரமாக உண்மை நிலை இன்னதென விளக்க விரும்புகிறேன். இது விடயத்தில் வாலிப்ர் காங்கிரஸ் அநியாயமாகவும் சில சமயங்களில் பொல்லாப்புக்கூறும் பாங்கிலும் பழிச் சொல்லுக்கு இலக்காகி வந்துள்ளது. 1931இல் நடைபெற்ற முதலாவது சட்ட நிர்ணய சபைத் தேர்தலை வாலிபர் காங்கிரஸ் பகிஷ்கரித்த சம்பவமே இவ்வாறான அவதூறுக்கு உள்ளான விடயமாகும். இது பற்றிய விரிவான விளக்கம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் தரப்படும் இப்போதைக்கு உண்மை நிலை இன்னதெனச் சுருக்கமாக் குறிப்பிட விரும்புகிறேன். 1931இல் நடைபெற்ற வருடாந்த மாநாட்டில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது". இந்தக் காங்கிரஸ் சுயராஜ்ஜியம் ஒவ்வொருவரினதும், அபகரிக்கவொண்ணாத பிறப்புரிமை என நம்புகிறது. ஆதலால், இந்நாட்டின் இளைஞர்கள் தம் நாட்டிக்குச் சுதந்திரத்தை ஈட்டிக் கொடுக்கும் பொருட்டுத் தமது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறது. "இந்தத் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது." மேலும் சமீபத்தில் ராஜ்ய சபைக் கட்டளையில் அடங்கியுள்ள டொனமூர் திட்டம் சுயராஜ்ஜியத்தை மறுதலிப்பதாக அமைந்துள்ளமையால் இந்தக் காங்கிரஸ் அதனைப் பகிஷ்கரிக்க உறுதி பூண்டுள்ளதுடன் பகிஷ்கரிப்பு இயக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை உருவாக்கும்படி செயற்குழுவுக்கு அதிகாரம் வழங்குகிறது என்றவாறாக அந்தத் திருத்தம் காணப்பட்டது. வாலிபர் காங்கிரசின் தலைவர்கள் மேற்கொண்ட தீவிரமான பிரச்சாரத்தின் பயனாக அபேட்சகர்களும், பழுத்த முதுபெரும் அரசியல்வாதிகளும் யாழ்ப்பாணத்தின் நான்கு ஆசனங்களுக்கும் நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்காது தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்றும் முடிவு செய்தார்கள்.


பிரபலமான பல வரலாற்று ஆசிரியர்களும், அரசியல் ஆய்வாளர்களும் என்ன நடந்தது என்பதை மேலோட்டமாக ஆராய்ந்து விட்டு உண்மையைத் திரித்து எழுதி வந்துள்ளார்கள், அல்லது பகிஷ்கரிப்புக்கான உண்மையான காரணத்தையும், எந்தப் பின்னணியில் அது மேற்கொள்ளப்பட்டது என்பதையும் செம்மையான முறையில் பதிவு செய்யத்தவறி விட்டார்கள். இவர்களில் சிங்களவர்கள், தமிழர்கள், வெளிநாட்டவர்கள் ஆகிய பல அறிஞர்களும் அடங்குவர். இவர்களில் எவரும் ஆங்கிலத்திலும், தமிழிலும் கிடைக்கக்கூடிய பிரதான ஆதாரங்களைக் காட்டினர் இல்லை. யாழ்ப்பாணம் சென்று வாலிபர் காங்கிரசில் அங்கம் வகித்தவர்களைச் சந்தித்து விடயத்தை விசாரிக்கவும் முயலவில்லை. வாலிபர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள் 1980கள் வரை வாழ்ந்திருந்த போதிலும் அவர்களிடம் இந்தப் பகிஷ்கரிப்புப் பற்றியும், எந்த ஆராய்ச்சியாளரும், உசாவியதில்லை. சம கால வரலாற்று ஆசிரியர்கள் இதைக் கவனத்தில் கொள்வார்கள் என நம்புகிறேன். பிற்காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் பின்னணியில் இந்நாட்டுத் தமிழ் மக்களின் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றுக்குக் களங்கம் கற்பிக்க முயன்ற சில சந்தர்ப்பவாதிகள் கட்டவிழ்த்து விட்ட திரிபுப் பிரச்சாரம் இனிமேலும் நடைபெறாது என நம்புகிறேன். 1924முதல் 1934வரையான காலப்பகுதி இந்நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தசாப்தமாகும். இந்த தசாப்த காலத்தில் ஹன்டி பேரின்பநாயகம் அவர்களினதும், வாலிபர் காங்கிரசினதும் தலைமையில் தமிழ் மக்கள் அணிதிரண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கத் துணிந்தார்கள், பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுதலை கோரினார்கள். சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்க முயன்றார்கள், இன, பிராந்திய, மதச்சார்புகளை எல்லாம் கடந்து தேசிய ஒற்றுமையை வலியுறுத்தினார்கள். 1966இல் கூட ஹன்டி அவர்களே இதனைப் பதிவு செய்தார்.

"பொறுப்பு வாய்ந்த சிங்களத் தலைவர்கள் பலர் இந்த முடிவிலும் இதனைத்தொடர்ந்த பகிஷ்கரிப்பு இயக்கத்திலும், இனவாதம் முதன்மை பெற்றிருந்தது என்று மீண்டும் மீண்டும் நிலைநாட்ட முயன்றிருக்கிறார்கள். ஒருமுறை எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவும், நானும் ஒரு மாநாட்டில் பிரசன்னமளித்திருந்த வேளையில் மேற்படி பகிஷ்கரிப்பு இயக்கம் இனவாத நோக்கத்தைக் கொண்டிருந்தது என்ற கருத்தை அவர் தெரிவித்த போது, நான் உண்மை நிலையை எடுத்து விளக்கியமை ஞாபகத்தில் இருக்கிறது. இது விடயத்தில் மிகப்பிரிந்திய குற்றவாளி எச்.ஏ.ஜே.ஹுலுகல்ல அவர்களாவர். டி.ஆர்.விஜயவர்த்தன பற்றிய வரலாற்றில் அவர் இந்த அவதூறை மீண்டும் குறிப்பிட்டிருக்கிறார். எங்கள் வாழ்க்கையையும் சுதந்திரமான ஐக்கிய இலங்கையை உருவாக்கும் பொருட்டு இடையறாது போராடியதன் பயனாக எமக்கு ஏற்பட்ட இழப்புகளையும் அவதானித்தவர்கள் இந்த அவதூறை ஏற்கமாட்டார்கள். டொனமூர் அரசியல் சீர்திருத்தங்கள் பரிபூரண சுதந்திரத்தை வழங்க இடமளியாமல் இருந்ததன் காரணமாகவே பகிஷ்கரிப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. (A Tribute to C. Subramaniam. The Skande April 1966 - P - 31 - Thirumakal Prass, Chunnakkam.)

வாலிபர் காங்கிரசுக்கு என்றுமே ஆதரவு வழங்கியும் டொனமூர் அரசியல் சீர்திருத்தங்களுக்குக் கண்டனம் தெரிவித்தும் வந்த டெய்லி நியூஸ் பத்திரிகை, யாழ்ப்பாணப் பகிஷ்கரிப்பை வரவேற்றது. அரசியலில் நேர்மையான கொள்கைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் என்று நாட்டின் ஏனைய பாகத்தைச் சேர்ந்த அபேட்சகர்களைக் கண்டித்து வந்த அந்தப் பத்திரிகை நியமனப் பத்திரங்கள் தாக்கலான தினத்தன்று எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் "தூக்கத்தில் மூழ்கச் செய்யும் இந்தப் பரிதாபக் காட்சியில் மக்களை விழித்தெழச் செய்யும் அம்சமாக யாழ்ப்பாணத்துச் செய்தி விளங்குகிறது" என்று குறிப்பிட்டது. "யாழ்ப்பாணத்திலே மக்களின் அபிப்பிராயம் மகத்தான சக்தி வாய்ந்ததாக உள்ளது. அதனை மீறிக் காரியமாற்ற எத்தனிப்பவர்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரிக்கொட்டுவோராவார்கள். அரசியலில் வீறு மிக்கவர்களாகவுள்ள யாழ்ப்பாண மக்கள் எந்த நெருக்கடிக்கும் முகங் கொடுக்கக்கூடிய மனத்திடமும் பொதுநலப் பற்றும் உடையவர்களாக விளங்குகிறார்கள்." என்று அதன் ஆசிரியர் எழுதினார். (Ceylon Daily News, 4 May 1931) மேற்படி பகிஷ்ரிப்பு இயக்கத்தைத் திரித்து எழுத முற்பட்ட வரலாற்றாசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் பொதுமக்களின் அபிப்பிராயம் எத்தகைய வல்லமையுடையதாக விளங்கிற்றென்பதை டெய்லி நியூஸ் பத்திரிகை புரிந்து கொண்ட அளவுக்குக் கிரகிக்கத் தவறிவிட்டார்கள். அந்தக் காலகட்டம் குறுகியதொன்றாகும். அப்பத்திரிகை வாலிபர் காங்கிரசுக்குப் பக்கபலமாக நின்று பணியாற்றியது. லண்டனில் இருந்து பிலிப் குணவர்த்தன எழுதினார்.


"பழமை சமுதாயப் பிற்போக்கு, ஏகாதிபத்திய அடக்குமுறை ஆகியவற்றைக் கட்டிக்காக்கும் சகல சக்திகளுக்கும் எதிரான புரட்சிப் போராட்டத்திலே இலங்கை இளைஞர்களும், யுவதிகளும் சீனா, இந்தியா, இந்தோனேசியா, இந்தோ - சீனா, கொரியா, ஏன் பிலிப்பைன்ஸ் தீவுகளில் கூட ஈடுபட்டுள்ள வாலிபர்களுடன் தோளோடு தோள்நின்று போராடும் நாள் வருமா என்று நான் ஏங்கியதுண்டு. கடந்த சில ஆண்டுகளாக யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் மாத்திரமே இலங்கையில் அரசியல் விவேகத்துடன் செயற்படும் இயக்கமாக விளங்கி வந்தது... யாழ்ப்பாண மக்கள் எமக்கு வழிகாட்டியுள்ளார்கள். ஏகாதிபத்திய பிரிட்டிஷாரிடமிருந்து உடனடியாகப்பூரண சுந்திரம் பெறுவதற்கான மாபெரும் போராட்டத்துக்கு அறைகூவும்படி அவர்கள் தமது தலைவர்களை வற்புறுத்தி வந்துள்ளார்கள். மாபெரும் வீரம் பொருந்திய சிங்கள மக்கள் இதன் தாற்பரியத்தை உணர்ந்து அவர்களோடு இணைந்து கொள்வார்களா? மாபெரும் போராட்டம் ஒன்றை நாம் எதிர்கொள்ள இருக்கிறோம். தேர்தலைப் பகிஷ்கரிக்கும் தீர்மானம் இதற்கான ஒரு சமிக்ஞை மாத்திரமே. நாம் எதிர்நோக்கவிருக்கும் பெரும் போராட்டத்துக்கு வெகுசனங்களைத் தயார்படுத்த வேண்டியது ஒவ்வொரு சிங்களவரினதும் கடமையாகும் (Searchlight, 20-27th June, 1931)

1956இல் மொழிப்பிரச்சினை தொடர்பான



எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க

வாதப்பிரதிவாதங்கள் உச்சநிலையை எட்டியிருந்த வேளையிலே, தமிழ் மக்கள் பிற்போக்குவாதிகள் என்றும், தேசிய விடுதலைப் போராட்டத்தை எதிர்த்தவர்கள் என்றும் இழிவு செய்வதை சிங்களத் தலைவர்கள் நாகரீகமாக்க முயன்று வந்த வேளையிலே இலங்கை கம்யூனிசக் கட்சியின் சார்பிலே பீற்றர் கெனமன் அவர்கள் பாராளுமன்றத்தில் உண்மை நிலையை எடுத்துக்கூறி வரலாற்றை உள்ளவாறு விளக்கினார். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் பணியை விவரித்த கெனமன் புதிய அரசியல் யாப்பு சிங்கள மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கியமை காரணமாகவே பகிஷ்கரிப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது என்ற குற்றச்சாட்டை மறுதலித்தார். "தென் பகுதி அரசியல் இயக்கத்தின் பலவீனமே வடபகுதியில் தேசிய இயக்கம் சீரழிவதற்கும், செயலிழப்பதற்கும் பெரிதும் ஏதுவாயிற்று!"



ஹன்டி பேரின்பநாயகம்

பகிஷ்கரிப்பு இயக்கம் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் நோக்கமாக மேற்கொள்ளப்பட்டதா? அன்றைய காலகட்டத்தில் நிலவிய சூழலில் அது விவேகமான அரசியல் தீர்மானமாக அமைந்ததா? இந்த இரண்டு வினாவுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்து கொள்வது அவசியம். பின்னைய கேள்வி விவாதத்துக்குரியது. முன்னையது அப்படிப்பட்டதன்று. அன்றைய காலகட்டத்திலும் அதற்குப் பின்னரும் குடியேற்ற ஆதிக்கத்துக்கு எதிரான தேசிய எழுச்சியிலும் கலாசாரப் பொதுநோக்கிலும் என்றுமே ஈடுபடாதிருந்த கல்விமான்களும், பத்திரிகையாளர்களும் அநாமதேயக் கட்டுரையாளர்களும் பகிஷ்கரிப்பு இயக்கத்தை முன்வைத்து அன்றைய தலைமுறையைச் சேர்ந்த மக்களைப் பண்பற்ற வார்த்தைகளால் இழிவுபடுத்தும் போக்கொன்று நிலைபெற்று வந்துள்ளது. அன்றைய தலைமுறையினர் உயர்ந்த இலட்சியங்களைக் கடைப்பிடித்தனர். பகிஷ்கரிப்பு இயக்கமானது நிலைபேறான பல்வேறு இலட்சியங்களையும், இலக்குகளையும் தழுவிய ஓர் இயக்கத்தின் வரலாற்றில் ஒரு சம்பவம் மட்டுமேயாகும்.

1931ஆம் ஆண்டிலிருந்து ஹன்டி பேரின்பநாயகத்தின் வாழ்க்கையில் பல இன்னல்கள் குறுக்கிட்டன. அரசியலிலும் சரி சமய விடயங்களிலும் சரி, தமது கொள்கைகளுக்காக அவர் பல தியாகங்களைச் செய்ய நேர்ந்தது. "அவருடைய அபிமானிகளில் ஒருவர் குறிப்பிட்டது போல ஹன்டி பேரின்பநாயகம் மனிதர்களை உருவாக்கும் மனிதனாக விளங்கினார். வட்டுக்கோட்டையில் ஆரம்பித்து சட்டத்துறை வழியாகக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு வந்து சேர அவர் நீண்டதொரு பயணத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. அவர் கடந்த வழியெல்லாம் எதிரிகள் அபிமானிகள் இருசாரருமே பல்வேறு தடைகளைக் குறுக்கே வைத்தார்கள். அவரது வெற்றிகளையும், தோல்விகளையும், எடைபோடுவதே அவர்களின் பொழுதுபோக்காயிற்று.

ஆனால், மனத்திடம் மிக்க இலட்சியவாதியான ஹன்டி பேரின்பநாயகம் இவற்றையெல்லாம் துச்சமெனக் கொண்டார். பகவத் கீதையின் உபதேசத்துக்கு அமைய கடமையைச் செய்து பயனை எதிர்பாராத கர்மவீரனாக விளங்கினார். (N.Sabaratnam, 'A maker of men, The builder of Kokuvil Hindu' Homage to guide S.Handy Perinbanayagam Edited by S.Sivanayagam and S.Ratnapragasam Ceylon Printers, Colombo, January 1978)

## சீலன் கதிர்காமர்
## தமிழில் காவலூர் ராஜதுரை

இதைவிடவும் மனதைத் தொடுவதாக அமைந்தது பாராளுமன்றத் தேர்தலில் அவரை எதிர்த்தவரின் பாராட்டு. கே. கனகரத்தினம் சொன்னார். "நான் உட்பட ஐந்து பேரோடு முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதிக்குப் போட்டியிட்டுத் தோற்றார். அரசியல் அறிவு, பொதுச்சேவைக்கான நெடுங்காலப் பயிற்சி ஆகிய இரண்டு

➡ 19

நன்றி - நூலகத்திட்டம்



# குழந்தை பெறும் குழந்தைகள்!

எனது ஆத்மா.......!

எனது உணர்வுகள்.......!

எனது குடும்பம்.......!

எனது சொந்தங்கள்.......!

எல்லாமே ஏதோ பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பேசிக் கொண்டிருந்தவை போல் ஓர் உணர்வு. உண்மை தான். யுத்தம் தன் கோரக் கரங்களால் அழித்தவை ஆயிரம். நாமே அழித்துக் கொள்பவை பல்லாயிரம். ஆம் நாம் அழித்துக் கொண்டிருக்கிறோம். நாம் எம்மை மீள் சிந்தனைக்கு உட்படுத்த தயாரில்லை.

குடும்பம் என்பது உலக நாகரீகத்தின் முதற்கட்டமைப்பு என்றும் இதில் இருந்து தான் உலக நாகரீகமே தோற்றம் பெற்றதாகச் சொல்கிறார்கள்.

குருவை வணங்கவும், பெற்றோரை மதிக்கவும், மூத்தவரை கனம் செய்யவும். இப்போதும் கிராமங்களில் இவை நடைமுறையில் உள்ளன. ஆனால் குருவும், பெற்றோரும், மூத்தோரும் அவர்களாக இல்லாது போய் விட்ட பின்பு இன்னும் மதிக்கப்பட வேண்டியவர்களா என்று எழும் கேள்வியைத் தவிர்க்க முடியவில்லை.

இன்றைய பத்திரிகைகளை நீங்கள் புரட்டுவீர்களாயின் உங்களுக்கு அதிர்ச்சி தரக் கூடிய செய்திகள் நிச்சயம் இருக்கும்.

- ஓர் பெண் பெரிய பெண் ஆனதில் இருந்து அவளுடைய தகப்பன் அவளை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளார். சுமார் நான்கு மாதங்களாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தகப்பனால் அக்காவும் தங்கையும் பயமுறுத்தி நீண்ட நாட்களாக வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அதற்கு அவர்களது பாட்டியும் உடந்தை.
- 11 வயது சிறுமி ஒரு குழந்தைக்குத் தாயாகி உள்ளார். காரணம் தாயின் காதலன்.
- கேகாலையில் 12 வயதுச் சிறுவன் மீது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு நபர்களால் பாலியல் வல்லுறவு. வல்லுறவின் பின் சிறுவன் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளான். வழக்கு விசாரணையில் போது குற்றம்சாட்டப்பட்ட நபர்களில் ஒருவர் சுகவீனத்தினால் மரணம்.
- சித்தாண்டியைச் சேர்ந்த 18 வயதுப் பெண் அக்காவின் கணவரினால் பாலியல் ரீதியாகப் பாவிக்கப்பட்டார். இதன் மூலம் குழந்தை உருவாகியது. குழந்தை உருவானது தெரிந்தவுடன் பெற்றோர்கள் உட்பட அப்பெண்ணை வெளியில் துரத்தி விட்டார்கள். அந்தப் பெண் மட்டக்களப்பு வைத்தியசாலையில் குழந்தையைப் பெற்று அநாதை இல்லத்தில் கொடுத்து விட்டு வீட்டார் கைவிட்டதினால் பெண்கள் விடுதியில் தங்கி உள்ளார்.
- கொக்குவில் கொலனியைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது முதல் கணவன் கைவிட்டதால் வேறொருவருடன் வாழ்ந்து வந்துள்ளார். இவரது இரண்டாவது கணவன் முதல் கணவர் மூலம் பிறந்த சிறுமியை வேறு இடத்திற்கு கூட்டிச் சென்று பாலியல் ரீதியாக பயன்படுத்தியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக மனைவி கணவனுடன் சண்டை பிடித்த போது மனைவியை இவர் சித்திரவதை செய்தே கொலை செய்துள்ளார். இவருக்கு எதிராக சட்சி சொன்னதற்காக இவர் அயலவர்களுடன் சண்டை பிடித்துள்ளார். தற்போது பிணையில் விடப்பட்டு 14 வயது சிறுமியுடன் வாழ்ந்து வருகின்றார். இப்போது இப்பெண்ணுக்கு இரண்டு குழந்தைகள்.
- தாய் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்று சென்றவுடன் 16 வயதான சிறுமி அவர்களுடைய சித்தப்பாவில் தங்கியிருந்துள்ளார். சித்தப்பாவின் மூலமாக இச்சிறுமிக்கு குழந்தை உருவாகியது. இச்சிறுமியை வேறு இட வைத்தியசாலைக்கு அனுப்பி கருவை அழித்துள்ளார்கள். சித்தப்பா தன்னோடு அச்சிறுமியை சேர்த்து வைக்கும்படி மனைவியைத் துன்புறுத்துகின்றார்.

இப்படியான செய்திகள் நமக்கு எதை உணர்த்துகின்றன.

உலகின் நாகரீகமானது எதை நோக்கி வளர்ச்சி அடைந்து கொண்டு செல்கின்றது. இப்படியான சம்பவங்களுக்கு காரணம் என்ன?

சிறுமிகள், சிறுவன்கள், பெண்கள் மீது உறவினர்களால் அல்லது அவர்களுக்கு நெருங்கிய நபர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துச் செல்வதைக் காண முடிகின்றது.

முன்னைய காலங்களில் இப்படியான சம்பவங்கள் இடம் பெற்று இருந்தாலும் அதை வெளிப்படுத்துவதற்கான சூழ்நிலைகள் இல்லாது இருந்தன.

ஆனால் இன்று நிலைமை மாற்றமடைந்து வருகின்றது. இது ஒன்றும் விழிப்புணர்வினால் ஏற்பட்டதல்ல. மாறாக அவர்கள் தங்களுக்கு ஏற்படும் கொடுமைகளை தாங்கிக் கொள்ள முடியாமல் வெளி உலகிற்கு வருகின்றார்கள். இதன் மூலம் இவை வெளி உலகிற்கு தெரிய வருகின்றன.

இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினை காரணமாக வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் பெண்கள் பொதுவாக எல்லாச் சமூகத்திலும் காணப்படுகின்றார்கள். சிறுமிகள் மீதான வல்லுறவுச் சம்பவங்களுக்கு மூலகாரணமாக, வேலை வாய்ப்பைத் தேடி பெண்கள் வெளிநாடு செல்வதைக் குறிப்பிடுகின்றார்கள்.


பெண்கள் வேலை வாய்ப்பிற்காக வெளி-

நாடு செல்வதற்கான அனுமதியை இந்த ஆண் ஆதிக்க சமூகம் எவ்வித கேள்விகளுக்குக்கும் உட்படுத்தாமல் வழங்கி பெண்களை பணப்பண்டமாகச் சுரண்டுவதோடு, அனேகமான பெண்கள் கணவன்மார்களினாலேயே அனுப்பி வைக்கப்படுகின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக குழந்தைகள் முக்கியமாக சிறுமிகள் தகப்பனின் பாதுகாப்பில் அல்லது உறவினர்களிடம் விடப்படுகின்றார்கள். இப்படி விடப்படும் சிறுமிகள் தகப்பனினால், அல்லது உறவினர்களினால் மிரட்டப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவர்கள் தங்களுக்கு எதிரான இச்சம்பவங்கள் தொடர்பாக வெளியில் சொல்லக்கூடாது என்று பயமுறுத்தப்படுவதுடன் சித்திரவதைக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இச்செய்திகளை வெளியிடும் பத்திரிகைக்காரர்கள் கூட தாய் இல்லாததனாலேயே இப்படியான சம்பவங்கள் நடைபெறுகின்றன என்கிறார்கள்.

இதன் மூலம் ஒரு குழந்தைக்கு, தாயானவளால் மட்டும் தான் பாதுகாப்பு வழங்க முடியும் என்று நினைக்கத் தோன்றுகின்றது. ஏனெனில் வெளிவந்த செய்திகளில் 90 வீதமானவை தாயார் இல்லாத நிலையிலேயே நடைபெற்றுள்ளன.



இதன் மூலம் ஒரு தகப்பனின் சமூகப் பெறுமானம் என்பது கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. ஒரு தகப்பனானவனுக்கு தன் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டிய கடமை இல்லையா? அப்படியானால் தகப்பனானவன் ஒரு குழந்தைக்கான கருவின் உருவாக்கத்தில் பங்களிப்பவன் மட்டும் தானா?

அதேபோல் தகப்பனானவன் வெறும் வக்கிரம் பிடித்த மிருகம். அவனுக்கு தனது மகளான 11 வயதுச் சிறுமியும் 30 வயதுப் பெண்ணும் ஒன்று தான். அவன் தேவை, சிந்தனை எல்லாம் பாலியல் ரீதியாக இன்பம் பெறுதல் மட்டுமே என்று கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோமா?

ஆனால் தாயின் பாதுகாப்பில் இருக்கும் சிறுமிகளுக்கு எதிராக இப்படியான சம்பவங்கள் மேற்கொள்ளப்படுவதில்லை என்று அர்த்தம் கொள்ளலாகாது.

எங்கள் சமூக கட்டமைப்பின் மூலம் பெண்

பேசுவதில் இருந்து தன்மீது பலாத்காரமாக திணிக்கப்படும் எதனையும் எதிர்க்கும் திராணியற்றுத் தான் காணப்படுகின்றாள். இப்படியாக பெண்ணானவள் பெண்ணுடலைக் கொண்ட ஆண் சிந்தனையாளி என்று சொல்லுமறவிற்கு சிந்தனைகளால் ஆண்வயப் படுத்தப் பட்டிருக்கிறாள்.

இச்சிந்தனைகளால் பயமுறுத்தப்பட்டிருக்கும் பெண்கள் ஆண்களின் தவறான நடவடிக்கைகளைக் கூட தட்டிக் கேட்கும் திராணியற்று கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

வீட்டில் தாய் இருக்கும் போதே அவளுக்கு முன்னாலேயே பிள்ளையை வல்லுறவுக்குள்ளாக்கிய எத்தனையோ தகப்பன்மார் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தாய் தட்டிக் கேட்கும் போது அவளை அடித்து நொருக்குவதும், பயமுறுத்துவதும் நடைபெறுகின்றது. இப்படியான சம்பவங்கள் குடும்ப மானம் என்ற பெயரில் மூடி மறைக்கப்பட்டு பூட்டிய வீட்டிற்குள் தாராளமாகவே அரங்கேறுகின்றன.

பிள்ளைகள் பாதுகாப்பற்ற நிலையில் மன உளைச்சல்களுக்கு உள்ளாகின்றார்கள். வீட்டிலிருந்து தப்பி ஓடக் கூடியவர்கள் ஓடிவிடுகின்றார்கள். மற்றவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு அடிமையாக்கப்படுகின்றார்கள்.

மற்றையது பாதிக்கப்பட்ட சிறுமிகள், பெண்களின் சிந்தனையில் திணிக்கப்பட்டு இருக்கும் மிகப் பெரிய விசம் கற்பு. தான் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டால் அதை வெளியில் சொல்வது அவர்களுடைய சமூக நிலையில் மோசமான தாக்கத்தினைச் செலுத்தும். இதன் காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகள் வெளியில் சொல்லாது தங்களுக்குள் எல்லாவற்றையும் மூடிக் கொள்ளவும் சகித்துக் கொள்ளவும் பழகிக் கொள்கிறார்கள்.

இதையும் மீறி இவர்கள் இவ்விடயம் தொடர்பாக அம்மா, மாமி, சித்தி, பாட்டி போன்ற உறவுகளுக்கு முறைப்பாடு செய்யும் போது, அவர்கள் இது சாதாரண விடயம் என்றோ அல்லது ஆண்கள் எல்லாரும் இப்படித் தான் சமாளித்துப் போ என்று சொல்வதுடன் அவர்களும் சேர்ந்து அச்சிறுமிகளைப் பயமுறுத்துவதுடன் அதிர்ச்சிக்கும் உள்ளாக்குகின்றார்கள்.

இது ஆண் சிந்தனைகளுக்கு எவ்வளவு தூரம். பெண்கள் பழக்கப்பட்டுப் போய் இருக்கின்றார்கள் என்பதற்கு நல்ல உதாரணம்.

ஆண் ஆதிக்க சமுதாயத்தின் இவ்வகையான இரட்டை வாழ்க்கை பற்றி யாரும் கேள்வி எழுப்புவதில்லை. வீட்டிற்குள்ளே வைத்துத் தங்கள் சொந்தப் பிள்ளைகளை வல்லுறவுக்கு உள்ளாக்குவதும் வெளியில் "கற்புடமை" பற்றி பேசுபவர்களும் இவர்கள் தான்.

பெண்களை சமய கலாசார சிந்தனைகளால் மீண்டும் மீண்டும் பயமுறுத்துவதுடன், ஆண்களால் மேற்கொள்ளப்படும் வக்கிரத்தனங்கள் வெளியே தெரியாமல் தடுப்பதற்கான ஆயுதமாகவும் இச்சமய கலாசாரப் பெறுமானங்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

"PEACE" என்ற அமைப்பின் செயலாளரான மொறீன் செனவிரத்ன என்பவர் 11 வயது சிறுமி ஒரு குழந்தைக்குத் தாயானது பற்றித் கருத்துத் தெரிவிக்கையில், "நயனாவுக்கு (இது உண்மைப் பெயர் அல்ல) நேர்ந்த இந்தச் சம்பவம் அரிதான விடயமல்ல. இவ்வகை நிகழ்ச்சிகள் நாட்டில் பரவலாக நடைபெறுகின்றன. சிறு பிள்ளைகள் மேல் பெரியவர்கள் நடத்தும் இச்செயல்களின் தாக்கம் பற்றி பலர் உணர்வதில்லை." என்கிறார்.

அவரது கருத்துப்படி பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் கீழ் மட்டத்தில் உள்ளவர்களிடம் மட்டுமல்ல, மத்தியதர வர்க்க, மேல்தட்டு வர்க்க நிலைகளில் கூட தாயாராளமாக மேற்கொள்ளப் படுகின்றன என்பதே.

இங்கு தவிர்க்க இயலாமல் கலாசாரம், குடும்ப அமைப்பு தொடர்பாக கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. கலாசாரம் என்பது என்ன? குடும்ப அமைப்பு என்பது என்ன? இதில் பெண்கள் வகிக்கும் பங்கு என்ன? ஆண்கள் வகிக்கும் பங்கு என்ன?

ஆண்கள் மேய்ப்பர்களாகவும், பெண்கள் அடிமைகளாகவும் உள்ளது தான் கலாசாரமா அல்லது குடும்பமா? இங்கே கலாசாரம் சொல்கிற கற்பு நிலை என்பது என்ன?

முதலில் தகப்பனில் இருந்து ஒவ்வொரு ஆணுக்கும் அடிமையாயிரு. அல்லது இன்பமளி என்பதா? அது மற்றவர்களுக்கு தெரியாமல் இருந்தால் சரி என்பதா?

பாலியல் ரீதியாக உறவினர்களால்

பாதிக்கப்படும் சிறுமிகளுக்கு நாம் எதைக் கொடுக்கின்றோம். இந்த சமூகமும், அதன் கட்டமைப்புமே விபச்சாரத்துக்கான அடிப்படைகளைக் கொண்ட விளைநிலம் என்று சொல்லலாமா?

ஏனெனில் ஒரு பெண்ணுக்கான கற்புடமை பற்றி தொண்டை கழியக் கத்திக் கொண்டு அதே பெண்ணை வீட்டுக்குள் வைத்து வன்முறைக்கு உள்ளாக்குவது எந்த தாற்பரியத்தில்?

இங்கே தவிர்க்க முடியாமல் ஆண் ஆதிக்க வெறிக்கு கட்டுப்படுவது தான் கற்புடமை என்று கொள்வதா?

இப்படியான சம்பவங்கள் அதிகரிப்பதை வெறும் யுத்தச் சீரழிவுகள் என்றும், பொருளாதார சீரழிவு என்றும் எடுத்துக் கொண்டு விட முடியாது. இதன் பின்னால் பெண்களைப் பயமுறுத்தும் மிகப்பெரிய கட்டமைப்பே உள்ளது. இப்பயம் உடல் ரீதியானது மட்டுமல்ல உள ரீதியானதும் கூட.

முறைப்பாடு செய்யச் சென்றால் பொலிஸார் இவ்வாறான விடயங்களில் அதிக அக்கறை காட்டுவதில்லை.

நயனாவிற்கு நேர்ந்த அனுபவம் இது.

நயனா (11 வயது சிறுமி) தனது அம்மாவின் காதலன் மூலம் தான் தொடர்ந்து சித்திரவதைக்கு உள்ளாவதை தாங்கிக் கொள்ள முடியாமல் தனது குழந்தையுடன் காலி பொலிஸ் நிலையத்திலுள்ள "பிள்ளைகளைப் பாதுகாக்கும் பெண்கள் நிலையத்திற்குச் சென்ற போது, "நேரம் பிந்திவிட்டது. நாங்கள் முறைப்பாடுகளை எடுத்து முடித்து விட்டோம். நாளைக்கு வா" என்று ஒதுக்கப்பட்ட நிலையில் வீடு திரும்பியருக்கிறாள்.

இதன் பின் இவள் தனது சித்தி முறையான பெண்ணிடம் முறையிட்டுள்ளாள். சித்தி எடுத்த முயற்சியின் காரணமாகவே நயனா வழக்கு விசாரணைக்கு வந்துள்ளது. இது இவ்வாறாக பாதிக்கப்படுபவர்கள் தொடர்பாக சட்டம் எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகிறது என்பதற்கு நல்ல உதாரணம்.

இதன்முடிவு எங்கே? சிறுவர்கள் இந்த உலகில் இருந்து அந்நியப்பட்டு பைத்தியக்காரர்களாகி விடுவார்கள். சட்டம் கைகளை கட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும்.

அதேநேரம் சிறுவன்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை யாரும் கவனத்தில் எடுப்பதில்லை. ஆண் நிலைப்பட்ட சிந்தனையான கற்பு நிலையில் இருந்து பெண்களுக்கு எதிரான சம்பவங்கள் பற்றி அக்கறைப்படும் சிலரும் சிறுவன்கள் விடயத்தில் கண்டும் காணாது இருந்து விடுகிறார்கள். பெரியவர்களால் பாதிக்கப்படும் சிறுவர்கள் மிகவும் மோசமான மன உழைச்சல்களுக்கும் உடல் ரீதியான உபாதைகளுக்கு உள்ளாகின்றார்கள்.

இவர்கள் இவ்விடயம் பற்றி பயத்தின் காரணமாக வெளியில் தெரிவிப்பதில்லை. என்ன தான் குடும்பம் தூய்மையின் பெயரால் நிறுவப்பட்டிருந்தாலும், இப்படியான விடயங்கள் பெண்களாலும் கண்டும் காணாது விடப்படுவதுடன் அச்சிறுவர்கள் சிறுவயதிலேயே சீரழிந்து போவதற்கு சிறு வயதில் மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியான பாவிப்புகள் அடித்தளமிடுகின்றன.

நாம் சமூகச் சீரழிவு பற்றிக் கதைக்கும் போது சிகரட் பிடிப்பதையும், ஒரு பால் உறவில் ஈடுபடுவதையும் பற்றி தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் எல்லாச் சீரழிவுகளுக்கும் வேராக இருப்பவர்கள் பெரியவர்களே. அவர்களால் ஊற்றப்படும் விஷம் தான் பின்பு சமூகச் சீரழிவுகளாக உருவெடுக்கின்றது என்பதை வசதியாக மறந்து விடுகின்றோம். இவர்களால் பாதிக்கப்படுபவர்கள் தான் பாலியல் வல்லுறவு, ஒரு பால் உறவு, யாரையும், எதையும் மதிக்காமை போன்றவற்றிக்கு ஆளாகின்றார்கள்.

சிறுவர் பாதுகாப்பு சபை தலைவர் கலாநிதி ஜரேந்தி சில்வா தெரிவித்த கருத்தின்படி இலங்கையில் 20% சிறுவன்களும், 10% சிறுமியர்களும் பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்யப்படுகின்றார்கள். இதில் வெளிநாடு சென்ற பின் தகப்பன்மாரினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்படும் பெண் பிள்ளைகள் அதிகம் என்று தெரிவித்துள்ளார்.

இங்கே ஒவ்வொரு சிறுவன், சிறுமிக்குமான பாதுகாப்பை உத்தரவாதப் படுத்த வேண்டியது தவிர்க்க முடியாததாகின்ற அதேவேளை, இவ்விடயத்தில் பெண்கள் அமைப்புகள், மனித உரிமைகள் அமைப்புகள் பரிகாரம் காண்பவைகளாக இல்லாமல் இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கும், போலியான இரட்டைத் தன்மையுள்ள கலாசார சமூக, குடும்ப கட்டமைப்புகள் தொடர்பாக கேள்வி எழுப்புவதும், இவை தொடர்பான சரியான கருத்துக்களை முன்வைப்பதும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதும் அவசியமாகின்றது.

இல்லாது விட்டால் அநாதைகளான குழந்தைகள் குழந்தைகளைப் பெற்றுக்

றேவ்

நன்றி - நூலகத்திட்டம்



மலையகம்:

# சாதாரணமாகி வரும் பாலியல் வன்முறைகள்!

பெப்.18ம் திகதி எளப்படை கீழ்ப்பிரிவைச் சேர்ந்த 8 வயது சிறுமியை தம்பிராஜா என்பவர் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவம் இடம் பெற்றுள்ளது. சந்தேக நபரான தம்பிராஜா நோர்வூட் பொலிஸாருக்கு ரூபா 500 கொடுத்து சமரசம் செய்துள்ளார். எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில் இவரை பொலிஸார் விடுவித்துள்ளனர். இதற்கு பிரபல தொழிற்சங்கம் ஒன்றும் துணை-போயுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

பொகவந்தலாவ ஹோலிறோசரி த.ம.வி மாணவி புவனலோஜினியை (தரம் 13) கடந்த 20ம் திகதி அதே பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியரான விஜயகுமார் என்பவர் இரவு வற்புறுத்தி அட்டன் இரவு விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்றும், இதனை நேரடியாக மாணவியின் தந்தை கண்டு அதிபருக்-கும், கல்வித் திணைக்களத்திற்கும் அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மஸ்கெலியா சென் ஜோசப் த.ம.வி. மாணவியை (தரம்10) பாலியல் சேஷ்டைக்கு உட்படுத்திய பொகவந்தலாவையைச் சேர்ந்த ப.சந்திரசேகரன் என்ற ஆசிரியரை பொகவந்தலாவ கெர்கஸ்வேல்ட் தமிழ் மகாவித்தியாலயத்திற்கு அட்டன் கல்வி திணைக்களம் இடம் மாற்றியுள்ளது. அம்பகமுவ பிரதேச சபை-யால் இப்பிரச்சினை கடுமையாக எழுப்பப்பட்டதன் பயனாக பெப்.27 அன்று சந்தேகநபரான இவ்வாசிரியர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொகவந்தலாவ செர்கஸ்வேல்ட் இல 2 தமிழ் வித்தியாலய மாணவி ஜெயந்திமாலாவை (தரம்9) 1999ம் ஆண்டு பாலியல் சேஷ்டைக்கு உள்ளாக்கிய என்.தமிழ்வாணன் பொகவந்தலாவ பொலிஸாரால் நடவடிக்கை ஏதுமின்றி விடுவிக்கப்பட்டுள்ளார். அட்டன் கல்வித் திணைக்களம் இவருக்கு இடமாற்றத்தை வழங்கியதோடு நின்று விட்டது.

நோர்வூட் நியூவெளி தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் கடந்த வருடம் 11ம் தர மாணவியை வல்லுறவுக்குட்படுத்தியுள்ளார் என்று தெரியவருகிறது. இவருக்கும் இவரைப் போன்றவர்களுக்கும் அட்டன் கல்வி அலுவலகம் கருணை காட்டி வருகின்றது என்று குற்றம் சாட்டுகின்றனர் இப்பாடசாலை மாணவர்கள்.

இவ்வாறான சம்பவங்கள் மலையகத்தில் சர்வ சாதாரணமாகி வருவது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் மகளிர் அமைப்புக்கள் இது விடயத்தில் பாரபட்சம் காட்டுவது தான் கவலைக்குரிய விடயம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக தினசரிப் பத்திரிகைகளும் இவ்விடயத்தில் பாரபட்சம் காட்டி வருவதும் மலையக மக்களின் துரதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். இவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வருவதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களை தோலுரித்துக் காட்டப்பட வேண்டும்.

000 000 000 000 000

கடந்த பெப்.18ம் திகதியன்று சனிக்கிழமை நுவரெலியா கோல்ப் மைதானத்தில் இளம் பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச் சடலத்தில் முகம் எரிக்கப்பட்டும், வாயில் கைக்குட்டை திணிக்கப்பட்டும், கழுத்து நெரிக்கப்பட்டும், தோள்பட்டையில் கத்தியால் குத்தப்பட்டும் சடலம் அடையாளமே காண முடியாத வகையில் சிதைக்கப்பட்டிருந்தது. இவை நுவரெலியா குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி எச்.எம்.பிரேமரட்ன நீதிமன்றத்தில் தெரிவித்த தகவல்கள்.

இவரது இடுப்பில் இருந்த தாயத்தில் இவருடைய பெயர் இந்திரேசன் விஜயதேவி எனப் பொறிக்கப்பட்டிருப்பதனை வைத்துக் கொண்டு இவர் ஒரு தமிழ் பெண் என அடையாளம் காணப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பெண் யார்? இவர் யாரால் கொல்லப்பட்டார்? இவர் எப்படி யாரால் கோல்ப் மைதானத்திற்கு கொண்டு வரப்பட்டார்? இப்பெண்ணின் கொலையில் தொடர்புடையவர்களின் பின்னணி என்ன? பொலிஸார் இப்பெண்ணின் கொலை-யாளிகளை கண்டு பிடிப்பார்களா? போன்ற விடைதெரியாத கேள்விகளே இப்போதைக்கு எஞ்சியுள்ளன.

மகளிர் இயக்கங்கள் இவ்விடயத்தை காணாதவை போல இருக்கக் காரணம் என்ன? பிரபல மலையக அரசியல் வாதிகளும் புத்திஜீவிகள் சமூகநல நிறுவனங்கள் ஏன் மெளனித்து இருக்கின்றன?

இவை எல்லாவற்றுக்குமான அடிப்படையான விடை அவள் ஒரு பெண் என்பது தானா? பெண்ணிலும் மலையகப் பெண் என்பதாலா? ஊடகங்கள், இப்பெண் கொலையின் பின்னணியை வெளிப்படுத்தவதில் அக்கறை செலுத்துமா?

நுவரெலியா இராணுவ முகாமை அண்டிய பகுதிகளில் இளம் பெண்களின் சடலங்களும் எலும்புக் கூடுகளும் அடிக்கடி கண்டுபிடிக்கப்படுவது பகிரங்க ரகசியம் என்கிறார் பெயர் குறிப்பிட விருமர்பாத சமூக சேவகர் ஒருவர்.

நுவரெலியா மேயர் ஒருவரின் மகனாலும் பரிவாரங்களாலும் பல பெண்கள் வேட்டையாடப்பட்டு நுவரெலியா 'ஓர்கிட் பார்க்கில்' புதைக்கப்பட்ட முன்னைய கதையையும் ஞாபகப்படுத்துகிறார் அவர்.

நுவரெலியா விசேட புலனாய்வு பிரிவுகளில் கடமையாற்றிய கடமையாற்றும் மீகொட ரபாடீன், போவல, பொன்சேகா, திசாநாயக்க போன்றவர்கள் எத்தனை கொடிய ரவுடிகள், இன வெறியர்கள், கொலைஞர்கள் என்பது நுவரெலியா கண்டி மாவட்ட இளைஞர்கள் அறிந்தது தான்.

கொலை செய்யப்பட்டிருக்கும் முறையில் பெண் மிகவும் கொடுமைப்-படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவரைக் கொன்றவர்களை தேடிப் பிடிக்க அருகதையற்றவர்கள் யார்? மேற்குறித்த அதிகாரிகளுக்கு அனைத்து ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துவரும் மலையக அரசியல் கட்சித் தலைவர்கள், அமைச்சர-வைக்கு எப்படி இந்தக் காடைத்தனங்களை கொண்டு போக முடியும்?

இப்பெண்னை கொலை செய்தவர்கள் நுவரெலியா, குற்ற புலனாய்வு பிரிவினராக, பொலிஸாராக, இராணுவமாக, உளவாளிகளாக, அரசியல்வாதிகளாக பிரபல அமைச்சரின் ஆதரவுடன் இயங்கும், போதைப்பொருள் கடத்தல்காரர்களாக உயர்குடும்ப ரவுடிகளாக இருக்க முடியும், அல்லது நுவரெலியாவில் சதைபிண்ட வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள விடுதி உரிமையாளர்களாகக் கூட இருக்கலாம். எனவே இப்பெண்ணின் கொலையின் பின்னணியை கண்டறிய நடுநிலையான புலனாய்வுக்குழு அமைக்கப்பட வேண்டும். அரசாங்கம் இவ்விடயத்தில் கூடிய அக்கறை காட்டுமாறு நிர்ப்பந்திக்கும் பொறுப்பு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்-திற்கு, பெண்கள் உரிமை குழுவுக்கு, நுவரெலியா கிராமிய பெண்கள் அபிவிருத்தி குழுவுக்கு, சூரியா பெண்கள் வட்டத்திற்கும், ஊடகங்களின் பெண் செய்தி-யாளர்களுக்கும் மட்டுமல்லாது இந்நாட்டில் வாழுகின்ற ஜனநாயகத்தில் அக்கறையுள்ள கண்ணியமிக்க அனைத்துப் பிரஜைகளுக்கும் உண்டு.

இன்று இந்திரேசன் விஜயதேவி ஒரு நாதியற்ற பிணமாக எறியப்பட்டால் நாளை முழு மலையகப் பெண்களை நோக்கியும் இவ்வன்மப் பொறி தீர்க்கப்பட்டு விடும்.

- மலையாண்டி

# தமிழ்க்கட்சிகளின் அபிலாசைகளை அரசாங்கம் இன்னமும் ஏற்றுக் கொள்ளவில்லை!

- இ.தொ.கா.பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன்

*புதிய அரசியலமைப்பு தயாரிப்பு பற்றிய கலந்துரையாடல்களில் உங்க-ளது கட்சியும் பங்கு கொள்கின்றது. தற்போது அதில் முன்னேற்றம் எதுவுமுண்டா?*

முரண்பாடான சில விடயங்களைத் தவிர அவ்வேலை சிறப்பாக நடை-பெற்று வருகின்றது. அரசாங்கத்துடன் மிகவும் இணக்கமாக இவ்விடயத்தில் செயற்பட இயலுமாக உள்ளது.

*முரண்படும் விடயங்கள் சிலவற்றை பற்றி கூற முடியுமா?*

ஆளுநர் பதவி, வடகிழக்கு இணைப்பு மற்றும் மாகாண சபை பதவிகள் தொடர்பாக சிக்கல்கள் உள்ளன. மாகாண சபை முதலமைச்சரின் இணக்கத்தின்படி ஆளுநர் நியமிக்-



ஆர்.யோகராஜன்

கப்பட வேண்டுமென்பது தமிழ்க் கட்சிகளின் கருத்து. ஆனால் அரசாங்கம் இதுவரை அதற்கு விருப்பத்தைத் தெரிவிக்கவில்லை. வடக்கு கிழக்கை இணைப்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிங்களக் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அதனால் இன்னும் இணக்கத்தைப் பெற முடியவில்லை. மாகாண சபைக்-குத் தெரிவு செய்யப்படும் அனைத்துக் கட்சிகளிலிருந்து அமைச்சர் குழு தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தே நிலவுகின்றது. இது ஐ.தே.கவி-னால் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்-பட்ட கருத்து. எனினும், இதனைத் தமிழ்க் கட்சிகள் எதிர்க்கின்றன.

*மலையகத்தில் இந்திய வம்சாவளி தமிழ் மக்களுக்கு உள்ள விசேட பிரச்சினைகள் பற்றி இங்கு அவதானம் செலுத்தப்படுகின்றதா?*

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் நான்கு மாகாணங்களில் பரந்து வாழ்ந்து வருகிறார்கள். இதனால் வேறு பிராந்தியம் பற்றியோ மாகாண சபை பற்றியோ எண்ணிப் பார்ப்பது பிரயோசனமற்றது. மத்திய அரசில் இருந்த கொண்டே அதிகாரத்தைப் பெற்று அம் மக்களுக்குச் சேவை செய்வதே எமது நோக்கம். மத்திய அரசில் அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டு இதனைச் செய்யலாம். நாம் இதனை இப்பொழுதும் செய்து வருகின்றோம்.

*எனினும், மலையக மக்கள் முன்னணி, 'மலையகத் தமிழர்களுக்கு உள்ள விசேட பிரச்சினைகள் தொடர்பாக இலங்கை அரசின் அவதானத்தை செலுத்த உதவுமாறு நோர்வே அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதே?*

நோர்வே அரசு தலையிட்டுள்ளது எமது பிரச்சினையை தீர்க்கவல்ல. புலிகளுக்கிடையிலும், இலங்கை அரசாங்கத்திற்கிடையிலும் இணக்-கத்தை எற்படுத்தி இரு சாராருக்கி-டையில் பேச்சுவார்த்தை சூழலை ஏற்படுத்தவே நோர்வே அரசு தலை-யிட்டுள்ளது. எமது நாட்டில் எப்படி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்பதை நோர்வே அரசினால் தீர்மானிக்க இயலாது.

*ஆனால் அவர்கள் கூறுவதன்படி இன்னும் தீர்க்கப்படாத பல பிரச்சினை-கள் மலையகத் தமிழர்களுக்கு உண்டு அல்லவா?*

ஆம். நாமும் அதனை ஏற்றுக் கொள்-கின்றோம். நாம் இது தொடர்பாக அரசின் அவதானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். அரசும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

*ஆயினும், இன்னும் பலருக்குப் பிரஜாவுரிமை கிடைக்கவில்லை அல்லவா?*

1988 விசேட சட்ட மூலத்தின்படி 90 சதவீதமானவர்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கப் பெற்றுள்ளன. இந்தியாவுக்கு செல்ல விண்ணப்பித்து, ஆனால் செல்ல இயலாத 96,000 பேரில் சிலரும் அவர்களது பிள்ளைகளும் இன்று எஞ்சியுள்ளனர். இப்பிரச்சினையை தீர்க்கவும் புதிய யாப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் சார்பாக பேச முன்னிற்கும் பிரதான கட்சி எமது கட்சியாகும். அம்மக்களுக்காகவே நாம் சேவையாற்றுகின்றோம்.

*நீங்கள் அவ்வாறு கூறினாலும், 1994ன் பின், கடந்த தேர்தல் பெறுபேறுகளை அவதானிக்கும் போது உங்களது கட்சியில் பின்னடைவு தன்மை ஏற்பட்டுள்ளதல்லவா?*

இல்லை. அதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். செல்லசாமி, சந்திரசேகரன் ஆகியோர் வேறு வேறாகச் செயற்-படுவது எம்மை ஓரளவு பாதித்தாலும், எமது வாக்குப் பலத்தை பாதிக்க-வில்லை. நாம் 'பெருமளவான காலங்-களில் ஐ.தே.கவின் யானை சின்னத்-திலேயே போட்டியிட்டோம். அதன்-பின் நாம் தனியாகப் போட்டியிட்டோம். இது மக்களுக்குப் பழக்கமில்லாததாக இருந்தது. எமக்கிடையில் இருந்த பிரச்சினையைக் கொண்டு சிலர் பிரயோசனமடையப் பார்த்தனர். இவ்வாறான பல காரணங்கள் எம்மை பாதித்தன. இதனால் தான் ஓரளவு பின்னடைவு தோன்றியுள்ளது. ஆனால், இன்னும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் விசேட பிரதிநிதி எமது காட்சியேயாகும்.

*கொழும்பு மாவட்டத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகளை அவதானித்தால், உங்களது கட்சி பொ.ஐ.முவுக்கு ஆதரவு அளித்த போதிலும் அதிக தமிழர் வாழும் தொகுதிகளில் பொ.ஐ.மு படுதோல்-வியைச் சந்தித்திருந்தது. இது, உங்களது கட்சி நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதையல்லவா காட்டுகின்றது?*

இல்லை. இதற்கும் பல காரணங்கள் உண்டு. ஜனாதிபதி 1994ல் அதிகாரத்-திற்கு வந்த போது தமிழ் மக்கள் அவர் மீது வைத்திருந்த எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படவில்லை. மற்றைய விடயம் தான், கொழும்பிலுள்ள தமிழ் மக்களுக்கு பலதரப்பட்ட பிரச்சினை-களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தமை. குறிப்பாக கொழும்பு நகர சோதனை நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் முகம் கொடுத்த நெருக்கடிகளும் இங்கு செல்வாக்கு செலுத்தியது. உதாரண-மாக, சுதந்திர தின விழா இடம்-பெறுவதற்கு முன் கொழும்பில் பாரிய சோதனை நடவடிக்கை மேற்கொள்-ளப்பட்டது. இதனால் பெரும்பாலான தமிழர்கள் அநீதிகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. மலையகத்-திலிருந்து தொழில் புரிய கொழும்புக்கு வந்துள்ள பலரும் இதில் அடங்குவர். சுதந்திர தினத்திற்கு சில நாட்களுக்கு முன் நுகேகொடை பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 200க்கும் அதிகமா-னோர் சுதந்திர தினத்திற்குப் பின்னர் தான் விடுதலை செய்யப்பட்டனர். அவர்களை ஒரு வாரம் தடுப்புக் காவலில் வைத்திருந்தனர். இவர்களில் சந்தேகத்திற்கிடமானோர் இருவரே இருந்தனர். இது போன்ற விடயங்கள் தான் இம்மாற்றத்திற்கு ஏதுவாகின. இதனை நான் ஜனாதிபதியின் அவதா-னத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

*இந்த சோதனை நடவடிக்கைகளில் உங்களைப் பற்றி சர்ச்சைக்குரியதான விடயங்கள் பேசப்பட்டன. இது பற்றி உங்கள் கருத்து?*

நான் தமிழர்களின் பிரதிநிதி. அவர்-களுக்காக பாராளுமன்றத்திலும், வெளியிலும் செயற்பட்டு வரும் நபர். அவ்வாறாயின் அவர்களுக்கு அநீதி ஏற்படும் போது தலையிடுவது எனது பொறுப்பாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்களது உரிமைகளை மீறும் வகையில் சம்ப-வங்கள் நிகழ்ந்துள்ளன. அதனால் அவ்விடங்களுக்கு நான் சென்று விடய-ங்களை ஆராய்ந்து செயற்படுகிறேன்.

*ஆனால் பாதுகாப்புப் பிரிவினர் நீங்கள் அவ்விடங்களுக்கு வந்து பயமுறுத்தல் விடுப்பதாகக் குற்றம் சாட்டுகின்றனரே?*

நான் யாரையும் பயமுறுத்தவில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் செல்லாமல் அச்சம்பவத்தைப் பற்றி எப்படி அறிந்து கொள்வது? நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். எனக்கு அவ்விதம் சென்று அவதானிக்கும் உரிமையுண்டு. அதனால் நான் அவ்விடங்களுக்கு சென்று என்ன நடைபெறுகின்றது என அவதானிக்-கிறேன். பெரும்பாலும் கைது செய்யப்-பட்டவர்களது உரிமைகள் மீறப்படும் வகையிலேயே சம்பவங்கள் இடம்-பெறுகின்றன. இதனால் நான் அதிகாரிகளின் அவதானத்திற்கு சம்பவங்களைக் கொண்டு வருகிறேன். இது நான் செய்யும் தவறு அல்ல. கைது செய்யும் அனைவரினதும் உடைகளை கழற்றி விட்டு புகைப்படம் எடுக்க, கைவிரல் அடையாளம் எடுக்க பாதுகாப்புப் பிரிவினருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

*பாதுகாப்பு காரணங்களுக்காக அவசர-காலச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்-படும் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு நீங்கள் எதிர்ப்பு காட்டினாலும், அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கின்றீர்களே , ஏன் இந்த முரண்பாடு?*

ஆம். நான் அவசரகாலச் சட்டத்திற்கு சார்பாக கையுயர்த்துகிறேன். பாது-காப்பு நடவடிக்கைகளுக்கு அவசர-காலச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். எனினும், அதனை சரியான முறையில் செயற்-படுத்தாமல் அதனை ஒரு காரணமாகக் கொண்டு ஒருவரின் மனித உரிமையை மீறுதலுக்கு நான் எதிர்ப்புத் தெரிவிக்-கிறேன். அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதனால் அத-னால் ஏற்படும் அநீதிகளை எதிர்க்க-வும் எனக்கு அதிக உரிமையுண்டு.

*உங்களுக்கு புலிகளிடமிருந்தோ, பாதுகாப்பு தரப்பிலிருந்தோ பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதா?*

இல்லை. அவ்வாறான எந்தவித பயமுறுத்தல்களும் விடுக்கப்பட-வில்லை.

*எதிர்வரும் பொதுத் தேர்தலில் உங்கள் கட்சி தனியாக போட்டியிடுமா? அவ்வாறில்லாவிட்டால் உங்களது நடவடிக்கை என்ன?*

இப்பொழுது இவ்விடயம் பற்றி எதுவும் கூற முடியாது. அவ்வாறான சந்தர்ப்-பத்தில் எமது கட்சி தீர்மானம் ஒன்றை எடுக்கும்.

*அவ்வாறெனில் எந்தவொரு கட்சி-யுடனும் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் போட்டியிட நீங்கள் தயாரா?*

இல்லை. அப்படி இல்லை. நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பாகவும் மற்றும் நாட்டிற்கு இன்னும் அதிகம் சேவை செய்பவர்களுடனும் சேர்ந்தே போட்டியிடுவோம்.

கமல்

நன்றி - நூலகத்திட்டம்



மனைவியையும் தனது ஏக புத்திரனையும் போருக்குக் காவு கொடுத்த சுந்தரம் தனது ஏழு வயது மகள் சரோஜாவுடன் இராணுவ நகர்வு நடக்கும் வடபுலப் பிரதேசத்தை விட்டுக் காட்டுவழி தப்பியோடுகின்றான். ஓடும் வழியில் இராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி காலில் காயமுறுகின்றான். மரக்கம்பொன்றின் உதவியோடும், தனது சின்ன மகளோடும், வாழ்தலுக்காய் காட்டில் அலைக்கழிகின்றான். சாவு துரத்துகிறது. ஒரு புறம் டாங்கிகளுடனும், தீயைப் பொழியும், ஹெலிகொப்படர்களுடனும் முன்னேறும் படையினர். மற்றப்பக்கம் தான் சார்ந்த இயக்கத்தினர். இன்னுமொரு புறம் அருகிலுள்ள சிங்களக் கிராமத்து மக்கள், இன்னுமொரு புறம் காட்டு மிருகங்கள், ஆக தப்புதவற்கான மார்க்கங்கள், எதுவுமேயில்லை. ஆனால், அவன் வாழ்ந்தாக வேண்டும். அவனது சின்ன மகள் சரோஜாவுக்காக அவன் வாழ்ந்தாக வேண்டும். கழுத்திலுள்ள சயனைட் குப்பியை அறுத்து வீசுகின்றான். உணவுக்காக அவனிடமிருந்த ஒரேயொரு 'கிறீம்க்றேக்கர்' விசுக்கோத்துப் பெட்டியும் தீர்ந்து போகின்றது. பசி சாவு இன்னுமொரு புறத்தாலும் முன்னேறுகின்றது. சுந்தரம் மயங்கி விழுகின்றான் உயிர் பிழைக்கலாம் என்ற நம்பிக்கையை அவன் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து போகின்றான். சரோஜாவை அருகிலுள்ள சிங்களக் கிராமத்திற்குச் சென்று விடும்படி கேட்கின்றான். ஆனால், மகள் சரோஜாவோ தகப்பனைப் பிரிய மனமின்றி மறுக்கிறாள். சுந்தரம் திரும்பவும் மயங்கி விழுகின்றான்.

சிநேகிதிகளுடன் பழகுவதில்லை. காய்ச்சல் என்று பொய் சொல்லி ஆற்றுக்குக் குளிக்கப்போவதையும் நிறுத்தி விட்டாள். விளையாடத் தோழிகள் கூடச் சேராமல் சரோஜாவோடு சேர்ந்து வீட்டின் கொல்லையில் விளையாடுகின்றாள். சரோஜாவுக்காக அவள் தன் வழமையான நிகழ்வுகள் எவ்வளவோவற்றை மாற்றியாயிற்று. வருணி சரோஜாவுக்கு சிங்களத்தையும் சரோஜா வருணிக்குத் தமிழையும் கற்றுக் கொடுக்கின்றனர். இருவரும் பொட்டு வைத்துக் கண்ணாடியில் அழகு பார்க்கின்றனர். தங்கள் இரு பெண்மக்களுக்கும் ஒரே வகை சட்டைகளை வாங்கிக் கொடுத்து உடுத்தி அழகு பார்க்கின்றனர். வருணியின் அம்மாவும் அப்பாவும்.

சுந்தரத்தைப் பரிசோதிக்கும் நாட்டு வைத்தியர் சுந்தரத்தின் காலை வெட்டியகற்ற வேண்டும் என்கிறார். வைத்தியசாலையில் சுந்தரத்தை சிங்களப் பெயரில் அனுமதிக்கின்றார் வருணியின் அப்பா. சுந்தரத்திற்கு வைத்தியசாலையில் ஊமைவேசம். வைத்தியசாலைக்குச் சுந்தரத்தைப் பார்வையிட வரும் சரோஜா ஆர்வமிகுதியில் தமிழில் சுகம் விசாரிக்க சந்தேகமுறும் பொலிசார் சுந்தரத்தின் அடையாள அட்டையைக் கொண்டு வந்து காட்டச் சொல்லிக் கேட்கின்றனர். நிலைமை சிக்கலாகி வருவதையுணர்ந்த வருணியின் தகப்பன் நம்பிக்கையில் நின்றும் மெல்லப் பின்வாங்குகின்றார். சுந்தரம் தொடர்பாக பொலிசில் அறிவித்துவிடப்போவதாகக் கூற வருணியின் தாயாரோ சரோஜாவின் நிலையை நினைத்துப் பார்க்கச் சொல்லி மறுக்கிறார். பொலிஸ் விடயத்தை மோப்பம் பிடித்து




ஆசிரியரின் ஆசைப்படி கிராமத்தவர்களை பாடசாலையில் வைத்துச் சந்திக்கின்றார். கிராமத்து மக்களுக்கு சுந்தரத்தின் மூத்த ஆண்மகனுக்கு நேர்ந்த கதி பற்றியும், சுந்தரம் பலவந்தமாக புலிகளினால் சேர்த்துக் கொள்ளப்பட்டது பற்றியும், இயக்கத்தை விட்டு வெளியேறியமைக்காக இப்போது புலிகளினால் வேட்டையாடவென்று விரட்டப்படுவது பற்றியும், விளக்குகின்றார்.

இதுவா இங்கு நடக்கிறது? இராணுவத்தினரின் கொலைக்களங்கள் பற்றியும், வெறியாட்டங்கள் பற்றியும் ஒரு காட்சி தானும் இல்லை.

வருணியின் தந்தை - துட்கெமுனு மன்னன் இலங்கையை தனிச் சிங்கள நாடாக்க முயன்றதை ஜேர்மனியில் ஹிட்லர் பல்லாயிரக்கணக்கான யூத மக்களைக் கொன்று குவித்து இனச்சுத்திகரிப்புச் செய்ததுடன் ஒப்பிட்டு மாணவர்களுக்கு கற்பிப்பதும், சுந்தரத்தை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் வழியில் 'டிரக்டர்' சாரதியோடு இலங்கையின் பூர்வகுடிகள் பற்றி தமிழ் மக்களுக்குச் சார்பாக கருத்துக் கூறுவதும் ஆரோக்கியமான பாய்ச்சல் தான். இன்னும் வருணியும் சரோஜாவும் சேர்ந்து விளையாடும் காட்சிகளும், சரோஜாவுக்காக வருணி பெற்றோரிடம் மன்றாடுவதும் கவிதைகள், தன்னைக் கொன்றுவிட்டு தன் மகளைக் காப்பாற்றும்படி சுந்தரம் கொடுத்த துவக்கை வாங்கி வருணியின் அப்பா உடைத்து நொறுக்கும் போது சிலிர்க்கிறது. அவாவிய வாழ்வு கிடைத்து விடும் என்ற நம்பிக்கை எழுகின்றது. எல்லோருடைய நெஞ்சுக்கு நேரேயும் இன்று ஒவ்வொரு துப்பாக்கிகள்

# சரோஜா: ஒரு கவிதையும் இடையில் காணாமல் போனவையும்

சரோஜினிக்கு காட்டின் வாயிலில் உள்ள நீர்ப்பரப்பிற்கருகில் விளையாடிக் கொண்டிருக்கும் அயல் சிங்களக் கிராமச் சிறுமியான வருணியின் நட்புக் கிடைக்கின்றது. வருணி சரோஜினிக்கும் சுந்தரத்திற்கும் உணவு கொண்டு வந்து கொடுக்கின்றாள். அவர்களோடு அன்பு பாராட்டுகின்றாள். அவர்களுக்காக தனது பெற்றோரிடம் மன்றாடுகின்றாள். அந்தக் கிராமத்துப் பாடசாலை-



யில் ஆசிரியராயிருக்கும் வருணியின் தந்தை சாதி மதம் தாண்டிய மனித நேயர். சிங்கள மக்களைப் போலவே தமிழர்களும் இந்நாட்டின் குடிகளே என்று திடமாக நம்புபவர். அவர் சுந்தரத்திற்கும், சரோஜாவுக்கும் அடைக்கலம் தர முன் வருகின்றார். இதன் பின் விளைவுகளை உணர்ந்த வருணியின் தாயோ இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றார். அவர்களைப் பற்றிப் பொலிசாருக்குப் தெரியப்படுத்துவோம் என்கிறார். எல்லா எதிர்ப்புகளையும் தாண்டி ஆசிரியர் அவர்களுக்கு அடைக்கலம் வழங்குகின்றார்.

நாட்கள் வருணிக்கும் சரோஜினிக்கும் இடையில் பிணைப்பை பலப்படுத்தியவாறு நகர்கின்றன. வருணியின் அம்மாவும், அப்பாவும் என்ன விதிவிலக்கா? அவர்களும் சரோஜாவை தமது மகளில் ஒருத்தியாகவே பாவிக்கின்றனர். அவர்கள் அவளை இழந்து போகத் தயாரில்லை வருணியோ முன்பு போல தன் பழைய

சுந்தரத்தை வைத்தியசாலையில் வைத்துக் கைது செய்கின்றனர். விசாரிக்கச் சென்ற வருணியின் அப்பாவையும் தடுப்புக்காவலில் வைக்கின்றனர். சுந்தரத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை பொலிஸ் தரப்பினால் நிரூபிக்க இயலாது போகவே இருவரும் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்படுகின்றனர்.

வருணியின் தந்தையும், சுந்தரமும் விடுதலையாகி கிராமத்திற்குள் நுழையும்போது தலைதூக்குகிறது பிரச்சினை. அவர்களைப் பற்றிய வதந்திகள் ஏற்கெனவே கிராமத்துள் பரவியாயிற்று. அவர்களை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். கிராமத்தவர்கள் குடிவெறியில் வந்து வீட்டுக்குக் கல்லெறிகின்றனர். பேசிச் சண்டையிடுகின்றனர். எங்களுக்குக் மட்டுமேயான நாடு இது என்ற ரீதியில் பேசி இனவாதம் கக்குகின்றனர் சிலர். ஆசிரியரைக் கிராமத்தை விட்டு வெளியேறும்படியும் கேட்கின்றனர். வருணியின் தந்தைக்கு தான் கற்பிக்கும் பாடசாலையிலும் நெருக்கடிகள் தோன்றுகின்றன. இது முற்றி தண்டனையாக வடபுலப் பாடசாலையொன்றுக்கு இடமாற்றம் கிடைக்கின்றது. தான் இடமாறிப் போவதற்கு முன் புலமைப்பரிசிற் பரீட்சை வகுப்பு மாணவர்களின் கல்வி பற்றிக் கவலைப்படுகிறார். பெற்றோர் ஆசிரியர்களை ஒரு தரம் சந்தித்து உரையாட ஆசைப்படுகின்றார்.

சுந்தரத்தின் தற்போதைய நிர்க்கதியான நிலையையும், ஊனமுற்ற சுந்தரத்தினதும், சிறுமி சரோஜாவினதும் கேள்விக்குறியான எதிர்காலம் பற்றியும் எடுத்துக் கூறுகின்றார். ஆசிரியருக்கு ஆதரவாக மாணவர்களிடமிருந்து கிடைத்த கை தட்டல் பரவிப் பெற்றோரும், அவருக்கு ஆதரவு வழங்கத் தொடங்குகின்றனர். ஆசிரியர் சுந்தரத்தை மேடைக்கு அழைத்து அறிமுகம் செய்து வைக்கின்றார். அப்போது அங்கு வரும் ஆயுதபாணிகளான இருவர் சுந்தரத்தைச் சுட்டுக் கொன்று விட்டுத் தப்பியோடுகின்றனர்.

இப்போது ஆசிரியர் இடமாற்றத்திற்குத் தயாராகி விட்டார். பொருட்கள் எல்லாவற்றையும் கட்டி ஏற்றியனுப்பியாயிற்று. கிராமத்தவரிடம் விடைபெறும் படலம். குடிவெறியில் வந்து ஆசிரியரின் வீட்டுக்கு கல்லெறிந்து இனவாதம் பேசிய கிராமத்தவன் தனது நண்பர்களோடு வந்து தன்னை மன்னித்துக் கொள்ளும்படி ஆசிரியரிடம் வேண்டுகின்றான். ஆசிரியரோ சுந்தரத்தின் இறுதிக் கிரியைகளைச் செய்ய தனக்கு உதவி புரிந்தற்காக அவர்களுக்கு நன்றி சொல்லியவராய் கிராமத்தை விட்டும் அகல்கின்றார். சரோஜாவும் வருணியும் கைகோர்த்தவர்களாக பறந்தோடுகின்றனர்.

படம் முடிகின்றது...

ரேணுகா பாலசூரிய தயாரிக்க, சோமரத்ன திசாநாயக்க திரைக்கதை, நெறியாள்கை செய்திருக்கும் சரோஜா. சிறந்த ஆசியத் திரைப்படத்திற்கான விருதையும், சிறந்த இரசிகர்களுக்கான விருதையும் வென்றுள்ளது. நடைபெறவுள்ள சிங்கப்பூர் சர்வதேச திரைப்பட விழாவிலும் கேரள திரைப்படவிழாவிலும் திரையிடுவதற்கென்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

படத்தின் துவக்கக் காட்சிகளில் வடபுலத்தில் இராணுவ நகர்வின் போது தன்னிடம் அகப்படும் சரோஜாவையும், சுந்தரத்தையும் ஒரு இராணுவச் சிப்பாய் தப்பி ஓடுங்கள் என்று விடுகின்றான். என்னே மனிதாபிமானம். இதுவும் போதாதென்று வருணிக்கு தந்தை இராணுவம் சிறுபிள்ளைகளை ஒருபோதும் கொல்லாது என்றும் சொல்கின்றார். மறுபுறம் சுந்தரத்தின் மகனைப் புலிகள் பலவந்தமாகப் பிடித்துச் சென்று தம்மோடு இணைத்துக் கொண்டதாகவும், அகாலத்தில் மகன் சாக, பின்னர் சுந்தரத்தையும் தம்மோடு போராட்டத்தில் வற்புறுத்தி இணைத்துக் கொள்வதாயும் சொல்கிறது படம். போதாக்குறைக்கு சுந்தரம் இயக்கத்தை விட்டுத் தப்பியோடி வந்து பிறகு அவனைத் தேடி வரும் புலியினர் அவன் வீட்டில் இல்லாது போக மனைவியைக் கொன்றுவிட்டு, வீட்டையும் கொளுத்திவிட்டுப்போவதாகவும் வருகின்றது. வைத்தியசாலையில் வைத்துக் கைது செய்யப்படும் புலிச்சந்தேக நபர் சுந்தரம் - எதுவித சித்திரவதைக்கும் உள்ளாகவில்லை. அவர் மீது துரும்பு கூடப்படாமல் அப்படியே திரும்பி வருகிறார். ஆஹா அற்புதம்!



நீட்டப்பட்டிருப்பதன் வரலாறு குறித்து ஒரு வார்த்தை தானும் யாராவது வாய் திறந்திருக்கலாம். புலிகளின் அராஜகங்களை பூதக் கண்ணாடி வைத்துக் காட்டும் நெறியாளர், தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயங்கள் குறித்து பேசும் விடயத்தில் இன்றைய யதார்த்தத்தைப் பேசக்கூடிய ஒரேயொரு பாத்திரமாக வளர்க்கப்பட்ட வாத்தியாரையும் மௌனமாக்கி விட்டது ஏன்?

காட்சியமைப்பு, ஒளி, ஒலிப்பதிவு, கலை நெறியாள்கை போன்ற துறைகளில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றகரமாயுள்ள சரோஜாவின் ஆங்கில உப தலைப்புக்கள் மிக எளிமையாகவும், சுருக்கமாக அதேநேரம் விளங்கக்கூடிய வகையிலும் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பு, நடிர்கள், எவருமே சோடைபோக வில்லை. சுந்தரமாக வரும் மேர்வின் மகேசன் இன்னும் தேறியுள்ளார். வருணி, பிரமுதி குமாரரத்ன, சரோஜா - நித்தியவாணி கந்தசாமி இருவரும் மனதில் தொடர்ந்தும் அலையைக் கிளப்புபவர்கள், வருணியின் தகப்பன் (ஆசிரியர்) உச்ச அளவுக்கு நடித்துள்ளார். வருணியின் தாயாக வரும் நீட்டா பெர்ணாந்துவும் தான்.

தமிழ் மக்களின் தேசிய உரிமைப் போராட்டத்தை வில்லனாக்கி பணம் பண்ண வந்த நொமியன மினிசுன், மானவவாரணய - போன்ற குப்பைகள் படுத்திய கறையை துடைக்கும் ஒரு துவக்கமாக சரோஜாவைக் கொள்ளலாமா?

சரோஜா அற்புதமானதொரு கவிதை! ஆனால் வரிகளுக்கிடையில் காணாமல் போனது தமிழ் மக்களுடைய உரிமைக் கோரிக்கையின் வேர்களல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்



# இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவு:

## கனக செந்திநாதனை இருட்டிப்பு செய்தது யார்?

இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவு தின நிகழ்ச்சி கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் பெப்.11ம் திகதி அன்று மாலை நடைபெற்றது. நிலக்ஷனின் வரவேற்புரையுடன் சிவநேசச்செல்வனின் தலைமையில் ஆய்வமர்வு நடைபெற்றது. தலைவரின் உரையில் இரசிகமணியின் இலக்கிய இரசனையும் அவரின் ஆக்கங்களையும் மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து விபரித்தார்.

அவரைத் தொடர்ந்து சூரியகுமாரி அவர்கள் பால் வேறுபாடும் கலை இலக்கியமும் என்ற தலையங்கத்தில் கட்டுரை சமர்ப்பித்து வாசித்தார். மிகவும் காத்திரமான புள்ளி-விபரங்களுடன் பல எழுத்தாளர்களின் படைப்புக்களைக் குறிப்பிட்டார். பல நூல்களை பால் வேறுபாட்டின் அடிப்படையில் பட்டியலிட்டுக் காட்டினார். தமிழக சஞ்சிகைகளையும் அவர் தவறவிடவில்லை. இயற்கையின் விதியால் உடலமைப்பில் பெண்களாகப் பிறந்த குற்றத்திற்காக சமுதாயம் [illegible]படி தம்மை கொடுமைப்படுத்துகிறது என்பதை பல நூல்களின் வெளிப்பாட்டை ஆதாரமாகக் எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து சமூக விடுதலையும், கலை இலக்கியமும் என்ற தலைப்பில் பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் ஆராய்ந்தார். மிகவும் புரட்சிகரமான கருத்துகளை முன்வைத்தார். மறைந்த சண்முகதாசனின் கொள்கைகள் பல அவரின் பேச்சுகளின் போது ஞாபகமூட்டின. சரிக்கும், பிழைக்கும் இடையில் உண்மைக்கும் பொய்க்கும் இடையில் இணைக்கப்பாட்டிற்கு ஒன்றுமே கிடையாது என்றார். கலை கலைக்-காகவும், கலை அரசியல் கலப்புள்ளதாவும் படைக்கப்படுகிறது. அதில் நிச்சயமாகக் கற்பனாவாதம் அல்லாத கலை மக்களுக்காகவே என்ற மா ஓ சே துங்கின் கருத்தைச் சரியென மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இதில் இரண்டு பேச்சுக்கு இடமே இல்லை என்றார்.

தன்னைத்தானே புலம்பெயர்ந்த மக்களுக்கு ஏகப் பிரதிநிதியாகக் கற்பனை செய்து கொண்டு பிழையான பிற்போக்கான கருத்துக்களைக் கூறி வருபவரான எஸ். பொன்னுத்துரை, கனக செந்திநாதனைப் பிரபல்யமடைய விடாமல் தடை செய்து கொண்ட பல செய்திகளை விபரித்தார். திருவள்ளுவரின் குறளை எடுத்துக் கொண்டாலும், பாரதியின் பாஞ்சாலி சபதத்தை எடுத்துக் கொண்டாலும் அவற்றில் அரசியலின் பங்கு எவ்வாறுள்ளது என்பதையும் விபரித்தார். பாரதியார் ஆன்மீகத்தைப் பற்றியும், பாடியுள்ளார். அவர் ஒரு மார்க்சியவாதியாக இருக்கவில்லை. ஆனால், அவரின் படைப்பு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அவர்களின் சுதந்திரத்திற்காக பெண்களின் விடுதலைக்காக அவர்களின் உயர்ச்சிக்காகவே பெரும்பகுதி அடங்கியுள்ளது. இருந்தும் அவர் கூலிக்காக ஒரு பாட்டையும் பாடவோ விற்கவோ இல்லையென்பதையும் பேராசிரியர் குறிப்பிட்டிருக்கலாம். ஏனெனில், கூலிக்காவும், மது, மாதுக்கு அடிமைப்பட்டு சினிமாவுக்கு படைத்த கவிஞர்களை கவியரசு என்று கூறுகிறார்களே அதற்காக. பாரதியின் புரட்சிக்கவியின் பிரதிபலிப்பு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அமைந்ததாலேயே பாரதிதாசனின் படைப்புக்கள் நிலைத்து நிற்க முடியாமைக்கு காரணம் என்றும் கூறினார். அத்தோடு கலை இலக்கியம் பற்றி மிகவும் ஆழமாக விளக்கினார். சீனாவின் தலைவர் மா ஓ காட்டிய வழியில் அதாவது கலை இலக்கியம் மக்களிடம் இருந்து கற்று அதை சீர்படுத்தி மக்களுக்காகவே திரும்பவும் படைப்பதே இலக்கிய வாதிகளின் கடமை என்பது மாஓ-வின் கருத்து. இலக்கியம் அடக்கி ஒடுக்கப்படும் மக்களை கதாபாத்திரங்களாக அமைக்க வேண்டும். உழைக்கும் வர்க்கத்-திற்காக அமைய வேண்டும் என்றும், விடுத-லைக்காக ஏங்கிநிற்கும் மக்களுக்காக அவர்-களின் வழிகாட்டியாக அமைய வேண்டு-மென்றும் கூறினார். பிரச்சினைகள் ஆகாயத்-திலிருந்து போடப்பட்டவையல்ல. அது அடக்கியாள முனைபவர்களின் ஆதிக்க வெறியினால் ஏற்பட்டவையே இதை ஆகாயத்-திலிருந்து கொண்டு கடவுள் தீர்த்து வைப்பார் என்றால் அது ஒருபோதும் நடைபெறாது இதையும் கவனத்தில் கொண்டு எழுத்தாளர்கள் எழுத வேண்டுமென்று கூறினார்.

அன்று மிகவும் தரமான பத்திரிகையாக மதிக்கப்பட்ட தினகரன் பத்திரிகை கூட மிகவும் தாழ்ந்த நிலைக்குச் சென்றதையிட்டு மிகவும் கவலைப்பட்டுப் பேசினார். இப்பத்திரிகை-யோடு ஒப்பிடும்போது தமிழக நவமணி பத்திரிகை அன்று தரம் குறைந்ததாகவே கருதப்பட்டது. ஆனால், இன்று அதன் தரம் இலங்கைப் பத்திரிகைகளிலும் பார்க்க தரம் உயர்ந்துள்ளதையும் சுட்டிக் காட்டினார். பெண்கள் விடுதலை பற்றி சக்தி தொலைக்-காட்சியில் வரும் குடும்பம் பற்றியும் விமர்சித்தார். தலையங்கத்தில் பெண்விடுதலை பற்றி விளம்பரம் செய்வார்கள் ஆனால், குடும்பம் நாடகத்தில் மிக மிக தாழ்ந்த நிலை-யிலேயே பெண்கள் சித்திரிக்கப்படுகின்றார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார். இதையே கருணாநிதியும் அவரின் திரைப்படங்களில் பெண்களின் பலவீனத்தையும் இயலாமை-யையும் மிகைப்படுத்தி சித்திரித்து பணம் சம்பாதித்தார் என்பதையும் ஞாபகப்-படுத்தினார். அத்தோடு சிவசேகரம் அவர்கள் விட்டு வைக்கவில்லை. இங்குள்ள பத்திரிகை-கள் வானொலி தொலைக்காட்சிகளும் பணத்திற்காக வன்செயல்களையும், பெண்-களைப் பற்றிய விடயங்களையும் முதன்மை-ப்படுத்தி சமுதாயத்தை சீர்கெடுக்கிறார்கள் என்றும் கூறினார். உலகில் பிரபலமான சண் பத்திரிகை உட்பட இலங்கையில் வெளிவரும் ஐலண்ட், திவயின போன்றவையும் பணத்-திற்காக சமுதாய சீர்கேட்டை உருவாக்க முயற்சிக்கின்றன என்று குற்றம் சாட்டினார். இலக்கிய படைப்-பாளர்களை சட்டங்களால் அடக்கியாள முடியாது என்பதையும் படைப்பாளர்கள் அடக்கியாள்பவரின் பலவீனம் எங்குள்ளது என்று அறிந்து அதன் இடைவெளிகள் ஊடாக எப்படியோ உண்மையான கருத்துக்-களை வெளிக்கொண்டுவர முயற்சிக்க வேண்டுமென்றும், அது முடியுமென்றும் கூறினார். இறுதியாக பெண்கள் சமத்துவ அமைப்பை ருசியாவிலேயே முதன் முதலில் அமைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு சிவநேசச்செல்வன் பதிலளித்துப் பேசியபோது முற்றுமுழுதாக சட்டத்திற்கு உட்பட்டதாகவே எழுத முடியும் என்றும் அதையிட்டு கவலைப்படுவதாகவும் அத்தோடு முடிந்தளவு கருத்தைக் கூற பத்திரிகை வாழ வேண்டும். அதற்கு பணத்தின் முக்கியம் பற்றியும் விபரித்தார்.

தொடர்ந்து கருத்து செயற்பாட்டுச் சுதந்திரம் என்ற தலைப்பில் தமிழ்மாறன் அவர்கள் விளக்கினார். சட்டத்தின் வரையறைக்குள் எப்படி எழுத்தாளர் சிக்கி-யுள்ளனர் என்பதை தெளிவாக எடுத்தியம்-பினார்.

தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பூகோளமயமாக்கலும் இலக்கியமும் என்ற தலைப்பில் பேசினார். நேரம் போதா-மையினால் விளக்கமும் போதாமையாக-விருந்தது. இவர் மிகவும் முக்கியமான விடயம் ஒன்றைக் குறிப்பிட்டார். அதாவது பூகோள-மயமாக்கலின் விளைவாக இன்று தொழிலாள வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் கூர்மை குறைந்து வருவதாக பல ஆதாரங்களுடன் வெளியிட்டார். இதற்கு ஒரு நிறுவனம் உலகத்தின் பல நாடுகளிலும் அவர்களுடைய வியாபாரம், தொழிற்சாலை, உற்பத்தி பரவியுள்ளமையும் ஒரு காரணம் என்றார். இது பற்றி சரிநிகருக்கு விபரமான ஒரு கட்டுரையை எழுதுவார் என்ற நம்பிக்கையோடு இக் குறிப்புகளை நிறைவு செய்து கொள்கிறேன்.

- ஞானம்

---

### பாட நூல்கள்

## குற்றவாளிக் கூண்டில் தேசியக் கல்வி நிறுவகம்!

ஓர் இனத்தின் அடையாளத்தை இல்லாது ஒழிக்க வேண்டுமாயின் அவர்கள் மொழியைச் சிதைத்து விடு என்பார்கள். அந்தக் கைங்கரியம் தான் இன்று அரச பாட நூல் நிறுவனமான தேசியக் கல்வி நிறுவகத்தால் செய்யப்பட்டு வருகிறது.

குழந்தைகளின் பாட நூல்களில் மேற்கொள்ளப்படும் இத்தகைய மொழிச் சிதைப்புகள் நாளா வட்டத்தில் "சிங்களத் தமிழை" உருவாக்கி விடும். அதன் பிறகு 'தமிழர்களது போராட்டமாவது" எல்லாம் சிதைந்து இனப்பிரச்சினை இல்லாதொழிந்து-விடும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்களோ என்னவோ!

ஒரு காலத்தில் பாட நூல்கள் துறைசார்ந்த அறிஞர்களால் எழுதப்பட்டன. அவர்கள் அறிஞர்களாக இருந்தமையால் மாணவர் வளர்ச்சியிலும் அக்கறை உள்ளவர்களாக இருந்-தார்கள். அத்தகையோரின் நூல்கள் பாட நூல்-களாகச் சிபாரிசு பெறுமுன்னர் பல படிமுறைகளைக் கடக்க வேண்டிய தேவைகளும் இருந்தமையால் கருத்து நேர்த்தி, மொழிப்பிரயோகச் செழுமை, எழுத்துப் பிழையற்ற தன்மை, நூலமைப்பு என்பன உயர்ந்த தரத்தில் பேணப்பட்டன.

உண்மையில் அந்நூல்கள் மொழித்-துறைக்கு அகராதிகள் போலும், அவ்வத்-துறைகளுக்குக் கைந்நூல்கள் போலும் வளர்ந்-தோருக்குக் கூடப் பயன்பட்டு வந்தன.

ஆனால், இன்றைய பாட நூல்களின் நிலை நேர்மாறாக இருக்கின்றது. மாணவர்-களின் "கொப்பிகளைத் திருத்துவது போல் பாட நூல்களில் உள்ள பிழைகளைத் திருத்துவதும் ஆசிரியர்களது கடமைகளில் ஒன்றாகி விடும் அளவுக்குச் சீர்கெட்டுப் போய்க் கிடக்கிறது. பிழைகளற்ற பாட நூல் ஒன்றைக் கண்டு-பிடித்துத் தந்தால் கோடி ரூபா பரிசு என்று தைரியமாக அறிவிக்கலாம். ஏனெனில், அந்தப் பரிசு ஒரு போதும் எவராலும் வெல்லப்படப் போவதில்லை.

கடந்த ஆண்டு 06, 09 ஆகிய தரங்க-ளுக்குப் புதிய பாட நூல்கள் தாராளமாக எழுத்து, கருத்துப் பிழைகளுடன் வந்திருந்தன. ஏனைய பதிப்புகளும் வழக்கம் போலவே பிழைகளுடன் தான் வெளியாயின. இவ்-வாண்டு 07, 10 ஆகிய தரங்களுக்குப் புதிய நூல்களும் பிழைகள் மலிய வெளியாகி-யுள்ளன.

இப்பிழைகளைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் சுட்டிக் காட்டியிருந்தது. இப்பிழைகள் தமிழர் கல்வியைப் பாழ்படுத்தும் தன்மை கொண்டவை என்பதையும் சங்கம் தெளிவாகக் கூறியிருந்தது. வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சும் இப்பிழைகளைத் தவிர்க்கத் தன்னாலான முயற்சியை மேற்கொண்டது.

கடந்த ஆண்டு மாகாணக் கல்வியமைச்-சால் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. இந்து சமயம், கிறிஸ்தவ சமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், சுகாதாரம், சமூகக் கல்வியும் வரலாறும் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர், திறமை வாய்ந்த ஆசிரியர்கள் ஆகியோரடங்கிய உப குழுக்களை நியமித்து, அவர்கள் மூலமாகப் பாட நூல்களில் உள்ள எழுத்துப் பிழைகள், கருத்துப் பிழைகள், என்பவை அவதானிக்-கப்பட்டு அவற்றின் திருத்தங்களுடன் தேசியக் கல்வி நிறுவகத்துக்கும், கொழும்புக் கல்வியமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன் இவற்றின் பிரதிகள் மாகாண ஆளுனர், வட கிழக்கு மாகாண ஆளுகைக்-குட்பட்ட கல்வி வலயங்கள் என்பவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. கல்வி வலயங்-களூடாகப் பாடசாலைகளுக்கு இத்திருத்தங்கள் சேர்ப்பிக்கப்பட்டு மாணவர்களுக்கான போதனை திருத்தங்களுக்கமைய இடம்பெற்றது.

இதற்குப் பதில் நடவடிக்கையாக, ஒவ்வொரு பாட நூல்த் துறைக்கும் ஒரு தமிழர், ஒரு முஸ்லிம் அடங்கிய நிபுணத்துவசாலிகளைக் கொண்டதான பெயர்ப்பட்டியலொன்றைச் சகல துறைகளுக்கும் சமர்ப்பிக்குமாறு கொழும்புக் கல்வி அமைச்சு, வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வியமைச்சைக் கேட்டுக்கொண்டது. இவர்கள் பாட நூல்கள் எழுதுதல், செப்பனிடுதல் ஆகிய பணிகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளார்கள் என்றும் அது கூறியிருந்தது.

இதற்கமைய கடந்த ஆண்டு, பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டன. கொழும்பிலிருந்து பதிலேதும் வரவில்லை. சிபாரிசுகள் கிடப்பில் போடப்பட்டு வழமை போல் எழுத்து, கருத்துப் பிழைகள் மலிந்த பதிப்புகளே வெளிவந்தன. இவ்வாண்டும் ஒரு பெயர்ப் பட்டியலைக் கொழும்புக் கல்வியமைச்சுக்குத் தர வட கிழக்குக் கல்வியமைச்சு எண்ணியுள்ளதாகத் தெரிகிறது.

தமிழ், இந்து சமயம் தவிர்ந்த பாட நூல்கள் எல்லாம் சிங்களத்திலேயே எழுதப்படுகின்றன. சிங்களச் சூழலில் வளர்ந்த சிங்கள அறிஞர்களே இப்பணியில் ஈடுபடு-கின்றபடியால், தமிழர்களின் மனப்போக்குகள், பண்புகள் என்பவை இயல்பாகவே கவனத்திற் கொள்ளப்படாமற் போகின்றன. குறிப்பாக வரலாறு, சித்திரம் என்பவை சம்பந்தமான நூல்கள் தமிழ் மாணவர்களுக்குக் கொஞ்ச-மேனும் பொருத்தமற்றவையாக இருப்பதுடன், தமிழ் மாணவர்கள் மீது திணிப்பை ஏற்படுத்துபவையாகவும் அமைகின்றன.

இதேபோல் மொழிபெயர்ப்பாளர்கள் குழுவில் இடம்பெறுவோருக்குப் போதிய தமிழ் அறிவு இருப்பதில்லை. தமிழ் மொழியின் வளம் இவர்களுக்குப் புரிவதில்லை. இதனால் மொழி-பெயர்ப்பு தவறுகள் நிறைந்ததாகவோ, கொச்சைத்தனம் கொண்டதாகவோ அமைந்து விடுகின்றன.

கல்வியியலாளர் ஒருவர் இது பற்றிக் கூறுகையில் "பணம் பண்ணுவதற்காகப் போட்டி போடும் சிலரால் தான் இத்தகைய தவறுகள் இடம் பெறுகின்றன. குறிப்பிட்ட துறை சார்ந்த போதிய அறிவு இல்லாவிட்டாலும், அதிகாரிகளைத் திருப்திப்படுத்திக் குறுக்கு வழியில் பாட நூல் எழுதும் துறையிலும், மொழிபெயர்க்கும் பணியிலும் பலர் உள்நுழைந்து விடுகிறார்கள். இவர்களுக்கு வேண்டியதெல்லாம் பணம் தான். தாங்கள் எத்தகைய பாரிய தவறுகளை விடுகிறோம் என்ற உணர்வின்றிப் பணம் பண்ணும் இவர்கள், தங்களால் ஒரு தலைமுறை பாதிக்கப்படுகிறது என்பதை அறிவதேயில்லை" என்கிறார்.

கல்வித்துறை சார்ந்த பலரும் இதே கருத்தைத் தான் கொண்டிருக்கிறார்கள். சீர்கேடு-களும், காக்காய்ப்பிடிப்புகளும், நிகழக்கூடாத இரு பெரும் துறைகள் கல்வித்துறையும், மருத்துவத்துறையும். இத்துறைகளில் திறமை-யற்றவர்கள் உயர் பதவிகளையும், பாரிய பொறுப்புகளையும் ஏற்கும் போது உடனடி-யாகவே சமுதாயம் பாழ்படத் தொடங்கி விடுகிறது.

தேசியக் கல்வி நிறுவகம் சிந்திக்க வேண்டும்.

- திரிபுரன்

நன்றி - நூலகத்திட்டம்



# திசை தெரியாக் காற்று

ஜீசஸ் கிறிஸ்து பிறந்து 2000ம் வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் அவள் அப்படியே தான் இருந்தாள். அவளை யாரோ கட்டி வைத்திருப்பதைப் போல் அவள் உணர்ந்தாள். இத்தனை வருடங்களாயினும் விளங்கப்பட முடியாத புதிராகவே அவள் இருந்தாள்.

ஜீசஸ் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் ஒரு பெண்ணை ஜீசஸ் இடம் இழுத்துவந்தார்களாம். அவள் நடத்தை சரியில்லாதவள் என்பதை கையும் களவுமாக பிடித்துவிட்டார்கள். ஜீசஸ் இடம் வந்து மோசீசின் பிரகாரம் (ஜீசஸ்ற்கு முன்னர் மக்களை வழி நடத்தியவர்) அப்பெண்ணுக்கு தண்டனை வழங்கும்படி கோரினார்கள். மோசீசின் பிரகாரம் அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும். அதற்காக அவளைச் சுற்றி ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அப்போது ஜீசஸ் சொன்னாராம், உங்களில் யாராவது வாழ்நாளில் ஒரு தவறும் செய்யாமல் இருந்திருந்தால் முதல் கல்லை அவன் எறியட்டும் என்றாராம். கூட்டத்தில் இருந்தவர்கள் யாரும் அவளை நோக்கி கற்களை வீசவேயில்லை. தலையைக் குனிந்து கொண்டு கலைந்து சென்றார்களாம்.

O O O

அவள் இன்னும் அதே இடத்திலேயே இருந்தாள். அவள் இப்போதும் உணர்ந்தாள் தான் எதனாலோ கட்டப்பட்டிருப்பதைப் போல். அவளைச் சுற்றி இப்போதும் ஒரு கூட்டம் நின்றது. ஒவ்வொரு வளவுகளுக்குள்ளும், வளவுகளுக்கு அப்பாலும் அவள் மீது வீசுவதற்கு கற்களுடன் அவர்கள் காத்திருந்தார்கள்.

அவளுக்கு யார் மீதும் கோபம் வரவேயில்லை. அவள் அவர்களை வெறுக்கவும் இல்லை. அவர்களுக்காக அவள் இரக்கப்பட்டாள். ஆனால், அவளை அவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் செய்கின்ற ஒவ்வொரு சமூக கட்டுமானப் படிகளையும், அதன் சிந்தனைகளையும் அவள் வெறுத்தாள். இந்த நாகரீக மனிதர்களின் கோட்டுகளுக்குள் ஒழிந்திருக்கும் மிக மோசமான எண்ணங்களை நினைத்து அவள் கவலை கொண்டாள். அவர்களை அவர்களாக இல்லாமல் யாருக்காகவோ, எதற்காகவோ வாழ்ந்து கொள்ளச் செய்த அந்த நிறம் தெரியாத சட்டங்கள் அனைத்தையும் அவள் வெறுத்தாள்.

இவர்கள் எல்லாரும் இந்த சமூகத்தின் எல்லா நிறம் தெரியாத சட்டங்களையும் மீறினார்கள். ஆனால் யாராவது மாட்டிக் கொண்டால் பிடிபட்டவனை எல்லோரும் சேர்ந்து கல்லெறிந்து கொன்றார்கள்.

இந்த உலகை நினைக்க அவளுக்குச் சிரிப்பாக இருந்தது. என்ன போலித்தனமான உலகம்.

உலகின் எல்லா எண்ணங்களும் செயற்பாடுகளும் மனிதருக்கு சந்தோசத்தைக் கொடுப்பதையே இலக்காக கொண்டிருக் வேண்டும் என்று ... ... யாரோ எங்கோ சொன்னதை நினைத்துப் பார்த்தாள். இங்கு மனிதர்கள் தங்கள் சந்தோசத்திற்காக வாழ்வதை மறந்து போனார்கள். மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதிலேயே தங்கள் வாழ்வை தாங்களே அழித்துக் கொண்டார்கள். அவர்கள் தாங்களாகவே அழித்து கொண்ட வாழ்வை தூய்மை என்று முட்டாள் தனமாக பட்டம் விட்டார்கள்.

அவள் நினைவுகளை அறுத்தெறிந்தாள். ஏனோ அழுதாள். அவளுக்கு ஒழுங்காக அழக் கூடத் தெரியாது. வெறுமனே விக்கிக் கொண்டிருந்தாள். தன்னிலை அழுவதற்கான நிலையா என்பதும் அவளுக்கு விளங்காமலேயே இருந்தது.

அவளைச் சுற்றி நின்ற கூட்டம் அவளைப் பயமுறுத்தியது. அவள் நண்பர்கள், உறவினர்கள், அவளோடு ஒன்றாகச் சாப்பிட்டுத் தூங்கிய மனிதர்கள் எல்லாரும் எப்படி ஒரே இரவில் அவளின் எதிரிகளாக ஆனார்கள். இந்த ஒரு விடயத்தில் தான் உறவுகள் தீர்மானிக்கப்படுகின்றனவா? அப்படியென்றால்... ... ...!

மீண்டும் அவள் யோசிக்கத் தொடங்கினாள். எதற்காக அவள் இப்படி ஆனாள். எதற்காக அவள் இப்படி ஆக்கப்பட்டாள். அவளுக்கு நிறைய விடயங்கள் தெளிவில்லாமலேயே நினைவில் தெரிந்தன.

அவள் அவனைக் கட்டி அணைத்த இரவினையும், அந்த இரவில் நடந்த சம்பவங்கள் அனைத்தினையும் கோர்வைகளாக்க அவள் முயன்றிருக்கிறாள். இப்படி அவள் எத்தனை தடவை யோசித்திருப்பாள் என்று அவளுக்குத் தெரியாது. ஆனால் அவளால் அவன் முகத்தைத் தவிர எதையுமே கோர்வையாக்க் இதுவரை முடியாமல் போயிற்று. நினைவுகளின் இடையிலேயே கதறிக் கதறி அழ ஆரம்பித்துவிடுவாள். ஒவ்வொரு முறையும் ஏதாவது தொடர்பில்லாமல் ஞாபகம் வருகின்றது. எப்படி அது நிகழ்ந்தது. அப்போது அவள் என்ன மனநிலையில் இருந்தாள் என்பதை அவள் மீட்டுப் பார்க்க முயன்றாள்.

மேகங்கள் ஒன்றை முட்டி மோதிக் கொண்ட அந்த ஏகாந்த இரவில் அவள் பைத்தியம் பிடித்தவளைப் போல் எல்லாவற்றைப் பற்றியும் அதிகம் சிந்தித்தவளாயிருந்தாள். அவளால் அவள் கடந்து வந்த பல இரவுகளைப் போல் அன்றும் தூங்க முடியவேவில்லை. அவளுக்கு உண்மையிலேயே பைத்தியம் பிடித்து விட்டதா என்று அவளே தன்னில் சந்தேகப்படலானாள். அந்த இரவில் வீசிய ஜில்லென்ற காற்றும் அதனோடு போட்டியாக பூமியை முத்தமிட்ட மழைத்துளிகளும், அந்தக் கரிய இருட்டில் ஜன்னல்கள் காற்றில் திறந்து மூடும் சப்தமும் அவளை என்னவோ செய்தது. அவள் பாயில் படுத்திருந்தபடி போர்வையை இழுத்து நன்றாக மூடிக் கொண்டாள். நிலத்தின் குளிர் பாயில் பரவி இன்னும் குளிரை அதிகரிக்கச் செய்தது. இன்னுமொரு



போர்வையை எடுத்துப் போர்த்திக் கொள்வோமா என்று நினைத்தாள். பின்பு சலிப்பு மேலிட இந்தக் குளிருக்குள் விறைத்துப் போனால் தான் என்ன என்று நினைத்துக் கொண்டாள்.

நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த அவளுக்கு தூக்கம் வரவே மறுத்தது. இன்று நேற்றல்ல நீண்ட நாட்களாக அவள் எல்லாவற்றையுமே வெறுத்தாள். எதன் மீதும் அவளால் காதல் கொள்ள முடியவில்லை. எதன் மீதும் அவள் நம்பிக்கை வைப்பதற்குப் பயப்பட்டாள். தன்னைச் சுற்றி உள்ள எல்லாம் வெறும் சடப்பொருட்களாகி விட்டதைப் போலவும் அல்லது தானே சடப்பொருளாகிவிட்டதைப் போலவும் அவள் உணரத் தலைபட்டாள்.

ஏதோ ஒரு வேதனைச் சுழலில் அவள் மனம் மூழ்கித் தவித்துக் கொண்டிருந்தது. தான் இவ்வுலகில் பிறந்ததே தவறோ என்று அவள் பலமுறை வருந்தி அழலானாள். அவளுடைய நண்பனிடம் தான் வேறு எங்காவது ஓடிப் போய் விடப் போகின்றேன் என்று அடிக்கடி சொல்லிக் கொண்டாள். தான் வாழ்ந்து கொண்டிருக்கும் போலி வாழ்வை வெறுத்தாள். அதிலிருந்து தப்பி எங்காவது ஓடிவிட வேண்டும் என்ற உந்துதல் அவளை ஆட்கொண்டிருந்தது. இந்த எண்ணம் அதிகம் அவளை அலைக்கழித்தது.

தான் எல்லாருக்குமாகவும் வாழ்ந்தது போதுமென்றாகிவிட்டது. அவள் குடும்பம், உறவுகள், அவள் காதலன், சமூகம் அதன் கட்டுப்பாடுகளை மீறுவதற்கான பயம். எல்லாவற்றையும் அவள் இப்போது வெறுத்தாள். எதையோ வலிந்து நேசித்துக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு அவளை உறுத்தியது. அவள் தன் காதலனுடன் சண்டையிட்ட இரவுகளில் அவனிடம் சொல்லிக் கொண்டது ஞாபகம் வந்தது. உன்னை விட நல்லதொரு மனிதன் கிடைத்தால் நான் ஓடிப்போய் விடுவேன். இதை அவள் தன் காதலனிடம் பலமுறை சொல்லியிருக்கிறாள். அவள் சொல்லும் போதேல்லாம் அவன் தன் தவறுக்காக வருந்துவான். நீ ஓடிப் போகும் படி நான் தவறு செய்ய மாட்டேன் என்பான். அவளும் நம்புவாள். மீண்டும் சில நாட்களில் அதையே அவள் திரும்பச் சொல்வாள்.

அவள் காதலன் ஒரு சிறந்த ஜனநாயகவாதி. அவன் தன் தப்புக்களை என்றுமே மறுத்ததில்லை. எல்லாவற்றுக்காகவும் தன்னைத் திருத்திக் கொள்வதாகச் சொல்லுவான். அப்படி அவன் தன் தவறை ஏற்றுக் கொள்ள மறுத்த சந்தர்ப்பங்களில் அவள் அதனை ஆதாரத்துடன் நிரூபிக்கும் போது அவனுக்கும் அவளுக்கும் இடையில் சண்டை மூழும். அவன் தான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்பதற்கான காரணங்களை கற்பித்துக் கொண்டிருப்பான். அது அவளுக்கு தேவையாக இருக்கவில்லை. அவர்கள் சண்டை, அவன் அவளை அடிப்பதிலும், அவள் அழுது கொண்டே தூங்கிப் போவதிலும் முடிவாகிப் போகும்.

அப்படி இல்லாத சந்தர்ப்பங்களில் எல்லாம் அவள் கோபம் மிகுதியால் தன்னைத் தானே வருத்திக் கொள்ளலானாள். கைகளைக் கத்தியால் கிழித்துக் கொள்வாள். இல்லாதுவிட்டால் வலிப்பு வந்தவளைப் போல் தன் கைகள் இரண்டையும் இறுகப் பொத்தி, பல்லைக் கடித்து தலையைக் கவிழ்ந்திருப்பாள். அவள் தன் கோபத்தைக் அடக்கிக் கொள்வதற்கும் மனதைச் சோர்வடையச் செய்வதற்கும் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டாள். அதன் மூலம் தனக்கிருந்த அளவில்லாத வெறுப்புக்களையும் கோபங்களையும் அடக்கிக் கொள்ள பழகிக் கொண்டாள். அப்படி அவள் செய்யும் போதெல்லாம் அவன் பயப்படுவான். அத்துடன் அவன் சண்டையை நிறுத்தி விடுவான். தான் இனிமேல் தவறு செய்ய மாட்டேன் என்றும், தான் தன்னை மாற்றிக் கொள்வதாகவும் அவளுக்கு வாக்களிப்பான். ஆனால் அவன் என்றுமே தன்னை அவளுக்காக மாற்றிக் கொண்டதில்லை.

அவன் அவளை விரும்புவதாக சொன்ன காலத்தில் அவளுக்கு அவனுடைய புத்திஜீவித்தனத்துடன் போட்டி போட முடியாமல் போயிற்று. அவன் எதற்காக தன்னைப் பிடிக்கவில்லை என்று கேட்டதற்கு அவளால் பதில் சொல்ல முடியவில்லை.

அதன் பின்பு அவள் பட்ட வேதனை யாருக்குமே நேர்ந்திராததோ என்னவோ. அது அவள் தன் காதலனை தன்னை உண்மையாகவே காதலிக்கும் படியும் தன் மீது அளவற்ற அன்பு செலுத்தும்படியும் கெஞ்சித் திரிந்த காலங்கள். எந்தக் காதலனிடமும் ஒரு பெண் அப்படிக் கெஞ்சியிருப்பாளோ என்னவோ. ஆனால் அவள் கெஞ்சினாள். வெட்கத்தை விட்டுக் கெஞ்சினாள். அவளிடம் உண்மையாக இருக்கும்படி அவள் அவனிடம் மன்றாடினாள்.

அவன் எதற்காக அவளை விரும்பினான் என்று அவளால் இப்போதும் புரிந்து கொள்ள முடியவே இல்லை. எல்லாவற்றையும் தான் நினைத்தபடியே செய்வது. தன் சந்தோசத்திற்காக மட்டுமே வாழ நினைப்பது. அவனிடம் இருந்த சர்வாதிகாரத்தனம். அவளை ஒரு வேலைக்காரியைப் போல் சமைக்கவும், படுக்கவும், துவைக்கவுமாக வைத்திருந்தான்.

அவள் எல்லாவற்றையும் விட அவனிடம் நிறையவே எதிர்பார்த்தாள். முக்கியமாக அவன் அவளை ஒரு மனித ஜீவியாகவாவது மதிக்க வேண்டும் என்று அவள் விரும்பினாள். ஒரு வேலைக்காரியைப் போல் யாருக்காகவே எந்த நிறம் தெரியாத சட்டங்களுக்காகவோ அவள் வாழ்ந்து சாக விரும்பவில்லை.

'எனக்குத் தெரிந்ததெல்லாம் என்னவென்றால் ஒரு அடிமையும் நானும் ஒன்றெனக் கருதி என்னை நடாத்துவதை நான் அனுமதிக்க மறுக்கும் ஒவ்வொரு தடவையும் அவர்கள் என்னை ஒரு பெண்நிலைவாதி என்று கூறுகின்றார்கள் - றெபேக்கா வெஸ்ட்

சொல்லியதைப் போல் அவள் தான் ஒரு புழுவைப் போல் பார்க்கப்படுவதையும், ஒதுக்கப்படுவதையும் வெறுத்தாள்.

ஏதோ புரிந்து கொள்ள முடியாத ஒரு திரை அவளுக்கிடையில் விழுந்திருந்ததை அவள் உணரத் தலைப்பட்டாள். அவனை அவள் நேசித்ததற்கு உத்தரவாதம் தரும்படி அவள் அழுதாள். அவன் அப்போதும் அவளை நேசிப்பதாகச் சொல்லிக் கொண்டான். அவளுக்கு தன்நிலை வெட்கமாக இருந்தது. தன்னைக் காதலிக்கும்படி கேட்டவனிடம் தன்னை உண்மையாகவே காதலிக்கும்படி அவள் கெஞ்சிக் கொண்டிருந்தாள். அப்போதெல்லாம் அவன் எனிமேல் தான் சரியாக நடந்து கொள்வதாக உத்தரவாதமளிப்பான். ஆனால் அவன் என்றுமே அவளுக்கு உண்மையாக இருந்ததில்லை.

அவள் மீண்டும் மீண்டும் தோற்றுப் போனாள். அவதிசை தெரியாக் காற்று ள் கனவுகளில் வாழப் பழகிக் கொண்டாள். அந்தச் சிறையில் இருந்து தப்பி ஓடுவதாகவும் கனவு கண்டாள். அதில் அவள் சந்தோசத்தை உணர்ந்தாள். தனது கவலையை மறந்தாள்.

அனேகமான இரவுகளில் அவர்கள் சண்டை-

- சுந்தரி

நன்றி - நூலகத்திட்டம்



யிட்டுக் கொண்டார்கள். சில வேளைகளில் தனித்தே தூங்கிப் போனார்கள். அவளின் கண்ணீருடனேயே அநேகமான இரவுகள் கண்களை மூடிக் கொள்ளும்.

அவள் கனவில் வாழ்ந்தாள். அவள் கனவுக்குரியவன் அவளை அவமானப்படுத்த-வில்லை. அவளை ஒரு புழுவைப் போல் நினைக்கவில்லை. அவனாகவே அவளை முத்தமிட்டான். இரவு வியர்த்துப் போகும் வரையில் அவன் அவளுடன் பேசிக் கொண்டிருந்தான்.

அவள் தன் காதலனை தான் விட்டு விலகிப் போவது அவனுக்கும் நிம்மதியையும் சந்தோசத்தையும் கொடுக்கும் என்று அவள் நம்பத் தொடங்கினாள். இரண்டு பேரும் பொருத்தமில்லாத உறவிற்குள் புகுந்து விட்டோம் என்று அவள் தனக்குள் புளுங்கிக் கொண்டாள். அவள் காதலன் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அவன் தன் தவறுகளை திருத்திக் கொள்ளாமலே அவளை ஏய்க்கலாம் என்று நினைத்துக் கொண்டான் போலும். அவளால் அப்படி நினைக்க முடியவில்லை. அவன் இந்த சமூகத்தின் ஒட்டுதலுக்காக வேண்டி கடனே என்று அவளுடன் வாழ்ந்து முடிக்கவும், தான் நினைத்தபடியே தான் வாழவும் யோசிக்கின்றானா? அல்லது அவளை ஏய்க்க நினைக்கின்றானா என்று தெரியாமல் அவள் கவலை கொண்டவளாக இருந்தாள்.

நாட்கள் வருடங்களாக கடந்தனவே தவிர அவள் காதலனில் எந்த மாற்றமும் இல்லை. அவனுடனான சண்டையில் முகம் வீங்கியபடி அலுவலகத்திற்கு சென்று அவமானப்பட்டதைத் தவிர எந்த மாற்றமும் அவளிடமும் இல்லை. மீண்டும் அவள் அவனை விட்டு ஓடிப் போகும் நாளுக்காகக் காத்திருந்தாள்.

அவள் இப்படி நினைப்பது அவளுக்கு பைத்தியம் பிடித்து விட்டதா என்ற சந்தேகத்தை அவளுக்கே ஏற்படுத்தியது. மிகவும் குழம்பிப் போய் இருந்தாள். தான் எப்படி வாழ்வது.

அவனுக்காகவே மீதி நாட்களையும் கழிப்பதா? அல்லது எல்லாவற்றையும் விட்டு விட்டு எங்காவது ஓடிப் போய் விடுவதா? அவள் தன்னில் நம்பிக்கை இழந்தாள். அவளால் எனிமேல் எதைப் பற்றியும் சரியாகச் சிந்திக்க முடியாமல் போய் விடுமோ என்று பயந்தாள். எதைச் சரியெனப் பற்றுவது என்று தெரியாமல் நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டாள்.

தன் சிந்தனைகளும், அவளுக்கும் அவளுடைய காதலனுக்கும் இடையில் இருந்த பிரச்சினைகளும், அதனால் அவள் அவனை விட்டு விலக நினைப்பதும் சரியா? எல்லாவற்றிலும் குழம்பிப் போயிருந்த அவள் ஒரு நாள் தன் எண்ணங்கள் அனைத்தையும் அவளுடைய நண்பனிடம் கூறினாள். அவன் அவள் நினைப்பது சரியே என்று சொன்னான்.

அவளுக்கு மீண்டும் மனிதர்கள் மீது நம்பிக்கை பிறந்தது. அவள் தன் வாழ்வை சந்தோசமாக வாழ ஆசைப்பட்டாள். அவள் தன் நண்பனிடம் நான் எங்கேயாவது ஓடிப் போகப் போகிறேன் என்று சொன்ன போதெல்லாம் அவன் நீ யாருடன் ஓடப் போகின்றாய் என்று கேட்டுச் சிரிப்பான். பைத்தியக்காரத்தனமாக எதையும் செய்யாதே என்பான்.

அவள் மீண்டும் மீண்டும் வாழ்வினைக் காதலிக்க ஆசைப்பட்டாள். தான் செத்துப் போக நினைத்ததை அவள் மறந்தே போனாள். அர்த்தமில்லாத வெற்றுக் கல்லின் மீது தன் நேசத்தைக் வீணே கொட்டியதற்காக அவள் வருத்தப்பட்டாள். இனிச் சிறகுகளை விரித்து சுதந்திரமாகப் பறந்திடலாம் எனக் கனவு காணலானாள்.

ஆனால், அவள் கனவுகளும் யதார்த்தங்களும் வெவ்வேறு திசைகளில் போய் ஒன்றை ஒன்று சந்திக்க முடியாமலே போய்க் கொண்டிருந்தது.

யதார்த்தம் அவளை பேய் விரல்கள் கொண்டு பயமுறுத்தியது. அவள் கலங்கிப் போனாள்.

அவள் தன் காதலனைப் பிரிவது சாத்தியமா? அப்படிப் பிரிந்தால் எத்தனை பேரின் கேலிப் பேச்சுகளுக்கு ஆளாக வேண்டும். எங்கேயாவது போவது என்றால் எங்கே எப்படிப் போவது? அவள் தொண்டைக் குழியை யதார்த்தப் பேய் இறுக்கியது. அவள் தற்கொலைக்கும் வாழ்விற்குமான போராட்டத்தில் நாட்களைக் கடத்தினாள். அவளுக்கு இருந்த வாழ்வின் மீதான ஆசையில் அவளுக்கு தற்கொலை செய்து கொள்ள முடியாமல் போயிற்று.

அன்றும் அவள் தனது மன குழப்பத்துடன் தூக்கமின்றித் தவித்தாள்.

பைத்தியக்கார உலகம் அவளை பயமுறுத்தத் தொடங்கியது. அவள் இப்போது சரணடையத் தயாராக இல்லை.

எல்லாவற்றில் இருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். எந்தப் போலிகளும் தன்னை அமிழ்த்தி விடாதவாறு வாழ வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் படுத்திருந்த பாயில் தூக்கம் இன்றிப் புரண்டாள். வாழ்வின் தோல்வியில் அவள் நம்பிக்கைகள் அழிந்து போனதற்காக அவள் வேதனைப்பட்டாள். எழுந்து ஹோலுக்குள் உலாவினாள்.

காற்றில் அடிபடும் ஜன்னல்களை இழுத்துப் பூட்டினாள். எதையாவது வாசிக்கலாமா என்று நினைத்தாள். பின்பு தான் இருக்கும் மனநிலையில் அது சாத்தியப்படாது என்று நினைத்துக் கொண்டு மீண்டும் போய் பாயில் புரண்டாள்.



அவள் நினைவு அவளுக்கு எரிச்சலை ஊட்டியது. இவ்வளவு சிறு வயதில் வாழ்வை இழந்து விட்டோமே என்கிற கவலையும் வாட்டியது. அவள் அழுதாள்.

அவளைச் சுற்றி இருந்த ஒவ்வொரு மனிதர்களையும் நினைத்துப் பார்த்தாள். அவள் வேதனைப்படும் ஒவ்வொரு கணமும் அவளைத் தோற்கடித்த சந்தோசத்தில் அவர்கள் இருந்தார்கள். அவள் வாழ்வில் நின்மதி இன்றி இருந்தது அவர்களின் கதைப் பொருளாகிவிட்டது. அவள் முகம் வீங்கியிருந்த நேரங்களில் அடிவாங்கி-னாயா என்று அவளை நக்கலடித்த பேய் முகங்களை நினைத்து வெறுத்துக் கொண்டாள். நண்பர்கள் போல் தலையைத் தடவி அவள் மார்பில் வழுகி விழுந்த கைகளை நினைத்துப் பார்த்தாள்.

எல்லாமே அவளைப் பயமுறுத்தியது. தான் வெளியேறுவது என்பது எவ்வளவு துாரம் சாத்தியமானது என்று சிந்திக்கலானாள். எல்லாரும் தன்னைக் குதறிப் போட்டு-விடுவார்கள் என்று பயந்தாள். அதே நேரம் இப்படியே அவளால் வாழ முடியவில்லை. அதனை விடத் தற்கொலை செய்துகொள்ளலாம் போல் தோன்றியது.

எது நடந்தாலும் பரவாயில்லை வெளியேறுவது என்று யோசித்தாள்.

அவள் நண்பனுடன் கதைக்கும் போது வெளி உலகின் மீதான பயத்தில் கதறி அழுதாள். இயலாத போது ஹோலுக்குள் அங்கும் இங்குமாக அலைந்தாள். அவள் நண்பன் அவளிடம் கேட்டான் உனக்கு துாக்கம் வரவில்லையா? அவள் இல்லை என்றாள்.

நீங்களும் துாங்கவில்லையா? என்றாள் அவள். அவன் அப்படித்தான் என்றான். அவளுடைய பைத்தியக்காரத்தனமான நடவடிக்கைகளை அவன் நீண்ட நேரமாக விழித்திருந்து கவனித்திருப்பானோ என்னவோ.

அவளுக்கு அதெல்லாம் வெட்கத்தை உண்டுபண்ணவில்லை. அவள் வாழ்விற்காக ஏங்கினாள். தனது மனதின் ஏக்கத்திற்காக வருந்தி அழுதாள்.

வாழ்வை எது எதற்காகவோ தேடி அவள் தோற்றுப் போயிருந்தாள். எல்லாமே அவளுக்கு கிடைத்தது. ஆனால் அவளை ஒழித்து வைத்து வருடிக் கொடுப்பதற்கான ஒரு இதயத்தை விட அவள் எல்லாவற்றையும் பெற்று விட்டாள். அவள் ஜமீலாவின் தானியாருக்காக ஏங்கினாள். எதுவுமே இல்லாமல் அவனாக இருக்கும் அவனை அவள் ரொம்பவும் நேசித்தாள்.

அவள் அழுதிருந்த பொழுதொன்றில் அவளின் நண்பன் அவள் கைகளை எடுத்து வருடிக் கொடுத்தான். அவள் அவனுக்கு மறுப்பு சொல்லவில்லை. அந்த வருடல் அவளுக்குப் புதுவிதமாக இருந்தது. அது தரும் உணர்வு அவளுக்குத் தேவையாக இருந்தது. அவள் கண்களை மூடிக் கிடந்தாள். தனது தானியாரே வந்து விட்டதைப் போன்ற உணர்வை அவள் பெற்றாள். இவ்வுலகில் கொடூர வெய்யில் அலைக்கழிக்கப்பட்டதன் களைப்பு அவளில் இருந்தது. அவள் நிழலில் துாங்க ஆசைப்பட்டாள்.

அவன் அவளிடம் மீண்டும் குளிருகின்றதா என்றான். அவள் ம்... கொட்டினாள். அவன் அவளை அழைத்தான். அவள் மறுக்கவில்லை. அவனை அவளாகவே அணைத்துக் கொண்-டாள். ஒரு கணம் அவனைத் தானியாராகவே அவள் நினைத்துக் கொண்டாள்.

அதன் பிறகு அவள் என்னவானாள் என்று 'அவளால் நினைவு கொள்ள முடியவில்லை. அந்தக் கணங்கள் எப்படி நகர்ந்தன என்று அவள் சிந்திக்கலானாள். எதற்காக அந்தக் கணங்களை அவள் அரவணைத்துக் கொண்டாள். அதன்பிறகு அவளால் அந்தக் கணங்களை நினைக்கும் போதெல்லாம் அழ முடிந்ததே தவிர வேறெதையும் நினைக்க முடிவதில்லை.

அவளுக்காக அவள் நினைத்திருந்த ஒரே நண்பன் மீண்டும் அவளிடம் வரவேயில்லை. அவன் போய் விட்டான். அவள் அதற்காகவும் சேர்த்து மீண்டும் அழலானாள்.

இப்போதும் அவள் எதனாலோ கட்டி-வைக்கப்பட்டிருப்பதைப் போல் உணர்ந்தாள். ஏதோ ஒரு கொடி படர்ந்து அவளை மூச்சுவிட முடியாமல் இறுக்கிக் கொள்வதைப் போலும் அவள் சுவாசிக்க முடியாமலும் திணறினாள். அவளைச் சுற்றி அவர்கள் நின்றார்கள். அவளைக் கல்லெறிந்து கொல்லப் போகின்-றார்கள். அவள் எதனையும் சொல்லும் திராணியற்று நின்றாள்.

அவள் காதலன் மீண்டும் தன்னிடம் வரும்படி அவளை அழைத்தான். அவள் போகவில்லை. எதுவுமே அற்ற வெற்றுச் சடங்குகளுக்காக அவளை அணுஅணுவாக சாகடிக்க அவளால் இனிமேலும் முடியாது.

அவளுக்கு எதையுமே புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் தன்னிலை பற்றி மீண்டும் மீண்டும் சிந்திக்கலானாள்.

அவள் எங்கே தவறு விட்டாள். அவள் காதலனை அவள் நேசித்த தருணத்திலா? அவள் காதலனிடம் அவளுக்கு உண்மையாக இருக்கும்படி கெஞ்சித் திரிந்த தருணத்திலா? அவள் நண்பன் அவள் கைகளை வருடிய தருணத்திலா? அல்லது அவளாகவே அவனை அணைத்துக் கொண்ட தருணத்திலா தவறு நிகழ்ந்தது. எல்லாவற்றையும் விட அவள் சிந்தனையிலா?

தனது சிந்தனைக்காக அவள் கல்லெறியப்படுவதை அவள் ஏற்கத் தயாரானாள். தான் நினைத்தது, தான் வாழ்ந்தது எல்லாமே சரியானது என்று அவள் முற்றுமுழுதாக நம்பினாள். தான் செய்தது சரியே என்பதில் அவள் மாறாத நம்பிக்கை கொண்டிருந்தாள்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். இப்போது அவளை நோக்கிக் கற்களை வீசுவதற்காக நின்ற மனிதர்களைப் பார்க்க அவளுக்கு வெறுப்பாக இருந்தது. அவள் தனித்திருந்த தருணங்களில், அன்பான நம்பிக்கைக்குரிய மனிதர்களைத் தேடிய தருணத்தில், அவளை நேசிப்பதற்கான மனிதர்களை, உறவுகளை அவள் தேடிய தருணங்களில் எல்லாம் இவர்கள் எங்கே போனார்கள். அவள் தனக்கான உணவை சமைத்து வைத்து விட்டு தனித்து சாப்பிடு-வதற்கு மனமில்லாமல் கதறி அழுத தருணங்களில் எல்லாம் இவர்கள் எங்கே போனார்கள்? அவள் முகம் வீங்கி பைத்தியக-காரியைப் போல் அலைந்த போது சந்தோசப்-பட்டவர்கள் அல்லவா இவர்கள்!

இந்த மனித சமுதாயத்தின் மீதே காறி உமிழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. அவளின் மார்பில் கைகளை வேண்டுமென்றே வழுக விட்டவர்களும் கற்களுடன் காத்திருந்-தார்கள்.

அவள் மீண்டும் மீண்டும் எல்லாவற்றுக்காகவும் அழுதாள். அவளுடைய நண்பனைத் தேடினாள். அவன் கூட்டத்தின் ஒருவனாய் ஒதுக்குப் புறமாக நின்று கொண்டிருந்தான்.

யாருக்கும் தெரியாத ஓரிரவில் நிகழ்ந்தவை எல்லாவற்றையும் வெளியில் சொல்லி ஏன் தேவையில்லாமல் மாட்டிக் கொண்டாய் என்று அவள் மேல் பரிதாபப்படுகின்றானா?

அவள் யாருக்கும் துரோகம் செய்யவில்லை. அவளால் முடிந்தவரை அவளாக வாழ்வதற்கு ஆசைப்பட்டாள். அந்தக்கரிய இரவின் இரகசி-யத்தை அவளாக வெளித் தெரியப்படுத்தியதும் அவளுக்கு சந்தோசமே. அவள் இப்படித்தான். அவளை முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள். இல்லாது விட்டால் போங்கள் என்று நினைத்துக் கொண்டாள்.

அவளுக்கு தனது நண்பனின் குறும்புக் கண்களின் மீது கோபம் வரவே இல்லை. அவனைத் துரோகி என்று ஏசுவதா? அல்லது அவள் தான் பைத்தியக்காரியா? அவள் நேசித்தாள். அவன் மீது பரிதாபமாக இருந்தது அவளுக்கு. யாருக்காக தான் நல்லவன் என்று நடிக்கின்றான்?

அவள் சிந்தனையின் ஓட்டத்தை உதறி விட்டுக் கூட்டத்தை நோக்கினாள்.

இப்போது அவர்கள் அவளை நோக்கி கற்களை வீசத் தொடங்கினார்கள். அவள் மௌனமாக இருந்தாள். அவளது உடலின் ஒவ்வொரு தசைத்துண்டங்களையும் அக்கற்கள் கிழித்துக் கொண்டு போயின. அவள் தன் நண்பனை முத்தமிட்ட உதடுகளை கற்கள் கிழித்து இரத்தம் சிந்தியது. அவள் அழவில்லை. அவள் மௌனம் அவர்களை பயமுறுத்தியது.

அவர்கள் நடத்தை கெட்டவளே செத்துப் போ என்று திட்டுவதும், இன்னும் வார்த்தைகளால் வசைவதும் அவளுக்கு நன்றாகவே கேட்டது. யாரும் அவளுக்காய் அவளைப் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கவில்லை. அவளுடைய உறவுகள் கூட்டத்தில் மந்தைகளாய் மறைந்து போனார்கள்.

அவளுக்காக ஜீசஸ்சும் வரவில்லை. அவர் வரவேயில்லை. இந்த முட்டாள்தனமான கூட்டம் அவளை நோக்கி கற்களை வீசுவதை தடுப்பதற்கு ஜீசஸ் அவளிடம் வராமலே போனார். அவள் ஏமாந்து போகவில்லை. அவர் வரமாட்டார் என்பதும் அவளுக்குத் தெரிந்ததே.

எங்கிருந்தோ ஒரு கல் அவள் மண்டையைப் பிளந்தது. அவள் மயக்கம் போட்டு விழுந்தாள்.

மீண்டும் அவள் கண்விழித்த போது ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் போயிருந்தார்கள். அவளுக்கு அழுகை வந்தது. உடல் வலி எடுத்தது. அவள் நிமிர்ந்து அவள் நண்பனைத் தேடினாள். அவன் இன்னும் அதே மூலையில் நின்று கொண்டிருந்தான். அவன் கையிலும ஏதோ இருந்தது. அது கல்லா என்று அவளால் உறுதிப்படுத்த முடியவில்லை. அவள் நண்பனின் பார்வையில் தெரிவது எது என்றும் அவளுக்குத் தெரியாது. ஆனால் அவள் இன்னும் அவனை நேசித்தாள். திக்குத் தெரியாத காட்டில் அலைந்து கொண்டிருந்த அவளின் சிதைந்து போன ஆத்மாவிற்கு ஒரு கணமேனும் அவன் தானியாராக இருந்ததிற்காக அவனை இன்னும் அவள் நேசித்தாள். அவனைப் பரிதாபமாகப் பார்த்தாள். அவன் தலையைக் குனிந்து கொண்டான்.

அவள் செத்துப் போகாததை அறிந்த சிலர் மீண்டும் அவளை நோக்கிக் கல்லெறிவதற்கு தயாரானார்கள்.

அவள் தன் கட்டுக்களை விடுவித்துக் கொள்ள நினைத்தாள். அப்போது தான் அவள் எதனாலும் கட்டப்பட்டிருக்கவில்லை என்பதும், அவள் ஆத்மாவால் தான் அவள் தன்னையே கட்டி வைத்திருந்தாள் என்பதும் அவளுக்குப் புரிந்தது.

அவள் எழுந்தாள். தன் பலம் அத்தனையையும் கூட்டி எழுந்து நின்றாள். பைத்தியக்காரியைப் போல் தலை சிலும்பி இரத்தம் கொட்டி நின்றாள். ஆனாலும் எதையோ அவள் தேடினாள்.

மீண்டும் ஒரு நம்பிக்கையின் மரணம் அவள் மனதை உறுத்த அவள் அழுது தீர்த்தாள்.

திசை தெரியாத பாதையில் அவள் நடக்கத் தொடங்கினாள்.

O

நன்றி - நூலகத்திட்டம்



தமிழ் நாவல் வரலாற்றில்

# 'கிராமத்து கனவுகள்'

## இன்னுமொரு பரிமாணத்தின் ஆரம்பம்

தமிழில் நாவல் இலக்கியம் தோன்றி நூற்றிருபது வருடங்கள் கடந்து நிற்கிறது.

இந்த நீண்ட பயணத்தில் பல்லாயிரக் கணக்கான புதினங்கள் நாவல் எனும் பெயரில் நூலுருப் பெற்று வந்திருக்கிறது. அத்தனை காகிதக் கட்டுகளையும் நாம் இலக்கியம் என அடையாளமிட்டே வந்திருக்கிறோம்.

கோஷ்டி பிரிந்து, அணிசார்ந்து, கொள்கைகள் பிரிந்து, கூடி கூச்சல் போட்டிருக்கிறோம். இந்த இரைச்சலில் பல உன்னதமான படைப்புகளின் 'ஆன்மா'வின் குரலை நாம் அடையாளம் காணவும் கேட்கவும் தவறியிருக்கிறோம்.

நவீன தமிழிலக்கியத்தின் ஒரு நூற்றாண்டு கால வரலாற்றில் 'சிறுகதை' இலக்கியம் தோன்றிய ஒரு பத்து இருபது ஆண்டுகளிலேயே நமது சிறுகதைகள் உலகத்தரத்தின் அந்தஸ்தை எட்டிப் பிடித்தது. ஆனாலும் தமிழ் நாவல் என்று வரும் போது - உன்னதமான படைப்புக்களைக் காண நாம் அய்ம்பது அறுபது வருடங்கள் காத்திருந்திருக்கிறோம்.

வாராவாரம் நமது தொடர்கதை வாசகர்களுக்கு தீனி போட்டு வந்த நமது மூத்த எழுத்தாளர்களின் பார்வையில் தைக்க மறந்த பல சங்கதிகள் ஒரு சிலரின் பார்வையில் பட்டு - தமிழ் நாவல் இலக்கியத்திற்கு புதிய பரிமாணங்களைத் தேடித்தந்தது.

அந்த வகையில் கோயம்புத்துார் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். ஷண்முகசுந்தரத்தின் கிராமிய உலகங்களான 'நாகம்மாள் - சட்டிசுட்டது' குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியவை.

கல்கியும், அகிலனும் கிராமிய வாழ்வின் அனுபவங்களை பட்டணவாசியின் பார்வையினூடாகத் தரிசித்து - தாங்களே புல்லரித்து நின்ற போது - இதற்கு நேர்மாறாக செயல்பட்டவர் ஷண்முகசுந்தரம் அவர்கள். தாம் வாழும் சமூகத்தின் இயற்கையான வாழ்வை அவர்களின் உயிர்த் துடிப்பான பேச்சுமொழியிலேயே படம்பிடித்துக் காட்டி - தமிழ் நாவல் துறைக்கு புதிய பாதையிட்டார்.

இவரோடு இணைத்துப் பார்க்கக் கூடியவர் சுந்தரராமசாமி அவர்கள். 1960களின் ஆரம்பத்தில் வெளிவந்த அவருடைய 'ஒரு புளிய மரத்தின் கதை' நாவல் - தமிழ் நாவல் உலகின் மற்றுமொரு பரிமாணத்தைச் சுட்டி நின்றது.

இவ்விரு கலைஞர்களின் தடங்களினூடே பயணம் மேற்கொள்ள வேண்டிய நமது நாவல் நாயகர்கள் - கல்கி - சாண்டில்யன் - அகிலன் என்ற 'சைத்தான்' களின் வழிகேட்டில் வீழ்ந்து தடம்புரண்டனர்.

இருந்தாலும் அவ்வவ்போது தோன்றிய சில படைப்பாளிகளின் ஆக்கங்கள் நம்பிக்கை அளிக்கத் தொடங்கியது மட்டுமல்லாமல் புதிய வரவுகளின் அவசரத் தேவையையும் சுட்டிநின்றன.

அந்த வகையில், உயிரோவியம்,பாலும் பாவையும், பஞ்சும் பசியும், புத்தம் வீடு, தாகம் , அம்மா வந்தாள், சாயாவனம், பள்ளிகொண்டபுரம் - மணலும் புனலும் , வாடிவாசல் , கோபல்ல கிராமம் என்று கோடிகாட்டி நின்றது.

குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இந்தப் படைப்புகள் வெளிவந்து சுமார் இருபத்தைந்து முப்பது வருடங்களுக்குப் பிறகு தான் தமிழ் நாவல் இலக்கியத்தின் அசலான சில படைப்புகளை - கலையின் வெட்டு முகங்களின் களிப்போடும் - வாழ்வின் சத்யதரிசனங்களோடும் படைக்க முடிந்துள்ளது.

ஈரம் கசிந்த நிலம், ஆனந்தாயி, கருக்கு, ஒரு கடலோரக்கிராமத்தின் கதை, கோவேறு கழுதைகள் - என்று தமிழ் நாட்டின் கிராமங்களின் ஆன்மாவை நம்மால் தரிசிக்க முடிந்தது. 120 வருட தமிழ் நாவல் இலக்கியத்தின் நமக்குத்தேறிய அறுவடைகளாக சித்தித்திருப்பது ஒரு இருபத்தைந்து படைப்புகளாகும் என நம்புகிறேன்.

இதில் இன்னுமொரு பரிமாணமும் உண்டு. தமிழில் நாவல் என்ற பெயரோடு வெளிவந்த - வெளிவந்து கொண்டிருக்கும் படைப்புகளைப் பார்க்கிலும் பிற இந்திய மொழிகளிலிருந்து - தமிழில் மொழி மாற்றம் பெற்று வெளிவந்த படைப்புகளின் ஆளுமையும் கலையழகும் சற்றுத் துாக்கலாக மனத்தில் எட்டிப் பார்ப்பதையும் இந்த இடத்தில் சொல்லாமலிருக்க முடியவில்லை.

அய்ம்பது ஆண்டுகளுக்கு முன்னரே மராட்டிய மொழிக் கலைஞரான வி. ஸ். காண்டேகரின் படைப்புகள் - கா ஸ்ரீயின் கைப்பட்டுத் தமிழ் வாசகர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை அளித்தது. அதேபோல் சரத்சந்திரர், யு. ஆர். அனந்தமூர்த்தி, கேசவதேவ், தகழி, வைக்கம் முகம்மது பஷீர், வாசுதேவன் நாயர், கே. அப்பாஸ் போன்றவர்களின் படைப்புகள் தமிழில் மொழிமாற்றம் பெற்று நமது வாசகர்களுக்கும் படைப்பாளிகளுக்கும் ஒரு புதிய அனுபவ உலகத்தைக் காட்டியது.

இந்தியாவின் வெளி மாநிலங்களிலிருந்து தமிழில் மொழிமாற்றம் பெற்றுவந்த படைப்புகளின் தரத்திற்கு இணையான படைப்புகளை தமிழ் படைப்புகளோடு ஒப்பீட்டு ரீதியில் நம்மால் சொல்ல முடியவில்லை.

இதேநேரம் தமிழிலிருந்து வேறு மொழிகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட நமது படைப்புகளின் ஆளுமையை (ஞானபீடப் பரிசு பெற்று இந்திய மொழிகளில் (18) மாற்றம் பெற்ற அகிலன் அவர்களின் சித்திரப்பாவை) எண்ணும் போது வெட்கமாக இருக்கிறது.


இத்தருணத்தில் நமது படைப்புகள் எத்தனை? இதற்குள் இன்னுமொரு சமூக குழுமமாக - இந்த நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களின் வாழ்வை - அச்சொட்டாகத் தொட்டுக் காட்டிய படைப்புகள் எத்தனை? (சென்ற ஆண்டு சாகித்திய விருது பெற்ற அ.ஸ.வின் 'தர்மங்களாகும் தவறுகள்') பதில் என்னவோ முணுமுணுப்புத்தான்.

என்னளவில் மனத்தில் நிற்கும் படைப்புக்களாக நிலக்கிளி, அவர்களுக்கு வயது வந்துவிட்டது, கிட்டி, எஸ்.பொ. வின் சடங்கு, செங்கையாழியானின் காட்டாறு, ஆனை, கருணாகரமூர்த்தியின் ஓர் அகதி உருவாகும் நேரம், எழுதியவர் பெயர் கூட இல்லாத நிலையில் வெளிவந்து - நமக்கெல்லாம் இயக்கங்களின் இன்னுமொரு 'வெட்டுமுக' வாழ்வை வெளிச்சத்திற்கு காட்டிய 'போர் உலா' (மலரவன்- இது 1995 நடுப்பகுதியில் வெளியானது) ஒரு உன்னதமான படைப்பாகும்.

இயக்கம் - இலட்சியம் என்ற கொள்கைகளைக் கடந்தும் - போராளியின் விருப்பு வெறுப்புகளைக் கடந்தும் சொல்லப்பட்ட நாவல் 'போர் உலா'.

நான் வாசித்த வகையில் - மேலே கூறப்பட்ட படைப்புகளிடமிருந்து கிடைத்த மனித குலவாழ்வின் கலாபூர்வமான விகாசங்களூடே நண்பன் 'சம்ஸ்'ன் கிராமத்து கனவுகளையும் படித்தேன்.

'கிராமத்து கனவுகள்' நாவலின் சூழலும் பகைப்புலமும் இதுவரை தமிழ் படைப்புலகில் சொல்லப்பட்ட தளங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருப்பதே அதற்கு ஓர் ஆளுமையையும் கவனிப்பையும் வழங்கியிருக்கிறது.




நூல்: கிராமத்துக் கனவுகள்

(நாவல்)

ஆசிரியர்: எம.எச்.ஷம்ஸ்

முதற்பதிப்பு: 1999 ஒக்ரோபர்

விலை: ரூபா 120

அட்டைவடிவமைப்பு: பிரகீத் எக்னெலிகொட

பக்கங்கள்: 146+xiv

பதினெட்டாம் நூற்றாண்டின் மையத்தில் தொடங்கியகதை 19ம் நூற்றாண்டின் சாய்ப்பொழுதை வந்தடைகிறது.

மூன்று தலைமுறையைச் சேர்ந்த சுமார் 20 கதாமாந்தர்கள் கதையில் வந்து போகிறார்கள். ஊரில் ஒரு சியாரம் (சங்கை பொருந்திய மவுலானாமார்களின் அடக்கஸ்தலம்) இன்பத்திற்கும் துன்பத்திற்கும் பற்றுக் கோடாயிருந்து மனித மனங்களை ஆசுவாசப்படுத்துகிறது.

சியாராமும் அதனோடு இணைந்த பள்ளியுமே கதையின் மையப்புள்ளி - கூட்டுக்குடும்ப வாழ்வின் சகலரும் - சகலதும் இறைவனின் 'மேன்மிகு-நாமத்தால் இணைக்கப்படுகின்றார்கள்.

அந்நாள்களில் தென்னிந்தியாவிலிருந்து காலத்துக்குக் காலம் வருகை தரும் மவுலானா மார்களின் 'கராமத்து'களில் தங்களின் அறியாமையை ஒப்புக் கொடுத்த அப்பாவி மக்கள் தங்கள் வாழ்வின் அனைத்து பிணிகளையும் அழுக்குகளையும் போக்கும் அரும்மருந்தாக இவர்களை நம்பினார்கள்.

பொரித்த மீனை நீரில் போட்டதும் வாலால் அடித்து நீந்தி மறைந்த மீன்கதைகள்.

கெட்ட சைத்தான்கள் (ஆவிகள்) பிடித்து போத்தலில் அடைத்தல்.

பில்லி - சூனியம் எடுத்தல்.

தாம் விரும்பிய பெண்ணை அடைந்துகொள்ள 'வசியம்' செய்தல்.

வீடு வளவு காவல் பண்ணுதல்.

குழந்தைக்களுக்குப் பெயர் வைத்தல், அட்சரம் கட்டுதல்.

'ஜின்'களைக் கொண்டு நோய் நொம்பலங்களைத் தீர்த்தல்.

எல்லாவற்றிற்கும் உச்சமாக 'குழந்தைப்-பாக்கியம் இல்லாதவர்களுக்கு' அதையும் பெற்றுக் கொடுத்தல். (தோப்பில் மீரானின் கடலோரக் கிராமத்தின் கதையில் இக்காட்சி அற்புதமாக சொல்லப்பட்டிருக்கிறது)

இவ்வாறு மவுலானாமார்களின் கராமத்துகள் நீள்கிறது.

நிலச்சுவான்தரான மத்திச்சம் அப்பாவின் எஹெலியகொட தோட்டம்.

மத்திச்சத்தின் எடுபிடியாக வரும் இப்றாகிம் தோட்டத்தைப் பராமரிக்கும் மனப்பு - தயாவதி சகோதரங்கள்.

மத்திச்சம் அப்பாவினால் கெடுபடும் தயாவதி பின்னர் கலிமாச் சொல்லிக் கொடுத்து 'சித்தி' எனப் பெயருமிட்டு மத்திச்சத்தின் 'எடுபிடியான' இப்றாகீம் தலையில் கட்டப்படுகிறாள். இதனால் மத்திச்சத்திற்கு உண்டான குழந்தைக்கு இப்றாகீம் தகப்பனாகிறார். இஸ்மாயில் எனும் அந்தக் குழந்தையே மூன்றாம் தலைமுறையில் தளிர்விடும் புத்திஜீவிகளின் தோற்றத்திற்கு சாட்சியமாகி நிற்கும் ரபீக் - முஸ்தகீம் சகோதரர்கள்.

மத்திச்சம் அப்பாவின் மூத்த மகளாக வரும் மூமீனாத்தா - மூமீனாத்தாவின் இருபெண்களான நஸீமா - மெஹ்ரூன் சகோதரிகள்.

மூன்றாவது தலைமுறையில் இஸ்மாயிலின் மகன் ரபீக் மூமீனாத்தாவின் மகளைக் காதலித்து - ஒரு தருணத்தில் ஏற்படும் உறவில் உருவான கருவை அழிப்பதற்கு பெரும் முயற்சி செய்தும் முடியாத நிலையில் 'மருதமுனை', 'அப்துல்லா' மாமா வீட்டிற்கு அனுப்பி குழந்தையைப் பெற்று யாருக்காவது கொடுத்துவிடத் திட்டம் - பின்னர் 'கரு' தன்னிச்சையாக கலைந்து விடுகிறது.

இத்தனை விபரீதம் ஏற்பட்ட பிறகும் தம் மகள் நஸீமாவை 'ரபீக்' சொந்த இரத்தத்தின் இரத்தம் என்று தெரிந்தும் திருமணம் முடித்துக் கொடுக்க மறுக்கும் மூமீனாத்தாவின் நிலவுடைமை மனோபாவம் கதையில் இயல்பாகவே ஆரவாரமின்றி நகர்கிறது. அதன் தனிச்சிறப்பும் இயல்புமாகும்.

மத்திச்சம் அப்பாவின் மூத்தமகனான அப்பாஸ் மத்திச்சம் இரண்டாவது தலைமுறையின் பிரபுத்துவச் சின்னமாகத் தெரிகிறார்.

அப்பாஸ் மத்திச்சத்தின் மகனாக சிங்கப்பூர் சோக்காளியாக வரும் முகம்மது மகள் லைலா.

மூமீனாத்தாவின் மகனாக வரும் முர்தளா - (கள்ளமாட்டு வியாபாரியும் கூட)

தேத்தண்ணிக்கடை படாமூஸா

பள்ளிக்கணக்குப் பிள்ளையாக வரும் காஸீம் நானா.

சீனடி சிலம்படி மாஸ்டர் அத்துக்காக்கா.

பிடவைக்கடை மம்மலி என்று மனிதர்கள் வந்து போகிறர்கள்.

நிலச்சுவான்தர்களிடம் சிக்கித் தவித்த கிராமம் பல தசாப்தங்களின் பின் பிரபுத்துவவாதிகளின் ஆக்கிரமிப்புக்குள்ளாகி - மூன்றாவது தலைமுறையினரின் கைக்குமாறுகிறது - (பக்கம் 143)

"டிரஸ்டிமார், கணக்கப்பிள்ளை, லெப்பை எல்லோரும் முஸ்தகீம் பார்ட்டியோட இண்டக்கி பள்ளீல மீட்டிங் நடந்ததாம்"

"பிறகு... பிறகு?" அவசரப்பட்டான் ரபீக்.

"பள்ளி பொறுப்புகள வாலிப பொடியன் மாருக்கு குடுக்க அவங்க ஒத்துக்கொண்டு ஒதுங்கிக் கொண்டாங்களாம்"

அவனது மனதை புழுவாக அரித்துக்கொண்டிருந்த எத்தனையோ திட்டங்கள்..., தம்பியோடு கருத்துப் பரிமாறிய சந்தர்ப்பங்கள்.., சமயம் என்ற பெயரில் சபையேறிய மூடநம்பிக்கைகளால் கெட்டழியும் அப்பாவி மக்கள்..., பக்திவேசத்தில் நடக்கும் சுரண்டல்கள்..., படிப்பறிவும் பொருளாதார வளமும் இல்லாத நிலையில் அந்தக் கிராமத்து மக்களின் எதிர்பார்ப்புகள் கனவுகளாகவே கழிகின்ற அவலம்.

இந்த துர்ப்பாக்கியங்களுக்கெல்லாம் துாண்டுகோலாக இருந்த பள்ளிவாசல் இனிமுற்போக்கு வழியில் நடைபோடும். அவனது நினைவுத்திரையில் வெளிச்சம் பளிச்சிட அங்கே முஸ்தகீமும் அவனது தோழர்களும் கம்பீரமாக....

'சம்ஸ்' நிம்மதிப் பெருமூச்சுவிடுகிறார்.

தமது முன்னோர்கள் வாழ்ந்த 'திக்வெல்லைக்' கிராமமே நாவலின் பகைப்புலம். கதையென்று அங்கே ஒன்றுமில்லை. ஆனாலும் வாழ்வு - போலியும் ஆசாரங்களும் அறியாமையும் மலிந்த வாழ்வு - அந்த மக்களின் ஒரு நூற்றாண்டுகாலவாழ்வு - அவர்களுக்கே உரிய 'பேச்சுவழக்கில்' கலாபூர்வமாக சொல்லப்பட்டுள்ளது.

இதை வசப்படுத்திய சம்ஸ் அவர்கள் பல்வகைப் பரிமாணங்கள் கொண்ட ஓர் தனிமனிதன். எழுத்தாளர், கவிஞர், விமர்சகர், பாடகர்-கோலாட்டக்காரர் - பத்திரிகையாளர் - இடதுசாரி சிந்தனையாளர் - மொழிபெயர்ப்பாளர்.

இவ்வாறு பல்வேறு தளங்களிலும் ஆழமாகக் கால்பதித்தவர். ஆழ்ந்த தமிழ்ப்புலமையும் சிங்களப்புலமையுமிக்கவர்.

எனவே அவரிடமிருந்து இத்தகையதோர் படைப்பு வெளிவந்ததில் வியப்பில்லை.

இந்த நாவலுக்கு முன்னீடு எழுத வந்த எமது மூத்த படைப்பாளியான செங்கை ஆழியான் அவர்கள்...

"மூதாதையர்களின் தொன்மங்களைக் கூறவந்த சம்ஸ் அவர்கள் அறிவுசார் நிலைகளை விளக்கத் தவறிவிட்டார்" என்கிறார்.

தொன்மங்களை அறிவுபூர்வமாக விபரிக்கும் போது தான் எழுத்தாளர் வரலாற்று ஆசிரியராகி விரிவுரை செய்கிறார்.

அறிவை முன்னிறுத்தி சமூகத்தை நெறிப்படுத்த முயல்கிறார். (உ-ம்:- டாக்டர் மு.வ.) இப்பொழுது இவர் மரியாதைக்குரியவராகிறார்.

எழுத்தாளர் சங்கைக்குரியவராகும் போது - உலகம் அவரிடமிருந்து 'மெஸேஜ்' யை மட்டுமே எதிர்பார்க்கிறது.

நம்மில் பலர் 'மெஸேஜர்'கள் தான். கற்பனையில் வாழ்வைக் காண்பவர்களால் ஒருபோதும் உண்மைக் கலைஞராக முடியாது.

இங்கே சம்ஸ் எழுத்தாளராக நின்று தம்பட்டம் அடிக்கவில்லை. கலைஞராகி கதை சொல்லியிருக்கிறார்.

தமிழ் நாவல் வரலாற்றில் 'கிராமத்து கனவுகள்' இன்னுமொரு பரிமாணத்தின் ஆரம்பம் என்றும் சொல்லலாம். நாவலைப் படித்து முடித்ததும் திக்வெல்லை முன்னோர்களின் வாழ்வை - நூறு ஆண்டு கால வாழ்வை சொல்லி முடித்த சம்ஸ் இன் ஏக்கப்பெருமூச்சு எனக்குக் கேட்டது.

அன்பான வாசகர்களே உங்களுக்கும் கேட்டதா?

- எஸ்.எல்.எம். ஹனீபா

நன்றி - நூலகத்திட்டம்



# வித்துவான்களின் வித்தகங்கள்!?

இலங்கையில் கொழும்பிலிருந்து மூன்று தினசரிப் பத்திரிகைகளும் யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு தினசரிப் பத்திரிகைகளுமாக மொத்தம் ஐந்து தமிழ் மொழித் தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து 1985லிருந்து வெளிவரும் ஒரு தினசரிப் பத்திரிகை உதயன். தமிழ் இயக்கங்கள் கோலோச்சிய காலம்,பின்னர் இந்திய இராணுவ ஆட்சிக்காலம், பின்னர் விடுதலைப் புலிகளின் ஆட்சிக்காலம் தற்போது இலங்கை இராணுவத்தின் ஆட்சிக்காலம் என எல்லா ஆட்சியாளர்களினது நெருக்கடிகளின் கீழும் ஒரு தினசரிப் பத்திரிகை தனது கடமையைச் செய்வதென்பது இலகுவான ஒரு விடயமல்ல. அந்த வகையில் உதயனின் பணி பாராட்டத்தக்கது.

இதில் முன்பக்கத்தில் வரும் முச்சந்தி முரளியை யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். அந்த முச்சந்தி முரளி தரும் அரசியல் விமர்சனங்கள் நறுக்கானவை. நாசூக்கானவை.

அண்மைக் காலமாக உதயன் பத்திரிகையைப் புரட்டுகிற போது கடந்த இரண்டு தசாப்தங்களாக போராட்டம் நடந்து கொண்டிருக்கிற ஒரு தேசத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை தானா அது என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

அதே போல் இப்பத்திரிகையின் வார இதழாக வெளிவருவது சஞ்சீவி. பல அறிவியல் தகவல்களை தன்னோடு கொண்டு வரும் சஞ்சீவியில், இடம் பெறும் வித்துவான் பதில்கள் என்னும் கேள்வி பதில் பகுதி பற்றி இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான வாசகர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பத்திரிகையில் இப்படி ஒரு மோசமான பக்கம் தேவை தானா? அதுவும் யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் மக்கள் எவ்வளவோ இன்னல்களுக்கு மத்தியில் விரக்தியில் வாழ்ந்து கொண்டிருக்கையில், அவர்கள் பற்றியெல்லாம் அக்கறைப்படுவதற்கும் எழுதுவதற்கும் நிறையவே உள்ள போது, மிகவும் கீழ்த்தரமாக வக்கிரத்தை வளர்க்கும் இந்தப் பக்கம் தேவை தானா!

ஆண் வர்க்கத்தின் பாலியல் உணர்வின் வக்கிர ஊற்றெடுக்கும் மூளையில் இருந்து வெளிவரும் கேள்விகளும், அதற்கான பதில்களும் எப்படி இருக்கும் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அந்த வக்கிர ஆண் ஆதிக்க பாலியல் வெறியர்களின் சங்கமமாகவே வித்துவான் கேள்வி பதில் அமைந்து விடுகின்றது. ஒரு பத்திரிகையின் நிலைப்பாடு என்பது அதன் செய்திகளிலோ, கட்டுரைகளிலோ வெளிப்படுவதை விட அதன் வாசகர் கேள்வியின் தெரிவிலும், அதற்கான பதிலின் நாகரீகத்திலும் அதிகம் தங்கியுள்ளது. வித்துவானுடைய பதில்களை வெறுமனே வித்துவானுடைய அபிப்பிராயங்கள் என்றோ, சஞ்சீவியின் ஆசிரியர் குழுவினரது அபிப்பிராயங்கள் வேறானவை என்றோ கூறித் தப்பித்து விட முடியாது.

அனேகமாக உயர்தர வகுப்பு மாணவிகள் சில யாழ் தமிழ் பண்டிதர்களிடம் தமிழ் படிக்கப் போவதற்கே சங்கடப்படுவார்கள். காரணம் அவர்கள் வாயிலிருந்து வரும் இரட்டை அர்த்த வசனங்களும், கெக்கரிப்புகளும் தரும் அசிங்கத்தை விரும்பாததால். அதே போல் வித்துவான் பதில்களில் இடம் பெறும் கேள்வி பதில்களும் நாகரிகம் இல்லாது சங்கடத்தை ஏற்படுத்துகின்றது. சில கேள்விகளும் பதில்களும் இரட்டை அர்த்தம் தொனிக்கும் வக்கிர நாகரீக வளர்ப்பின் நோக்கம் தான் என்ன?

பெண்களை வெறும் தசைகளுக்குள் கட்டுப்படுத்தி கொச்சைப்படுத்தும் கேள்விகளும் அதற்கான பதில்களும் எதை உணர்த்துகின்றன? அதே நேரம் அவை எவ்வுணர்வை வளர்த்தெடுக்கப் பயன்படுகின்றன?

இதில் கேட்கப்படும் கேள்விகள் அனேகமானவை மாணவர்களாலும் அதே நேரம் சில பெண்களாலும் கேட்கப்படுகின்றது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. தினமுரசின் சிந்தியா பதில்களையும் விட மிகமோசமான முறையில் இது இருக்கிறது.

அதில் வெளிவந்த கேள்வி பதில்கள் சில.

(?) மது, மாது இரண்டிலும் போதையில் உசத்தி எது?
(!) இதற்கு வள்ளுவரே பதில் தந்து விட்டார். ஒன்று உள்ளெடுத்தால் தான் 'கிக்' ஏறும். மற்றது நினைத்தாலே 'கிக்' ஏறும்.

(?) பலருடன் பழகும் சினிமா நடிகைகள் குறித்து....!
(!) அழிந்து போன கொல்லையில் கழுதை மேய்ந்தால் என்ன? குதிரை மேய்ந்தால் என்ன? விட்டு விடுங்களேன்.

(?) விமர்சகனுக்கு அனுபவ அறிவு எங்கே தொடங்குகின்றது?
(!) தெரு ஓரத்தில் நின்று வீதி வழியே செல்லும் பெண்களுக்கு 'Marks' போடும் போதே ஆரம்பித்து விடுகின்றது.

(?) கலியாணம் கொண்டாட்டமா?
(!) வாழ்க்கை முழுவதும் கொண்டு + ஆட்டப் போவதை கைபிடிப்பது அப்போது தானே! ஆகவே அது




கொண்டாட்டம் தான்.

(?) கப் (cap) இல்லா 'பென்' (pen) உதவாது என்கின்றாரே என் ஆசிரியர்?
(!) 'கப்' இல்லாத 'பென்' மட்டுமல்ல 'கற்பு' இல்லாத 'பெண்' கூட அப்படித் தான்.

(?) வீதிகளில் சுழன்றாலும் கெட்டுப் போகாமல் இருக்கிறார்களே நம் பெண்கள்...!
(!) அவர்களின் பலர் இடவசதி இல்லாததால் பதிவிரதைகள்.

(?) இங்கும் 'மஸாஜ்' கிளினிக்குகள் உண்டா?
(!) அலுவலக, பாடசாலை நேரங்களில் இங்குள்ள மினி பஸ்களில் பயணம் செய்து பாரும் குறைந்த கட்டணத்தில் குளுகுளு (மன்னிக்கவும் சுடுசுடு) மஸாஜ் அனுபவம் கிடைக்கும்.

(?) மொனிக்கா லிவின்ஸ்கி நல்லவள் என்று சிலர் அடித்துக் கூறுகின்றார்களே?
(!)'அடித்துக்' கூறுவதாயின் அது கிளின்ரனாகத் தான் இருக்கும்.

(?) பெண்களின் மனசு ஆழம் என்கின்றார்களே உண்மையா?
(!) மனது மட்டுமா?

(?) எதிர் எதிராக விளையாடும் இருவரில் எவரும் வெல்லாமல் எவரும் தோற்காமல் முடிவடையக் கூடிய விளையாட்டு எது?
(!) அங்க விளையாட்டுத் தான்!
(நான் சதுர + அங்க (சதுரங்க) விளையாட்டைச்

## வித்துவான் பதில்கள்

சொன்னேன். அது தான் அடிக்கடி வெற்றி தோல்வியின்றி டிராவில் முடிவடைகின்றது.

(?) ஆணுக்குள் பெண் அடங்கலாமா? பெண்ணுக்குள் ஆண் அடங்கலாமா?
(!) (உள்) அடங்குபவர்கள் ஆண்களே!

(?) வயது வந்த பெண்களைப் பற்றி கவலைப்படும் பெற்றோர் வயது வந்த ஆண்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லையே ஏன்?
(!) ஏரால் உழுதால் அடையாளம் நிலத்தில் தான். ஏரில் இல்லை என்பதால்.

(?) வைவ் (wife) விற்கும், வைப்புக்கும் என்ன வித்தியாசம்?
(!) ஒன்று லைவ்விற்கு!
மற்றது வைப்புக்கு!

இப்படியான மோசமான கேள்வி பதில்களை யாழ் சமூகம் எவ்வாறு அங்கீகரிக்கின்றது என்பது ஆச்சரியப்பட வேண்டிய விடயமே? பெண் படி தாண்டுவதில் இருந்து அவள் உடை அலங்காரம் வரைக்கும் பல கேள்விகளையும் தூய்மைத் தனத்தையும் தூக்கிப் பிடிக்கும் யாழ் சமூக பெற்றோர்கள் எப்படி வித்துவான் பதில்களை அங்கீகரிக்கின்றார்கள். படித்த சமுதாயம் என்று தங்களை மார் தட்டிக் கொள்ளும் யாழ் சமூகத்தின் புத்திஜீவிகள் ஏன் இவற்றை கவனிக்காது விட்டார்கள். இப்படியான வக்கிரங்களின் பின்னால் அவர்களும் மறைந்து கொண்டார்களா? இவ்வளவு கீழ்த்தரமான பதில்களை எழுதும் பத்திரிகையை நோக்கி ஏன் கேள்விக் கணைகளைத் தொடுக்க முடியாமல் மௌனம் சாதிக்கின்றார்கள்?

உண்மையில் இது யாழ் இளம் தலைமுறையினரின் மூளையில் விசத்தை விதைக்கும் வேலை அல்லவா!

பெண்களை சக மனித ஜீவியாகப் பார்ப்பதற்கும், அவளது உணர்வுகளை மதிக்கவும், அவளோடு நட்போடு பழகவும் பழக்கப்படுத்த வேண்டிய இளம் தலைமுறையினரை, எவ்வளவு மோசமாக, பெண்களை வெறும் தசைப்பிண்டமாக்கும் கருத்தியலுக்குள் கொண்டு செல்கின்றது இக் கேள்வி பதில்கள்.

ஊடகம் என்பது ஒரு சமுதாயத்தின் போக்கைத் தீர்மானிப்பதற்கு இயலுமான கூரிய ஆயுதம். இதை உதயன் ஆசிரியர் குழுவினர் உணரவில்லையா? இல்லாது விட்டால் யாழ் சமூகம் நினைக்கின்ற, ஏற்கின்ற கருத்தியல் என்பது இது தானா? எதையும் தட்டிக் கேட்காமல் மௌனமாக இருக்க எதற்காக யாழ் சமூகம் பழகிக் கொண்டது?

அதன் மூலம் எதிர்வரும் சந்ததியினரிடம் எந்த நாகரீகத்தைக் கையளிக்கின்றனர் யாழ் பெற்றோர்களும் கல்விமான்களும்?

பெண்ணை உணர்வும், அறிவுமுள்ள ஒரு மனித ஜீவியாகப் பார்க்கத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்தச் சமூகம் நாகரீகமில்லாத முட்டாள் தனத்திற்குள் தன்னை ஆழ்த்திக் கொள்கின்றது என்பதன் அர்த்தமும் கூடவா இவர்களுக்குப் புரியவில்லை.

ஆக மொத்தத்தில் வித்துவான் கேள்வி பதிலின் தாற்பரியம் தான் என்ன? 'பெண் ஒரு தசைப்பிண்டம். அந்த தசைப்பிண்டத்தை ஆண் வீர்யத்தினால் ஆள்வது தான் உலக மகா உன்னதம். அதேநேரம் ஒரு மனைவியானவள் அல்லது பெண்ணானவள் பகலில் பத்தினியாகவும்(?) இரவில் வேசையாகவும்(?) இருக்க வேண்டும். இதுதான் அவள் இவ்வுலகிற்கு படைக்கப்பட்டதன் உன்னத நோக்கம்.' இளம் தலைமுறையினரிடமும் இந்தப் பழைய கதையைத் தான் வித்துவான் சொல்லி வைக்கின்றாரா?

ஒரு குழந்தைக்கு நாம் எதைக் கொடுக்கின்றோமோ அதன் விளைவே அக்குழந்தையில் தென்படும். வித்துவான் எதை ஊட்டி வளர்க்கின்றார்?

வக்கிரத்தை வளர்க்கும் இவை போன்ற கேள்வி பதில்களை நிறுத்தி ஆக்க பூர்வமாக ஏதாவது செய்யலாம் அல்லவா? இளம் தலைமுறையினரின் எவ்வளவோ பேசப்பட வேண்டிய பிரச்சினைகள் உள்ளன. அவற்றைப் பற்றி அக்கறை செலுத்தினால் என்ன? பக்கம் நிரப்புவதற்கு வக்கிர வித்துவான்கள் தான் கிடைத்தனரா உதயனுக்கு!

வெற்றிகரமாக பத்திரிகை இலாபத்தை கொண்டிருக்கின்றது என்பதை விட, இந்த சமூகத்திற்காக அப்பத்திரிகை என்ன செய்திருக்கிறது என்பதில் தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. அந்த வகையில் உதயன் வித்துவான் பதில்களினூடாக எதனைச் செய்து கொண்டிருக்கின்றது?

ஒரு பக்கத்தில் யாழ் சமூகத்தின் சீரழிவுப் பக்கம் பற்றிக் கூறிக் கொண்டு மற்றப் பக்கத்தில் அதையே வளர்த்தெடுப்பதைப் போன்ற ஒரு செய்கையே இதுவாகும்.

தங்களைத் தியாகம் செய்த பெண் போராளிகள் கூட பெண் உணர்வும், அறிவுமுள்ள ஒரு மனித ஜீவியாகப் பார்க்கப்பட முடியாத ஒரு தேசத்திற்காகத் தங்களை அர்ப்பணித்திருப்பார்கள் என்று நாங்கள் நம்பவில்லை!

– ரமா

---

## 'ஏதிலிகள்'

மாநகரின் போதையில்
தன்னை மறந்து போன
தூரத்து நண்பருக்குச்
சொல்லுங்கள்!
நாங்கள்
மரணிக்கவில்லையென்று!
'ஏதிலிகளாய்'
நம் வாழ்க்கை தொடர்கிறதென்று!

நாங்கள்
இப்படியே இங்கு
இற்றுவிடக் கூடும்
இந்த நாடோடி வாழ்வின் முடிவில்
எல்லாமும் அற்றுப் போகக் கூடும்
ஒடுங்கிப் போன தேசத்தில்
தனித்துப் போன தீவுகள்....!
போரின் கனத்தகுரல்
இன்னமும் தொடர்கிறது
பயண மூட்டைகளுடன்
அக(எ)தியாய்
நகரும் மனிதர்கள்
முடிவற்ற பயணம்!

நள்ளிரவு
மழையில்... வெள்ளத்தில்
குளித்தபடி
துணிமறைப்பில் வயல் நீரருந்தி
குடை வழிந்த மழை நீரருந்தி
பயணம்!
கூக்குரல்களிடையே
தூரத்து விடிவெள்ளியின் கவனத்தில்
அடியெடுத்தோம்.

ஊரின் எல்லையில்
நாதியற்றுப் போன சடலங்கள்!

தாயகம்
நம் காலடிகளின் கீழே
நழுவிக் கொண்டிருந்தது.

நேராய்......
நெடுந்தூரம் தொலையும்
பாதையின் இருமருங்கும்
பசுமை!
கழியும் இரவுகளில்
வீதியோரக்குடித்தனங்கள்
நினைவிலுறுத்தும்.
கடற்கரை விளிம்பில்
அலைகளின் சலனத்தில்
உணர்வழிந்த மனிதர்கள்!
பொந்துறையும் சிறுநண்டுகள்
எதிர்பாரா எதிர்காலங்கள்!

ஓலைக்குடிலில்
தெருவோர ஜீவிதத்தில்
மறுகி எனைப் பார்த்து
நாணும் இளைஞன்
அவனிடம் சொல்லுங்கள்
நானும் அகதிதானென்று!
எனக்காகவும்
இ(எ)ந்த தேசத்தின் தெருவோரம்(மோ)
காத்துக் கிடக்கிறதென்று!

வடலி மறைப்பிலும்
தென்னோலைச் சருகிலும் வாழ்க்கை (!?)

மரக்கிளைத் தூளியில்
அலறும் குழந்தைகள்!

வயலோர வரம்புகளிலும்
மதகுகளின் விளிம்பிலும்
'அவமான' பொழுதுகளுடன்
நாங்கள்!

இன்றென் நரம்புகளின்
அதிர்வில்
வாழ்வு பற்றிய
எந்தவித எதிர்பார்ப்புகளுமில்லை!
என் வீடு என் தேசம்
என்ற உணர்வுகளுமில்லை!

இன்னமும் மனிதர்கள்
தங்கள்
சொத்துகளின் விஸ்தீரணம் பற்றி
கணக்குப் போடுகிறார்கள்
கதைத்துக் கொள்கிறார்கள்.

– சுட்டி

நன்றி - நூலகத்திட்டம்



கருணாகரனின்

# ஒரு பொழுதுக்காய் காத்திருத்தல்

## கவிதைத் தொகுதி

கருணாகரனின் 'ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்' கவிதை தொகுதி அவருடைய முதல் தொகுப்பாகவும் அவர் எழுதத் தொடங்கிய காலத்திலிருந்து நீண்ட இடைவெளி கொண்டதாகவும் வெளிவந்திருக்கிறது.

பொருளாதாரத் தடை, இடப்பெயர்வுகள் கூரைமடிப்புகளில் தூங்கிக்கொண்டிருக்கும் யுத்தத்தின் கொடூரம் இவற்றையெல்லாம் ஊடறுத்து நவீன அச்சுசாதனங்கள் மறுக்கப்பட்ட நிலையிலும் பழுப்பேறிய அச்சுத் (News Printed) தாளில் அழகிய முகப்பு ஓவியத்துடன், நாம் எல்லோரும் 'சுதந்திரமான ஒரு பொழுதுக்கு காத்திருத்தலை' ஞாபகப்படுத்திக் கொண்டு கருணாகரனின் 'ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்' வெளியாகி இருப்பது இன்றைய காலத்தின் மிக முக்கியமான பதிவு என்பது தவிர்க்க முடியாத உண்மை.

எண்பதுகளிலிருந்து ஆரம்பித்து இன்றுவரை அவர் எழுதிய கவிதைகளின் ஒரு பகுதியாக இத்தொகுப்பிலுள்ளவற்றைக் கொள்ளலாம். எனினும், இத்தொகுப்பிலுள்ள அநேகமான கவிதைகள் 90களின் பின் எழுதப்பட்டவையாக அல்லது பிரசுரமானவையாகவே இருக்கின்றன. கவிதைகள் கால ஒழுங்கில் தொகுக்கப்படவில்லை அல்லது காலம் குறிப்பிடப்படவில்லை என்ற போதும், இந்தக் காலப்பகுதிகளில் வெளிவந்த சஞ்சிகைகளில் படித்தபோது கவனங்கொள்ள முடியாத பல விடயங்களை தொகுப்பின் பின் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

கவிதைகளின் ஒரே தன்மையும் படிமங்களும் ஒரே விதமான செல்வழியும்.

இதற்கு இக்கவிதைகளை எழுதத்தூண்டிய காலமும் காரணமாயிருக்கிறது.

யுத்தம், சாவு, மரணபீதி, பிரிவு, இருப்பு பெயர்த்தெடுக்கப்பட்ட துயரம். கவிஞனுக்கு வாய்த்த அல்லது நிர்ப்பந்திக்கப்பட்ட அரசியல்.


கவிதைகளின் சொல்லும் முறையிலும் தன்மைகளிலும் ஒரே விதமான அனுபவங்கள் குறியீடுகளிலும் படிமங்களிலும் மொழியில் ஒரு விதமரபுத்தன்மை இவற்றிலிருந்து மீளமுடியாமைதான் இன்றைய வாசகனின் வாசிப்புத் தன்மையிலும் எழுத்துமுறைமையிலும் கோட்பாட்டுத்தனமும் யாந்திரீகத் தன்மையும் புரையோடிப்போயுள்ளதற்கு காரணமாயிருக்க முடியும்.

இன்னொன்று, கவிதை எழுத உந்தும் நிகழ்வுகளுக்கு - உணர்தல்கள் நேரடியாக முகங் கொடுக்காமல் மூன்றாந்தரப்பின் மூலம் அதாவது சம்பவங்கள் செய்திகளை ஊடகங்களின் மூலம் - கேட்டல் அல்லது பார்த்தல் மூலம் - ஒருவித மங்கிய உணர்வு நிலையை எய்துதல் அனேக பொழுதுகளில் நடந்தவற்றிற்கும் தனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதான போக்கில் படைப்பில் இருந்து விலகி நின்று படைப்பாக்கத்தில் ஈடுபடுதல் போன்றவையும் படைப்பாளர்களை - குறிப்பாக கவிஞர்களையும் வாசகனையும் ஒருவரிலிருந்து ஒருவரை நெருங்கவிடாமல் அந்நியப்படுத்தி விடுகிறது.

இந்தத் தளைகளை எப்போது அறுப்பது! அல்லது எதிலிருந்து மிக அவசியமானதும் உடனடித் தேவையானதுமான இத்தளையறுப்புக்களால் தான் இற்றுக் கொண்டிருக்கும் கவிதையின் ஜீவனை தழைக்கச் செய்யலாம், என்றாலும் போரும் "போரின் முகங்களும்" கட்சிகளின் அரசியலும் இதனைச் சாத்தியங் கொள்ள வைக்குமா?

யாரை ஏற்றுக் கொள்வது அல்லது யாரை நிராகரிப்பது என்பதான மிகக்கீழான பார்வைகள் ஒவ்வொரு படைப்பாளரின் படைப்பினூடாகவும் வெளித்தெரிய வேண்டிய அவசியம் படைப்பாளருக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

அரசியலற்ற இலக்கியமோ வாழ்வோ இன்றளவில் சாத்தியமில்லைத் தான் என்றாலும் கவிஞர்களுடையது அரசியல்வாதிகளினுடைய வேலை அல்லவே. கோசமிடுவதும், கொள்கைப் பிரகடனம் செய்வதும் இலக்கியத்தை அதன் செல்வழியிலிருந்து திசை மாற்றி விடும். ஒரு பொழுதுக்கு காத்திருத்தல்' தொகுப்பிலும் இடையிடையே இந்த அபாயம் நிகழ்ந்திருப்பது தேவையின் பாற்பட்டதா?



ஒது பொழுதுக்காகக் காத்திருத்தல்

**நாலாசிரியர் : கருணாகரன்**

**விலை : ரூபா 70.00**

**வெளியீடு : மகிழ்**

**இல:- 469, அக்கராயன் குளம், கிளிநொச்சி**

கவசவண்டிகளுக்குக் கீழே நசியுண்டு சிதையும் ஒருவன் பைகளில் ரோஜாச் செடிகளைச் செருகி வைத்திருப்பது பற்றி எழுத முடியாது தான். எனினும், இரத்தமும் தசையுமான இழுத்துப் போடுவது கவிதையாய் இருக்க முடியாது.

மாறாக,

நிலவு பெருகும் இந்தப் பௌர்ணமி  
நாளில்  
ஜயதிலக  
இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும்  
அரச விளம்பரத்தைப் படித்துக்  
கொண்டிருக்கிறான்

*(ஞானம் கலைந்த பூமி - பக் -15)*

இடைவிடாது இரண்டு ஹெலிகளும் சுட்டுத்  
தள்ளின  
ஒரு கனவு போல  
அல்லது விறுவிறுப்பான  
ஆங்கிலப்பட வர்ணணை போல  
இவை உமக்குத் தோன்றும்  
ஆனால், அது நடந்து விட்டது  
எங்கள் தலைகளின் மேலே  
ஹெலிகள் சுற்றவும்  
இரண்டிரண்டாக அணிவகுத்து  
குண்டுவீச்சு விமானங்கள்  
பீதியூட்டும் கிறீச்சிடலுடன் வட்டமிட்டன-'

*(சுருநிழல் - பக்.48)*

'வனத்தின் ஆழத்தில்  
புலியின் கண்கள் மின்னுகின்றன  
கெமுனுவே, எச்சரிக்கை  
நரமாமிசம் மணக்கிறது உன்னில்  
எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும்  
குருதி சிந்தும் வழிகளும்  
நாறித்தொங்குகின்றன.

..................  
கெமுனு!  
திரும்பு  
வனத்தின் ஆழத்துள் சிக்காதே  
புலியின் கண்களைச் சீண்டாதே  
வேட்டை உனக்கு வேண்டாம்!  
உன்னுடைய குதிரைகளைக் காப்பாற்று

*(பாறையின் சிதைவு - பக். 71)*

என்பன போன்ற சம்பவ விபரிப்புகளாகவும் கோசங்களாகவும் மாறிவிடும் தொகுப்பிலிருக்கும் இப்படியான பல கவிதைகள் கருணாகரனின் இருபதுவருட கவிதை ஆழுமையில் பல கேள்விகளை எழுப்பிச் செல்கிறது.

இவ்வாறான கவிதைகள் சம்பவங்களை ஞாபகப்படுத்துகின்றனவே ஒழிய வாசக மனதில் கவிதா ரசனையை சிறிதளவேனும் தரவில்லை. உணர்வு மொழியிலிருந்து கவிதை நிராகரிக்கப்படும் போதெல்லாம் தவிர்க்க முடியாமல் சிறுகதைக்கான மொழியும் சித்திரங்களும் சொற்களும் கூடி விடுகின்றன அவரது கவிதைகளினூடே.

இருப்பினும்,

'மழையில் கரைகிறது இரவு  
சாம்பலைக்கழுவி  
இரத்தமாய் ஓடும் வெள்ளத்தில்  
மூழ்கிப் போயிற்று எனது முற்றம்.  
..................

காடுகளில் வாழ்க்கையை ஒழித்திருக்கும்  
குழந்தைகளும் பெண்களும்  
கலவரமுற்ற அமைதியில்  
உறைந்து போயிருக்கையில்  
சூரியனின் முகத்தின் முன்  
மன்றாடல்களையும் நிராகரித்துக்  
கொண்டனர்  
..................' என்றோ

*(1990 மார்கழி 25 - பக். 15)*

எனக்கு கவசங்களில்லை  
மனதில் அமைதியுமில்லை  
என் மனம் கழன்று விழுந்து  
என் சப்பாத்துக்களிலேயே நசிந்தது'

*(ஒரு படையினனின் நாட் குறிப்பிலிருந்து -பக் 39)*

என்ற கவிதையுடன்

'காற்றே  
நம்மைத் தூக்கிச் செல்  
வெளிக்களுக்கப்பாலே வீசிவிடு  
எல்லாத்தழும்புகளையும்  
அழித்து  
மீண்டும்  
மணலின் முகத்தில்  
உன் கவிதையை எழுதி விடு

*(காற்றின் மணல் முத்தம் - பக். 50)*

என்பதும்

'போய் விழுந்தாய்  
புகை மூடிய சிறு இடுக்கில் குடல் பெருத்து  
கலங்கலாய் விழித்திரை விரிய  
மாயக் கிழவியின் ஓவியம் பார்த்தாய்

..................  
கலங்கல் விழித்திரையினூடு ஊறி  
மெல்லப்பாய்கிறது உன் மனதில்  
மாயக்கிழவியின் ஓவியக் கவரச்சி

*(ப. - 55)*

என்பது போன்ற பல நல்ல கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருப்பது ஒரு விதத்தில் ஆறுதலையும் நம்பிக்கையையும் தருகிறது.

முடிவில்,

'போதிசத்வா  
மீந்திருக்கிறதே இன்னும்  
ஞானம் பெற வேண்டிய எல்லை'

*(ப. - 4)*

என்று முடியும் 'நீழல்' கவிதையுடன் 'ஒரு பொழுதுக்காகக் காத்திருத்தல்' பற்றிய இக்குறிப்பையும் முடித்துவிடலாம். இக்கவிதை யாருக்குச் சொல்லப்பட்டிருந்தாலும்.

**- போஸ்**

சில குறிப்புகள்

# 'யாத்ரா' கவிதை இதழ்




யாத்ரா நண்பர் இலக்கியக் குழுவினரால் அஷ்ரப் ஷிஹாப்தீனைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு கவிதைக்கென்று ஓர் இதழ் வெளிவந்துள்ளது.

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கைக்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து அ.யேசுராசாவினால் 'கவிதை' என்றொரு இதழ் கவிதைக்கென்றே வெளிவந்தது. ஈழப்போர் உக்கிரமடைந்ததின் பின் அந்த இதழின் வருகையும் நின்று போயிற்று. மிக அற்புதமான காத்திரமான கவிதைகளைத் தாங்கி வந்த அவ்விதழின் படைப்புத்தரம் மெச்சும்படியாயிருந்தது

இறக்காமம் ரோசான் ஏ.ஜிப்ரியை ஆசிரியராகக் கொண்டு பூந்தளிர் என்றறொரு கவிதை இதழ் கிழக்கிலிருந்து அச்சாகி ஓரிரு இதழ்களுடன் நின்றுபோனது. அவ்வாறே அக்குறணையிலிருந்து, ஊர்க்குருவி என்ற கவிதை இதழும் நின்று போனது. இதேகாலப்பகுதியில் 'எனவே இனி'யையும் குறிப்பிடலாம்.

காலத்திற்கு காலம் இன்னும் பல கவிதை இதழ்கள் வெளிவந்து வந்த வேகத்திலேயே உதிர்ந்து போயின.

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின், கவிதைகளுக்கென்று களமமைத்துத்தர 'யாத்ரா" வந்துள்ளது. இதற்கு முன் வெளிவந்த கவிதை இதழ்களின் ஆசிரியர் தலையங்கள் குறிப்பிட்டது போல் யாத்ராவும் உறுதியான வார்த்தைகளில் தைரியமூட்டியபடி கவிதைகளை அள்ளி வந்துள்ளது. ஆசிரியர்குழுவின் கவிதைத் தாகம் இடைவிடாது உழைப்பும் கவிதைகளுக்கென்று தொடர்ந்து யாத்ரா வரும் என்ற எதிர்ப்பார்ப்பை தருகின்றது.

யாத்ராவின் கவிதை நோக்கும் இலக்கும் எல்லாத்தரக் கவிதை ரசிகர்களையும் திருப்திப்படுத்த வேண்டும் என்பது போல் வசனகவிதை, மரபுக்கவிதையென அது தேர்ந்தெடுத்த கவிதைகளே சான்றாய் உள்ளன.

சில கவிதைகள் மிக அவசரமாய் எழுதப்பட்டது போல் உணர்ச்சியற்றும், வீச்சமற்றும் காணப்படுகின்றன. சில கவிஞர்கள் இன்னும் நகரம் எரியும்போது பிடில் வாசிக்கும் பழக்கத்தை விடாதவர்களாய் தொடர்ந்தும் தம்மை இனங்காட்டி வருவது புதிதல்ல.

இப்னு அஸுமத்தின் சிங்கள மொழிபெயர்ப்புக்கவிதைகள் இன்றின் வாழ்வோடு பேசும்படியான உயிர்க்கவிதைகளாய் உள்ளன. தவிர, கவிக்கோவின் வழக்கமான கவியரங்குக் கவிதையொன்றும் யாத்ராவில் இடம்பெற்றுள்ளது.

அன்பு ஜவஹர்ஷாவின் பேட்டியுடன், 'சங்கப்பலகை' என்றறொரு பக்கத்தை ஒதுக்கி பழம் பெரும் கவிஞர்களை, புதியவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் யாத்ரா தொடக்கி வைத்துள்ளது. முதல் இதழிலே கவிஞர் புரட்சிக்கமால் பற்றிய அறிமுக குறிப்பும், அவர் கவிதையொன்றும் பிரசுரமாகியுள்ளது. இதுவொரு பாராட்டத்தக்க முயற்சி. மரபின் வேர்களை புதுமைகள் அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பு இது. யாத்ராவின் கவிதை பற்றிய தேடலும் பரந்த வாசிப்பும், இன்னும் கனதியாகத் தொடருமாயின் நல்லதொரு கவிதைத்தளத்தை அதனால் நிச்சயம் தரமுடியுமென்பது திண்ணம். அந்தத் தேடலை நோக்கி நகர்வது போல் யத்ராவின் சில கவிதைகள் படிக்கும்போது ஆசுவாசப்படுத்துகின்றது.

**- சுஹறா**

# பொன்விழாக் கண்ட சிங்களச் சினிமா

பொன் விழாக் கண்ட சிங்களச் சினிமா.

**நாலாசிரியர் : தம்பிஜயா தேவதாஸ்.**

**விலை : ரூபா 200.00**

**வெளியீடு :**

**வித்தியாதீபம் பதிப்பகம்.**

**இலக்கம் 90 / 09, புதுச் செட்டித் தெரு,**

**கொழும்பு 01300.**




'பொன்விழாக் கண்ட சிங்களச் சினிமா' எனும் புத்தகம் அண்மையில் வானொலி அறிவிப்பாளரும், எழுத்தாளருமான தம்பிஜயா தேவதாஸ் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

சிங்களத் திரைப்படங்களின் ஆரம்ப கர்த்தாக்கள் தமிழர்களே என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுவதாக முன்னுரையில் கூறிக் கொண்ட எழுத்தாளர், படத்தயாரிப்பு, நெறியாள்கை, கதை, வசனம், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, இசையமைப்பு, ஒப்பனை, நடன அமைப்பு என்று பல்வேறு துறைகளில் தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் ஈடுபட்டனர், சாதனையும் புரிந்தனர் என்பதை இப்புத்தகத்தின் மூலம் வெளிக்காட்டியுள்ளார்.

அவர்களின் சாதனைகளை மட்டுமல்ல, சிங்களச் சினிமாவின் பல வெற்றிப் படங்களின் சாதனைகளைக் கூடத் தமிழ் பேசும் மக்கள் அறியாமலிருக்கின்றார்கள். அந்தத் தகவல்களை விபரிப்பதே இச்சிறிய நூல் என்று கூறிச் சிங்களச் சினிமாவின் சில முக்கிய கட்டங்களைப் புத்தகத்தில் சுருக்கமாகத் தந்துள்ளார்.

இப்புத்தகம் சிங்களச் சினிமாவின் முழுமையாகக் கொள்ள முடியாது விடினும், தகவல் தரும் இவ்-ஆரம்ப அறிமுகம் வரவேற்பிற்குரியதே.


இத்துடன் ஆரம்ப காலத்தில் இருந்து இந்திய சினிமாத் துறைக்கும், சிங்களச் சினிமாத் துறைக்குமான தொடர்பு பற்றியும் இப்புத்தகத்தின் தகவல்கள் விபரிப்பதாக உள்ளன. சிங்களச் சினிமாவின் வளர்ச்சியை இப்புத்தகத்தினூடே நீங்கள் தகவல்களாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அழகிய அட்டைப் படத்துடன் வெளி வந்திருக்கும் இந்த நூலைக் கலைஞர்கள் சிங்களச் சினிமாவின் வளர்ச்சி பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வாங்கி வைத்திருக்கலாம்.

**- ஆர்த்தி**

நன்றி - நூலகத்திட்டம்






## அதிபரே முறைகேடாக நடந்துள்ளார்!

சரிநிகர் பத்திரிகை இதழ் 191 (பெப் 24- மார்ச் 08, பக்கம் 2ல் வெளிவந்த செய்தியானது உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொண்டிருப்பதாக அறிந்த சம்பந்தப்பட்ட விவசாய பாட ஆசிரியர் என்ற முறையில் இக்கடிதத்தினை தங்களுக்கு எழுதுகிறேன்.

பாவற்குளம் கணேசுவரா மகா வித்தியாலயத்தில் விவசாயப் பாடச் செயன்முறைப் பரீட்சையில் க.பொ.த. (சா/த) - 1999ல் பாடசாலை அதிபர் முறைகேடான முறையில் நடந்துகொண்டுள்ளார் என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

சம்பவம் வருமாறு:-

1997ம் ஆண்டு முதல் தான் க.பொ.த. (சாதாரணதரத்தில் விவசாயப் பாடச்செயன்முறைப் பரீட்சை பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட வேண்டும் என்று அறிமுகம் செய்யப்பட்டது.

கணேசுவரா மகாவித்திலாயத்தில் 1998ம் ஆண்டு முதல் தடவையாக பரீட்சைத் திணைக்களத்தின் சுற்று நிருபத்தின்படி பரீட்சை ஒழுங்கான முறையில் நடத்தப்பட்டது. அதற்கான பதிவுகள் யாவும் பாடசாலையில் உள்ளன. அப்பரீட்சைக்கு மரியநாயகம், ஆசிரியர் (வ/ தமிழ் மகா வித்தியாலயம்), பத்மநாதன் ஆசிரியர் (விவசாய பாட ஆசிரிய ஆலோசகர்) ஆகியோருடன் சம்பந்தப்பட்ட விவசாயப்பாட ஆசிரியராகிய நானும் நின்று பரீட்சையை நடாத்தி புள்ளிகளை அனுப்பினோம். இவ்வாறு ஒழுங்கான முறையில் பரீட்சை (1998) நடைபெற்றது.

1999ம் ஆண்டில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் இப்பரீட்சை சம்பந்தமாக அனுப்பப்பட்டிருந்த (1999 க.பொ.த. சா/த) விவசாய செயன்முறை சுற்றுநிருபங்கள் அறிவித்தல்கள் எதனையும் எனக்குக் காட்டவும் இல்லை. அது சம்பந்தமாக எனக்கு ஒன்றும் அறிவிக்கவுமில்லை.

பின்னர் விவசாய மாணவர்களிடம் பரீட்சை வைக்கப்படாமலேயே அதிபர் இலங்கைப் பரீட்சைப் திணைக்களப் புள்ளித் தாட்களில் கையொப்பங்களை வாங்கினார்.

பின்னர் என்னிடம் விவசாய மாணவர்களின் பெயர்களுக்கு நேரே செயன்முறைப் பரீட்சை வைக்கப்படாமல் புள்ளிகளை சும்மா குத்து மதிப்பாக இடும்படி வற்புறுத்தினார்.

செயன்முறைப் பரீட்சை வைக்காமல் புள்ளிகளை இடமாட்டேன் என்று நான் அதிபருக்குக் கூறி அவருடைய முறைகேடான வேண்டுகோளை நிராகரித்து விட்டேன்.

நான் கூறுவதை அதிபர் புறக்கணித்து புள்ளிகளை குத்துமதிப்பாக இடும்படி மீண்டும் மீண்டும் வற்புறுத்தினார். தன்னை அவமதிப்பதாக ஏசினார். இதனால் அதிபருடன் வாக்குவாதப்பட வேண்டியேற்பட்டது. வாக்குவாதத்தின் பின்னர் 25.12.99அன்று பரீட்சை வைப்பதற்கு ஒப்புக்கொண்டார்.

பரீட்சை வைக்கப்படும் திகதி, மாணவர்களுக்குச் சரியான முறையில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிபரால் அறிவிக்கப்படவில்லை. இப்பரீட்சையில் நடந்த முறைகேடு காரணமாக பல மாணவர்கள் என்னிடம் வந்து தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். மாணவர்கள் ஏமாற்றப்பட்டதால் மனவேதனையும் அடைந்துள்ளனர். பல மாணவர்கள் 25.12.99 அன்று வைக்கப்பட்ட பரீட்சைக்கு தோற்ற முடியாமலும் போனது.

இதுதான் விவசாயப் பரீட்சையில் நடந்த சம்பவம்.

பாடசாலையின் நிர்வாகத்தில் பல சீர்கேடுகள் நடந்து கொண்டிருப்பதை அறிந்த மாணவர்கள், பெற்றோரின் துணையுடன் தான் அண்மையில் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். அதில் பல கோரிக்கைகளை முன்வைத்து தான் பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

அந்தக்கோரிக்கைகளில் விவசாயப் பாடத்தில் அதிபரால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடும் ஒன்று ஆகும்.

மற்றையது, விவசாயப் பாடத்தில் நடந்த முறைகேடு பற்றி சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வவுனியா கல்வித் திணைக்களம், மாகாணக்கல்வி அமைச்சு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் போன்றவற்றிற்கு அறிவிக்கப்பட்டது.

அடுத்ததாக எனது இடமாற்றம் சம்பந்தமாகக் கூறும் போது:-

நான் 15.09.99ல் வவுனியா கல்வித் திணைக்களத்தில் செட்டிக்குளக் கோட்டக்கல்வி அதிகாரி ஊடாக கோமரசன்குளம் சிரேஷ்ட பாடசாலைக்கு இடமாற்றம் கேட்டு விண்ணப்பம் கொடுத்திருந்தேன். அதற்கு பதிலாகத் தான் தற்போதைய மேற்படி பாடசாலை எனக்கு இடமாற்றமாகக் கிடைத்துள்ளது என்பதையும் உறுதியாக அறியத் தருகின்றேன். விவசாயப் பாடத்தில் நடந்த சம்பவத்துக்கும், இந்த இடமாற்றத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன். எனது இடமாற்றம் ஒரு சாதாரண வருடாந்த இடமாற்றம் ஆகும்.

வ/கணேஸ்வரா ம.வில் நடந்த பகிஷ்கரிப்பு பற்றி வீரகேசரி பத்திரிகையில் (19.02.2000) 9ம் பக்கத்திலும் செய்தி வெளியாகியுள்ளது.

எனவே தாங்கள் சம்பவ இடங்களுக்குச் சென்று (செய்தியாளர்கள்) சரியான தகவல்களைப் பெற்று பிரசுரிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சி.பாலச்சிந்திரன்

சிதம்பரபுரம்

## தொடரும் ஆனையிறவு.....

சாலைக்குக் கொண்டு செல்லும் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறினார்.

அன்றும் அதற்கு முதல்நாளும் நடந்த சண்டையில் இராணுவத்தினர் பரந்தன் பக்கமாக ஏழு முன்னணிக் காவலரண்களைப் புலிகளிடம் இழந்திருந்தனர். ஆனால் மதியத்திற்கு முன்னதாக அங்கு அனுப்பி வைக்கப்பட்ட மேலதிக படையினர் அவற்றை மீட்டெடுத்ததாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்மோதலில் இராணுவத்தினரின் கூற்றுப்படி இருபதுக்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டதாகவும், தமது தரப்பில் ஏழு இராணுவத்தினர் மாத்திரமே கொல்லப்பட்டதாகவும் இறந்த 14 புலிகளின் சடலங்களை தாம் அப்பகுதியில் கைப்பற்றியிருந்ததாகவும் அறிவித்தனர். அன்றிரவு புலிகளின் குரல் வானொலிச் செய்தியில் புலிகள் தரப்பில் ஒரு மேஜா உட்பட 22 போராளிகள்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

எது எப்படி இருப்பினும் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட படையினரைக் கொண்டமைந்த இப்படைமுகாமை தமது கடைசி மூச்சிருக்கும் வரை விடப்போவதில்லை எனக்கூறும் படைத்தரப்பு அதிகாரிகள், புலிகளின் பாரியளவு தாக்குதல்களை எல்லாம் துணிவுடன் நின்று எதிர்க்கும் படையினர் சிறந்த உயரிய மனோபலத்துடன் காணப்படுவதாகக் கூறியதுடன் புலிகள் தரப்பில் பாரிய இழப்புக்களையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், புலிகளைப் பொறுத்தவரை, இது மலைபோல் குவிந்துள்ள ஒரு படைமுகாமைச் சூழ்ந்து முற்றுகைப் போர் ஒன்றை நடாத்தி வருகின்றனர். முகாமின் கிழக்குப் பகுதியிலும், தென்பகுதியிலும் ஊடறுப்புத் தாக்குதல்களை நடாத்தி வெற்றிகரமாகச் சில முகாம்களைக் கைப்பற்றியுள்ளனர். ஆகவே இங்கு இராணுவத்தினர் ஒரு தற்காப்பு யுத்தத்திலும் (Defensive operation) புலிகள் தாக்கியளிக்கும் (Offinsive operation) யுத்தத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆகவே இங்கு நாளுக்குநாள் பெரும் நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இழப்பு என்பது ஒப்பீட்டளவில் இராணுவத்தினருக்கே அதிகம். இனிவரும் மாதங்களில்அதிக மோதல்களை ஆனையிறவுப் போர்க்களம் காண இருப்பதனையே அங்கு காணப்படும் கள நிலைமைகள் கட்டியம் கூறுகின்றன.

## விட்டுச் சென்ற விழுமியங்கள்.....

விடயங்களிலும் அவரே மிக்க தகுதிபெற்றிருந்தார் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், கட்சியின் சுலோகங்களும், வெகுசனங்களின் பேதைமையும் அவரின் வெற்றியை அபரித்துக்கொண்டன. (K.Kanagaratnam in S. Handy Peribabayagam - A Valedictory Tribute. Edited by S. Sivanayagam and S. Ratnapagasam, Ceylon Printers, Colombo, May 1960)

### தாராள மனப்பாங்கும் மாறுபடும் உரிமையும்

ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் வாழ்வையும் பணியையும் மதிப்பிடும்போது ஆசிரியராகவும், கல்வித்துறையாளராகவும் அவர் ஆற்றிய சேவையை இங்கு விவரிக்க நான் முற்படவில்லை. அந்த விடயத்தைப் பேராசிரியர் சந்திரசேகரம் அவர்களிடம் விட்டு விடுகிறேன். சிறுகுறிப்பொன்றை மட்டும் சொல்ல விழைகின்றேன். வாலிபர் காங்கிரசில் ஒரு காலத்தில் அங்கத்துவம் வகித்தவர்கள் பிற்காலத்தில் முற்றுமுழுதாக கல்வித்துறையில் பணியாற்றினார்கள். வட இலங்கை ஆசிரியர் சங்கம் (NPTA) அகில இலங்கை ஆசிரியர்கள் தொழிற் சங்கம் ஆகியவற்றின் பற்றுறுதி மிக்க உறுப்பினர்களாகவும் பங்குகொண்டார்கள். 1920 முதல் 1980 வரையான காலப்பகுதிலே யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பாகங்களிலும் ஒரு தாராள மனப்பான்மை நிலவியது. அந்த மரபைச் சார்ந்த பெரியார்கள் ஒவ்வொருவராக நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்கள். அந்த மரபு இன்று வரை இந்நாட்டிலும் உலகெங்கும் சிதறிப் பரவியுள்ள தமிழ் மக்கள் மத்தியிலும் இன்றும் நிலைத்து நிற்கின்றது. ஆயினும், அதிகமானோர் மேலாதிக்கம் மிக்க போக்குகளையும் சக்திகளையும் அனுசரித்து வாழும் இலகுவான வழியைப் பின்பற்ற முற்படுவதன் காரணமாக இந்த மரபு வலுவிழந்து வருகிறது. தாராள சிந்தனை, முரண்படுவதற்கான உரிமை ஆகிய பண்புகளுக்கு இடமளிப்பதான இந்த மரபு வாலிபர் காங்கிரசின் வரலாற்றில் வேரூன்றியதொன்றாகும். யாழ்ப்பாண மக்களின் கல்வித்துறைக்கும் பொது வாழ்க்கைக்கும் காங்கிரஸ் அளித்துள்ள அருஞ்செல்வம் அது. இடதுசாரி மார்க்சிய வாதிகள் இந்த மரபை மத்தியதர வர்க்க அரசியல் என்றும் கலாசாரம் என்றும் எள்ளி நகையாடினார்கள். ஆனாலும், சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததன் பின்னர் அவர்களும் இந்த மரபையே பின்பற்றத் தலைப்பட்டுள்ளார்கள்.

நினைவு மலருக்கு ஹன்டி பேரின்பநாயகத்தின் எழுத்துக்களையும் உரைகளையும் தெரிவு செய்ய முற்பட்ட ஒறேற்றர் சுப்பிரமணியம், ஏ. எஸ். கனகரத்தினம், என். சபாரத்தினம் ஆகியோர் மேற்சொன்ன விழுமியங்களையும், மரபையும் மனதிற் கொண்டிருந்தார்கள் என்று தோன்றுகிறது. இவை சிங்களத்திலும், தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிடப்பட வேண்டியவை. யாராவதொரு பரோபகாரி இந்த வேண்டுகோளை நிறைவேற்றுதல் வேண்டும். "பாடசாலைகள் யாருடையவை", "பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலைகள்", முதல் "ஜனநாயக ஆட்சியில் பத்திரிகைச் சுதந்திரம்" வரையாகப் பலதரப்பட்ட விடயங்களை அவர் கையாண்டுள்ளார். அவரது எழுத்துகளிலும் பேச்சுகளிலும் உலகப் புகழ்பெற்ற காந்தி, ஜெயப்பிரகாஷ் நாராயணன், ஆனந்தக் குமாரசாமி தொடக்கம் பலரால் அறியப்படாத பிரமுகர்கள் வரை இடம் பெற்றிருக்கிறார்கள். நாட்டு நடப்புகளைப் பற்றியும், தலைவர்களைப் பற்றியும் அவர் தெரிவித்த கருத்துக்கள், கண்டனத் தொனி கொண்டனவாயினும், காழ்ப்புணர்வோ, வெறுப்புணர்வோ அவற்றில் தொனிக்கவில்லை. நகைச்சுவையுணர்வு இழையோடியிருப்பதைக் காணலாம். பாடசாலை நிர்வாகிகள், சமயத் தலைவர்கள் அடங்கலாக அரசியலிலும், சமூகத்திலும் பெரியமனிதர்களாக விளங்கியவர்களைச் சாட அவர் என்றும் தயங்கியதில்லை. அதே சமயத்தில் தமக்கு நெருங்கிய நண்பர்களாகவும் தமக்குச் சார்பான அரசின் கொள்கையுடையவர்களாகவும், விளங்கிய இடதுசாரித் தலைவர்களைக் கண்டிக்கவும், அவர் தயங்கியது கிடையாது. அவரது கருத்துக்கள் மனித நேயம், உலகப் பொதுமை ஆகிய பண்புகளைப் பிரதிபலிக்கும் நிரந்தர விழுமியங்களைப் பிரதிபலிப்பனவாகவே அமைந்தன. 1940களில் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் சிலோன் டீச்சர் என்ற சஞ்சிகைக்கும், கேசரிக்கும், 1960களில் வெளியான கோப்ரேற்றர் (Co - operator) என்ற ஏட்டுக்கும் கிரமமாகக் கட்டுரைகள் எழுதினார். தேசியப் பத்திரிகைகளிலும் அவ்வப்போது எழுதினார்.

எண்ணுதற்கும், எழுதுதற்குமான உரிமை என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைகளில் காணப்படும் பின்வரும் மேற்கோள் அவரது கருத்தைச் செம்மையாக வெளிப்படுத்துகிறது."சிந்தனைச் சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் சத்தியத்தின் வல்மையிலும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்ததைக் கண்டோம். சத்தியமே இறுதியில் வெல்லும்.

எமது போராட்டம் கடினமானதாய், அவலம் நிறைந்ததாய், முடிவற்றதாய் நீண்டு கொண்டே போகலாம். ஆனால், இன்றில்லாவிட்டாலும், நாளை சத்தியம் வெல்லும். சத்தியத்துக்காக வாழ்ந்து, சத்தியத்துக்காகப் போராடுவோர், சனக் கும்பல்கள், ஆட்சியாளர்கள் அல்லது சமயத் தலைவர்களுக்குத் தலைகுனிய மறுப்பவர்கள் எதிர்காலச் சந்ததியினர் தமக்கு நியாயம் வழங்குவார்கள் என்று நம்புவது வழக்கம்" (The Right to Think and Speak, The Ceylon Teacher -Journal of the ACUT Oct. 1953)

1920களிலும் 1930களிலும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குத் தம்மை அர்ப்பணித்திருந்தார். 1940களிலும் 1950 களிலும் போதனா மொழியாகத் தேசிய மொழிகளைப் பயன்படுத்துதல், இலவசக் கல்வி, ஆசிரியர்களின் உரிமைகள் போன்ற விவாதங்களில் தீவிரமாகப் பங்குகொண்டார். 1950களில் மொழிப் பிரச்சினை பத்திரிகைகளில், முக்கியமான இடத்தைப் பெற்று வந்த சமயத்திலே, 'சிங்களம் மட்டுமே' என்ற குரலுக்கு எதிராகத் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்பதை ஆணித்தரமாக, அயராது வலியுறுத்தி வந்தார். இதனை இரு தரப்பு அரசியல்வாதிகளையும் போல சந்தர்ப்பவாதமோ, உணர்ச்சியைக் கிளறும் ஆர்ப்பாட்டமோ அற்ற வகையில் தமக்கேயுரித்தான நிதான புத்தியுடனும், கண்ணியத்துடனும் மேற்கொண்டார். இதுதான் தருணம் என்று அரசியலிற் புகுந்து பாராளுமன்றத்தில் நுழைந்திருக்கலாம். 1960களிலும், 1970களிலும் பத்திரிகைச் சுதந்திரத்துக்காக வாதாடிய அவர் சட்ட நிர்ணய சபையில் அது தொடர்பான தமது கருத்துகளை முன்வைத்தார். அன்றைய அரசியலிலும், வாதப்பிரதிவாதங்களிலும் இவ்வாறு தாராள சிந்தனையுடன் நடந்துகொண்டமை, பிறரின் கருத்துக்களோடு முரண்பட்டும் அவற்றைக் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளாது மாற்று யோசனைகளை முன்வைத்தமை, மக்களின் அடிப்படை உரிமைகளையும், மனித உரிமைகளையும் இடையறாது நிலைநாட்டியமை ஆகிய பண்புகள் ஹன்டி பேரின்பநாயகமும், வாலிபர் காங்கிரசின் தலை முறையைச் சேர்ந்தவர்களும், எமக்கு விட்டுச் சென்றுள்ள அரும்பெரும் முதுசம் எனலாம். இவற்றைப் பேணிக்காத்தல் எம் கடமை. இந்த மரபை இன்று நாம் வலியுறுத்துகிறோம். எமது தந்தையர்களும், ஆசான்களுமாக விளங்கிய சந்ததியினருக்கு நாம் செய்யக்கூடிய பெரும் கைமாறும் அதுவே.

நல்லாசான், கல்வித்துறையாளர், சமூக சீர்திருத்தவாதி, அரசியல்ஞானி, ஒரு தலைமுறையினரை உருவாக்கி வழி நடத்திய மக்கள் தலைவன் இவ்வாறாக ஹன்டி பேரின்பநாயகம் அவர்களைக் கௌரவித்து, அவரை நினைவு கூரும் இவ் வேளையில், வாலிபர் காங்கிரஸ் சம்பந்தமான எனது ஆராய்ச்சி நூலிற் காணப்படும் சில கருத்துகளை இங்கு தொகுத்துரைக்க விழைகிறேன். ஹன்டி பேரின்பநாயகம் அவர்களினதும், வாலிபர் காங்கிரசினதும் சாதனைகள் கலாசாரத்துறையிலும், கல்வித்துறையிலும் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதிலும் மேற்கொண்ட பணிகளில் மண்டிக் கிடக்கின்றன. தமிழ் மொழிக்குச் சமுதாயத்திலே கௌரவமான ஓர் இடத்தை வழங்கும் முயற்சி 1920களிலேயே யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றுவிட்டது. இலக்கியத்துறை மட்டுமல்லாமல் பொதுவிடயங்கள், அரசியல் விடயங்கள் ஆகியன பற்றித் தமிழில் விரிவுரைகளும், கூட்டங்களும் நடத்தும் வழக்கம் வாலிபர் காங்கிரஸ் தொடக்கி வைத்ததொன்றாகும். யாழ்ப்பாண வாலிபர்கள் ஆங்கிலக் கல்வி கற்றவர்களாக விளங்கிய போதிலும், தேசியப் பழக்கவழக்கங்கள், திருவிழாக்கள், ஆடை அணிகள் ஆகியவற்றுக்குச் சமுதாயத்திலே மதிப்பான இடத்தை மீட்டுக் கொடுத்தார்கள். சாதியமைப்பில் நிலவிய அநீதிகளும், அவமானங்களும் முற்றாக அகற்றப்பட வேண்டுமென்று போராடியமை வாலிபர் காங்கிரசின் சாதனைகளின் பிரதானமானதொன்றாகும்.

எல்லாவற்றிற்கும் மேலாகப் புகழ் பூத்த ஆசிரியர்கள், பாடசாலைத் தலைவர்கள், நிர்வாகிகள், பாடசாலை ஸ்தாபகர்கள் என்றவாறாக ஒரு முழுத் தலைமுறையே வாலிபர் காங்கிரசிலிருந்து வெளிப்பட்டது. இந்த நூற்றாண்டின் நடுக்கூறில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாகவே கல்வித்துறையில் யாழ்ப்பாணம் முதன்மை ஸ்தானம் பெற முடிந்தது. அப் பாடசாலைகள் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, எந்த நாட்டுக்குமே பெருமை தேடித் தரக்க உயர் நிலையை எய்தின. தேசாபிமானத்தில் ஊறித்திழைத்த பற்றுறுதி மிக்க ஆசிரியர்களாக அவர்கள் விளங்கினார்கள். மாசு மறுவற்ற வெண்ணிறத் தேசிய உடையணிந்த அந்த ஆசிரியமணிகளை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற எந்தப் பெரிய வைபவங்களிலும் காணக்கூடியதாகவும், அவர்களின் உரைகளைக் கேட்கக் கூடியதாகவும் இருந்தது. யாழ்ப்பாண மக்களின் பொதுவாழ்க்கைக்குத் தனித்துவமான ஒரு சாயலை அவர்கள் உருவாக்கினார்கள். தமது காலத்தையும், ஆற்றல்களையும் அர்ப்பணித்து அயராது முயன்ற பொதுப்பணிகளை நேர்மைத் திறனுடனும், மனப்பூர்வமான பற்றுடனும் நிறைவேற்றினார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.

Registered as a Newspaper in Sri Lanka


## அரசு என்ன சொல்லப் போகின்றது?

சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் எமது நாட்டுக்கும் எப்போதும் எட்டாப் பொருத்தம் தான் போலும்.

இந்தா சமாதானம் வந்துவிட்டது என்பது போல எல்லாம் நடக்கும். சமாதானம் வந்தால் நாட்டில் நடக்கப்போகும் மாற்றங்கள் பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபடும் இரு தரப்பாரும் தமது கற்பனைகளை தட்டிவிட்டுக்கொண்டே பேசுவார்கள். பத்திரிகைகளும், பிற தொடர்பு சாதனங்களும் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுவது போல எழுதித் தள்ளிக் கொண்டே போகும்.

எல்லாம் சரி, சமாதானம் பிறப்பதற்கு நாள் குறிப்பதுதான் பாக்கி என்ற நிலை வரும்வரை எல்லாம் சரியாகத்தான் நடக்கும். அடுத்த கணம் திடீரென்று, வெண்ணை திரண்டு வருகையில் தாழி உடைந்தது போல, எல்லாமே உடைந்து போகும்.

உடைவதற்கு ஏதாவது சாக்குப் போக்காக ஒரு காரணம் கண்டு பிடிக்கப்பட்டு ஒருவர் மீது இன்னொருவர் குற்றம் சாட்டிக் கொள்வர்.

பிறகு என்றென்றைக்கும் இணக்கம் காண முடியாத பகைவர்களாக மாறி இருதரப்பும் யுத்தத்தில் இறங்கும்.

சமாதானத்தை ஆதரித்த பத்திரிகைகளும், பிற தொடர்பு சாதனங்களும், ஜனநாயக வாதிகளும் தம்முள் கட்சி பிரித்துக் கொண்டு மோதிக்கொள்கிற ஒரு நிலைமை தொடரும். இந்த நிலை நீண்ட நாள் நீடிக்க முடியாதது என்ற நிலைமை வரும். மீண்டும் சமாதானம் பற்றிய பேச்சுகள் தொடங்கும்.

திரும்பவும் பழையபடி.

இந்தச் சங்கிலி திரும்பத் திரும்ப சுழன்று சுழன்று கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் பல முறை நடந்தாகிவிட்டது.

ஆயுதம் ஏந்திய யுத்தம் தொடங்கிய பின் அது அடிக்கடி சுழலத் தொடங்கியுள்ளது.

இம்முறையும் அதே நிலை திரும்பவும் தோன்றியிருக்கிறதா என்று சந்தேகப்படும் படியாக நிலைமைகள் திடீர் திருப்பம் காணத் தொடங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சிற்கான கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்தை அழைத்து ஓராண்டுக்குப் பின்னும் அரசாங்கம் 'பழைய - ஆயுதத்தை கீழே போடு' என்ற நிலையில் இருந்து இறங்கி வரவில்லை.

பிறகு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேசுவது என்ற புலிகளின் நிலைப்பாட்டை ஏற்க முடியாது என்று அது கூறிவந்தது.

வேண்டுமானால், ஒரு ஒருங்கிணைப்பாளராக மூன்றாம் தரப்பு செயற்படலாம் என்று அமைச்சர் கதிர்காமர் பெரிய மனது வைத்து அறிவித்தார்.

ஏதோ, பிரச்சினை மூன்றாம் தரப்புக்குத்தான் இருக்கிறது. அதன் வலியால் அவர்கள் தான் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது போல.

ஆயினும், நோர்வே தான் மூன்றாம் தரப்பாக செயற்படத் தயார் என்று அறிவித்தது. பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் போது அமைச்சர் கதிர்காமர் மீண்டும் நோர்வேயின் ஸ்தானம் வெறும் ஒருங்கிணைப்பாளர் ஸ்தானம் மட்டுமே என்று அறிவித்தார்.

எப்படியோ ஒரு சந்திப்புக்கள் முடிந்து விட்ட நிலையில், நோர்வேக்கு இவ்வாறான முயற்சிகளில் உள்ள அனுபவம், நடுநிலைத் தன்மை போன்ற விடயங்களை அறிந்த பலதரப்புகளும் இதை ஒரு நல்ல தொடக்கமாக ஏற்றுக் கொண்டன.

இந்தியா கூட நம்பிக்கையுடன் அவதானித்து வருவதாகவே அறிவித்தது.

இந்தக் கட்டத்தில் தான் திரும்பவும் மகாநாயக்க தேரர்கள், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிகளை குறிப்பாக அரசாங்கத்தின் அரசியலமைப்பு யோசனைகளை எதிர்ப்பதாக அறிக்கை விட்டன. அவற்றை எதிர்க்கப் போவதாக மிரட்டத் தொடங்கின.

இனவாத அமைப்புகளும், பௌத்த மகாநாயக்கர்களும் இப்போது புதிய பிரச்சினை ஒன்றை கிளப்பியுள்ளார்கள்.

ஆம்! நோர்வே மூன்றாம் தரப்பாக இருக்கக் கூடாது. இந்தியாவே மூன்றாம் தரப்பாக இருக்க வேண்டும் என்பதே அந்தப் பிரச்சினை.

நோர்வே புலிகளுக்கு ஆதரவான ஒரு நாடு என்பது அவர்கள் இதற்குக் கூறும் காரணம்.

இந்தியா புலிகளுடன் வெறுப்புள்ள ஒரு நாடாக இருப்பதே, இப்போது இவர்களுக்கு இந்தியா ஒரு நல்ல - மூன்றாம்தரப்பு நாடாகக்கூடிய - நாடாக தோன்றுகிறது.

கடந்த காலங்கள் முழுவதும் மிகவும் மோசமான ஒரு எதிரி என்ற அளவுக்கு இந்த அமைப்புக்களால் கருதப்பட்ட இந்தியா இப்போது ஒரு ஜனநாயக நாடாக மாறிவிட்டது.

இந்த மத அமைப்புகட்கும் இனவாத சக்திகட்கும் உள்ள சக்தியும், இலங்கை அரசாங்கத்திற்கு அவர்கள் மீதுள்ள அச்சமும் அல்லது ஆதரவும் இந்தப் பிரச்சினை இம்முறையாவது தீர்க்கப்படும் வரை தொடருமா என்ற கேள்வியை எழுப்ப நியாயமான காரணங்களாக அமைகின்றன.

பிரச்சினையை தீர்ப்பதில் மத்தியஸ்தம் வகிக்கும் ஒரு நாடு புலிகளுடன் நல்லுறவை பேணாத அவர்களை எதிரிகளாக நினைக்கக் கூடிய ஒரு நாடாக இருக்க வேண்டும் என்பதே இந்த அமைப்புகளின் கருத்தாக உள்ளது. அதாவது பிரச்சினை எப்படியாவது புலிகளுக்கு எதிரான விதத்தில் அல்லது அவர்களை பலவீனப்படுத்துகிற விதத்தில் அமைய வேண்டும் என்பது தான் இவர்களது அக்கறை.

சமாதானம் பேச்சுவார்த்தை முயற்சியிலும், யுத்தத்தைப் போலவே புலிகளைத் தோற்கடிப்பது தான் நோக்கமாக அமைய வேண்டுமென்பது தான் இவர்களது நிலைப்பாடு.

இதனால் தான் சமாதானத்துக்கும் ஏமது நாட்டுக்கும் இடையில் எட்டாப் பொருத்தமோ என்றோம். சமாதானப் பேச்சு நல்லெண்ண அடிப்படையில், நல்லுறவை நோக்கமாக கொண்டு சமாதான இலக்கை அடையும் உறுதிப்பாட்டுடன் நடாத்தப்பட வேண்டியது.

அதற்கு, இன்னும் ஒரு சில பத்தாயிரம் உயிர்கள் பலியிடப்படுவது அவசியம் என்று இவர்கள் கருதுகிறார்கள் போலும்!

இனவாதிகளை விட்டுவிடுவோம். சரி, அரசாங்கம் என்ன சொல்லப் போகிறது?

## நீதிமன்றத்தை அவமதித்தாரா எஸ்.பி.

"எப்ரல்" மாதமளவில் இவ் வேலைத் திட்டத்தைப் பூர்த்தி செய்து விட்டு, மே மாதம் புதிய யாப்பினைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, நிறைவேற்றி, 2/3 பெரும்பான்மை கிடைக்காவிட்டால் பாராளுமன்றத்தைச் சிறிது காலத்திற்கு மூடிவிட்டு, யாப்பு சீர்திருத்தக் குழுவாகப் பாராளுமன்றத்தைக் கூட்டி, தேவையெனின் நீதிமன்றத்தையும் மூடிவிட்டு இந்தப் புதிய யாப்பைச் செயற்படுத்த எண்ணியுள்ளோம். இதுபற்றிச் சட்ட ரீதியான விவாதங்கள் இருக்கும். விவாதங்கள் எவ்வாறாயினும், நாம் இதனைச் செயற்படுத்தியே தீருவோம். ஏற்காத அரச நீதிவான்கள் இருப்பின் அவர்கள் வீட்டிற்குப் போகலாம்..... "

கடந்த 17ம் திகதி கட்டிட நிர்மாண நிறுவனத்தில் அமைச்சர் எஸ். பீ. திசாநாயக்க அவர்கள் ஆற்றிய சர்ச்சை மிகு உரையே மேலே தரப்பட்டுள்ளது.

நாட்டின் நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக உரையாற்றிய அமைச்சர், தற்போது நாட்டின் நீதித்துறையின் பலத்த விசனத்திற்காளாகியுள்ளார்.

கடந்த 17ம் திகதி, விழாவில் தலைமையேற்று அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை, கடந்த 27ம் திகதி சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னரேயே அமைச்சர் அவர்களின் கூற்று அம்பலத்துக்கு வந்தது.

இக் கூற்றுத் தொடர்பாக நீதிவான்கள் அனைவரும் கலந்துரையாடிப் பின்னர். பொருத்தமான நடவடிக்கையை எடுக்குமாறு கடந்த 29ம் திகதி சட்ட மா அதிபரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதன்படி அச் செய்தி தொடர்பாகச் சண்டே ரைம்ஸ் பத்திரிகை ஆசிரியரிடமும், அச் செய்தியை அறிக்கையிட்ட பத்திரிகையாளரிடமும் சத்தியக் கடதாசி பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. சத்தியக் கடதாசி பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் அமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசியலமைப்பின் 105(3) சரத்தின்படி நீதிமன்றத்தினை அவமதித்தால் 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடிய குற்றமாகும்.

நாட்டில் சட்டத்தரணிகளினதும், சட்ட வல்லுனர்களினதும் பலத்த விசனத்துக்குள்ளாகியிருக்கும் இவ் விடயம் தொடர்பாக ஜனாதிபதி அவர்களும், ஆளும் கட்சித் தரப்பினரும் மௌனம் சாதிப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அமைச்சர் தரப்பில், இக் கூற்று அவரது தனிப்பட்ட கூற்றாக அன்றிப் பொதுவான அரசைப் பிரதிநிதித்துவம் செய்யும் கூற்றாக இருந்துள்ளது. ஆனால் அமைச்சரோ தமது பேச்சுத் திரிபுபடுத்தப்பட்டு உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கெனவே, அமைச்சர் திசாநாயக்க அவர்கள், பொறுப்பற்ற உரைகளுக்கப் பெயர் போனவர். அத்துடன் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலின் போது, ஹங்குரங்கெத்த தொகுதியில் அமைச்சரின் பாதுகாவலுடன் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளும் பிரசித்தமானவையாகும். இது பற்றி ராவய பத்திரிகை ஆசிரியர், " அமைச்சர் அவர்களின் யோசனை சிறந்த யோசனையாகும். நாட்டிற்கு பாராளுமன்றமும், நீதித்துறையும் எதற்கு? இரண்டுக்கும் மூடுவிழா நடாத்தி விட்டு ஹங்குரங்கெத்த போன்ற ஆட்சியை மேற்கொள்ளலாம் " என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அமைச்சர்எஸ்.பி. ஜனாதிபதித் தேர்தலில் ஜனாததிபதி சந்திரிகாவின் வெற்றிக்கு உழைத்தவர் என்ற பெருமை பொ. ஐ. முவினரை இவ்விடயத்தில் மௌனம் சாதிக்க வைத்துள்ளது எனத் தெரிய வருகின்றது.

அமைச்சர் அவர்கள், நீதித்துறையிடம் மன்னிப்புக் கோரியுள்ள போதிலும், அவரது உரையின் ஒளி நாடா விசாரணைக்கென உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதினால். அமைச்சர் அவர்கள் இவ்விடயத்தில் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கப் போகின்றார் என்பது எதிர்வரும் வாரங்களில் தெரிந்துவிடும்.

இதேவேளை, அமைச்சரின் இந்தப் பேச்சு நீதித்துறைக்கும், ஜனநாயகத்திற்கும் பொ. ஐ. முவினால் விடப்பட்டுள்ள அச்சுறுத்தல் எனக் கூறி இதை எதிர்த்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்ஹ பம்பலப்பிட்டியில் வீதி மறியல் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தியுள்ளார்.

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகப் பாராளுமன்றத்தை இழுத்து மூடிச் சீல் வைத்து விட்டு, நீதிமன்றத்தையும் வேண்டுமானால் இயங்காமல் செய்து விட்டும் செயற்படத் தாம் தயார் என்று அமைச்சர் கூறியதுடன், அதை எதிர்க்கும் நீதிபதிகளைக் "கவனித்துக் கொள்ளவும் போவதாக" மிரட்டியுள்ளார். இந்த மிரட்டல், பாராளுமன்றத்தில் என்ன தான் அப்படி ஒன்றும் நடக்காது என்று பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் சப்பைக் கட்டுக் கட்டினாலும், பொ. ஐ. முவின் உள்ளார்ந்த குணத்தை தெளிவாகக் காட்டியுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## பெண் சிப்பாய்கள் மீது அதிகாரிகள் பாலியல் துஷ்பிரயோகம்!

யாழ்ப்பாணம், பலாலி, வசாவிளான் மற்றம் முன்னரங்க நிலையில் பாதுகாப்புச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் 5வது பெண்கள் படைப் பிரிவினர் தாம் அதிகளவு பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு முகங் கொடுத்து வருவதாக முறைப்பாடு செய்துள்ளது.

அவர்களின் கருத்தின்படி, அவர்களை நிர்வகிக்கும் இராணுவ அதிகாரிகள் பலர் இப் பெண்கள் மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது வரை அதிகளவான பெண் படையினர் இந்த நிலைக்கு உள்ளாகியுள்ளனர். தமது இச்சைகளுக்கு அடிபணியாதவர்கள் பல தரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரிய வருகின்றது. அடிக்கடி வேலைகளில் ஈடுபடுத்தப்படல், விடுப்புப் பெற்றுக் கொடுக்காமை என்பன இவற்றுள் அடங்கும்.

இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் பெண் படையினர் சிலர் தற்கொலை புரிந்தும் உள்ளனர். கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கர்ப்பிணியான ஒருவர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு மரணமடைந்துள்ளார். ஒவ்வொரு மாதமும் 03 - 4 பெண்கள், பாலியல் துஷ்பிரயோகங்களினால் கருவுற்று வருகின்றனர் எனத் தெரிய வருகின்றது. இவ்வாறு கருவுற்ற இருவர் தற்போது இராணுவ வைத்தியசாலையில் 10ம் இலக்க அறையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்கள் பற்றி இதுவரை ஒழுக்க நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை. மாறாக, பாதுகாப்பாக உறவு கொள்வது எப்படிப் போன்ற விடயங்கள் அதிகாரிகளினால் கற்பிக்கப்படுகின்றது. 02, 03 மாதங்களுக்கு முன்னர் இது பற்றிப் போதிக்கவெனப் பலாலி இராணுவ வைத்தியசாலை மருத்துவர் ஒருவர் சமூகமளித்திருந்ததாகவும் தெரிய வருகின்றது. அத்துடன் அப் பெண் மருத்துவர் விருப்பமின்றியே இந்த நிகழ்வில் கலந்து கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

## ஒரு அருமையான கண்டுபிடிப்பு!

மக்களால் மக்களுக்கு உருவாக்கப்பட்டதே கூட்டுறவு. எப்பவோ பாடசாலையில் கூட்டுறவு பற்றிப் படித்தபோது படித்த ஞாபகம். ஆனால், யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை மட்டும் இந்த வரைவிலக்கணத்திற்கு விதி விலக்கு. யாழ். மாவட்டத்தில் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் தற்போது அனுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு வருகின்றனர். இதனால் பல வறிய மக்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் அனுராதரம் சென்று சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்து தமது பிள்ளைகளுக்காக நீதிமன்றில் வாதாடுகின்றனர். யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு அனுராதபுரத்தில் விடுதலை செய்யப்பட்ட வயோதிபப் பெண் ஒருவர் (செல்லையா தவமணி தேவி) யாழ்ப்பாணம் வர முயடிாமல் திருகோணமலையைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளருடன் திருகோணமலை சென்று அவரது உதவியுடன் யாழ்ப்பாணம் மீண்டுள்ளார். இவரைப்பற்றிய செய்தி 98 டிசெம்பர் சரிநிகரிலும், 98 மே சரிநிகரிலும் இடம் பெற்றுள்ளது.

இவர்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமான செய்தி கிடைத்துள்ளது. யாழ்மாவட்டத்திலும் மேல் நீதிமன்றம் இயங்கவுள்ளது. யாழ். மாவட்டத்தில் மேல் நீதிமன்றம் இயங்கத் தொடங்கியதும், இவ்வழக்குகள் யாழ்ப்பாணத்திலேயே விசாரிக்கப்படும் என்பதே அந்தச் செய்தி. யாழ். மேல் நீதிமன்ற கட்டிடம் இராணுவ நடவடிக்கைகளால் முற்றாக சேதமடைந்தள்ளது. இதனால், யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மேல் நீதிமன்றம் தற்காலிமாக இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. வீரசிங்கம் மண்டபம் யாழ். மாவட்டக் கூட்டுறவு சபையின் நிர்வாகத்தில் உள்ளது. யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை வீரசிங்க மண்டபத்தில் நீதிமன்றம் இயங்குவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமாக நடைபெற்ற கூட்டுறவுச் சபை கூட்டத்தில் உதிர்ந்தவை: மேல் நீதிமன்றம் இயங்க ஆரம்பித்தால், முழுக்க பயங்கரவாதிகளும், கொலைகாரர்களும் தான் மன்றுக்கு வருவார்கள். அத்துடன் வீரசிங்கம் ம்ண்டபத்தின் நின்று கோட்டைக்கு ஷெல் அடித்தபடியால் தான் இராணுவம் வீரசிங்கம் மண்டபத்தின் மீது ஷெல் தாக்குதல் நடத்தியது.- இதனாலேயே எமது மண்டபம் சேதமடைந்துள்ளது. ஆகவே வீரசிங்க மண்டபத்தை நீதிமன்றம் இயங்கக் கொடுக்கத் தேவையில்லை.

ஆகா என்ன அருமையான கண்டுபிடிப்புகள். இராணுவத்திற்கும், சந்திரிகாவுக்கும் இதுவரை காலமும் இது தெரியாமல் போய்விட்டதே. யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை லேக் ஹவுசிற்கும், மற்றும் அரச சார்பு ஊடகங்களுக்கும் பயிற்சி வகுப்புகளை நடத்தினால் மிக மிக பொருத்தமாக இருக்கும் அல்லவா?